

புண் உமிழ் குருதி
புலவர் கா.

எழிலகம் வெளியீடு: எண்: 6
முதற் பதிப்பு: மார்ச்சு 1990
உரிமை ஆசிரியர்க்கு.

விலை: ரூ. 10-00

கிடைக்குமிடம்:
**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்**
T. T. K. சாலை,
ஆள்வார்பேட்டை, சென்னை-18.

அச்சிட்டோர்:
**கமலம் பிரஸ்,**
காஞ்சிபுரம்-631501.

# பதிப்புரை

சங்கத் தமிழ்நூல்கள் என்ற சிறப்பினுக்கு உரிய பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்-தொகை வரிசையுல் நடுவண் வைத்து மதிக்கப்பெறுவது எட்டுத்தொகை; அது, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் எட்டு நூல்களைக் கொண்டது. அவற்றுள் நான்காவதாகிய பதிற்றுப் பத்து, சேர, சோழ, பாண்டியர் என்ற தமிழ்நாடாண்ட மூவேந்தருள், முதற்கண் வைத்து மதிக்கத்தக்க சேரர்குலக் காவலர் பதின்மர் ஒவ்வொரு-வரையும், பத்துப் பத்துப் பாக்களால், தனித்தனியாகப் பத்து புலவர்கள் பாடிய நூறுபாக்களைக் கொண்ட பெருநூலாகும்; அவற்றுள் இரண்டாம் பத்தும், பத்தாம் பத்தும் காணுமற் போகக், கிடைத்திருப்பன எட்டுப் பத்துக்களே.

அவற்றுள் இரண்டாம்பத்தில், இமயவரம்பன் நெடுஞ்-சேரலாதனைக், குமட்டூர் கண்ணனாரும், மூன்றும் பத்தில், பல்யானைச் செல்கெழு குட்டுவனைப், பாலைக் கௌதமனாரும், நான்காம் பத்தில், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைக்-காப்பியாற்றுக் காப்பியனாரும், ஐந்தாம்பத்தில், செங், குட்டுவனைப் பரணரும், ஆறும்பத்தில், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக், காக்கைப் பாடினியார் நச்செள்ளையாரும், ஏழாம் பத்தில், செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலரும், எட்டாம் பத்தில், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை, அரிசில் கிழாரும், ஒன்பதாம் பத்தில், குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப், பெருங்குன்றூர் கிழாரும் பாடியுள்ளனர். கிடைத்துள்ள எட்டுப் பத்துக்களையும், **பத்துப் பாட்டு விளக்கம்** என்ற வரிசையில், ஒவ்வொரு

பத்திற்குமான விளக்கங்களைத் தனித்தனி நூலாக எழுதி வரிசைப் படுத்தியுள்ளோம்.

அவற்றுள், ஐந்தாம் பத்தின் விளக்கம், **பதிற்றுப் பத்து விளக்கம்; வரிசை ஒன்று; புண் உமிழ் குருதி** என்ற தலைப்பில் புலவர், கா. கோவிந்தன் அவர்களின் நூல், எம் வெளியீடாக வர ஒப்புதல் அளித்தமைக்குப், புலவர்க்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நிலையில், புலவர் அவர்களின் நூல்களுக்கு அளித்து வந்த ஆதரவினை, எம் வெளியீடாம் இந்நூலுக்கும் அளித்து, வெளியீட்டுத் துறையில், எம் கன்னி முயற்சிக்கு ஊக்கம் அளிக்க வேண்டுகிறோம்.

—பதிப்பகத்தார்

# முன்னுரை

தமிழ்மொழி இனிமை வாய்ந்தது. 'இனிமையால் இயன்ற இளமகளிர்' என்ற பொருள் பட வந்த "தமிழ் தழீஇய சாயலவர்" என்ற தொடரில் வரும் "தமிழ்" என்ற சொல்லே இனிமை எனும் பொருள் தருவதாகும் எனக்கூறித், தமிழ்மொழிக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளார் சீவக சிந்தாமணி என்னும் பெருங்காப்பியப் பேராசிரியர் திருத்தக்கதேவர்.

இனிய சொற்களைத் தேர்ந்து, இனிமையாகச் சொல்லாட விரும்பிய தமிழர், தாம் கூற விரும்பும் ஒவ்வொரு கருத்தும் இனிமையுடையவாதல் வேண்டும்; இனிக்கும் வகையில் உரைக்கப் பெறுதல் வேண்டும் எனவும் விரும்பினார்கள், அவ்வாறே உரைத்தும் வந்தார்கள்; செந்தமிழ் இலக்கி-யங்கள் அனைத்தும் இச்சிறப்புடையவாகும்.

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்றார் ஒரு பெரியார். தமிழர்வாக்கு இனிமை வாய்ந்தது என்றால், அவர் உள்ளமும், அவ்வுள்ளம் உந்த உளவாகும் அவர் செயல்பாடும் இனிமை வாய்ந்தனவே ஆகும். இது, உண்மை என்பதைப், பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும், படப்பிடிப்பினைக்காணும் வாய்ப்பினைப் பெற்றார் அனைவரும் உணர்வர்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம் பழம்பெரும் முதாதையர்தம் பண்பாட்டுப் பெருமையினை, இன்றைத் தமிழரும், பிறரும் அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்ற அவாவின் விளைவாக, அக்காலப் புலவர் பெருமக்கள், ஆயிரமாயிரம் பாக்களைப் பாடிச் சென்றார்கள். ஆனால், அவர்கள் பாடிச் சென்ற அப்பாக்களின் களஞ்சியத்தைக்,

காக்கத் தவறிவிட்டார்கள் விழிப்புணர்வு அற்ற சிலர் என்றாலும், நம் முதாதையருள் விழிப்புணர்வோடு இருந்தவர்கள், அழிந்தனபோக அழியா திருந்த அப்பழம் பாக்களை எல்லாம், அரிதின்முயன்று தேடிக் கொண்டார்கள்.

அவ்வாறு தேடிப் பெற்ற அப்பாக்களை ஊன்றிப் பயின்ற புலமைசால் பெரியார்கள் பலரும் ஒன்று கூடி இருந்தும், இப்பாக்களில் பொதிந்து கிடக்கும் பொருள்வளம், அப்பாக்களின் அடி அளவு ஆகியவற்றை, அளவுகோலாகக் கொண்டு, அப்பாக்களையெல்லாம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்ற தலைப்புக்களில் தொகுத்து நமக்கு அளித்துச் சென்றனர். அவ்வாறு தொகுக்கப் பெற்ற தொகை நூல்களில், இரண்டாவது வரிசையில் நிற்பதான எட்டுத்தொகை நூல்களில் இடம் பெற்றிருக்கும் பாக்களின் நலங்களை, நம்கால மக்களும் உணர்ந்து மகிழ வேண்டும் என்ற அவாவினால் உந்தப் பட்ட காரணத்தால் அவ்வரிசையுள், முதற்கண் வைத்துப் பெருமை செய்யப் பெற்றதான நற்றிணையினை, "நற்றிணை விருந்து" என்ற தலைப்பிலும், இரண்டாம் நிலைபெற்ற தாயினும், "நல்ல குறுந்தொகை" எனச்சிறக்கப் பெற்றதான குறுந்தொகையினைக், "குறுந்தொகைக் கோவை" என்ற தலைப்பிலும், ஆறுவது இடம் அளிக்கப் பெற்றதாயினும்' "கற்றறிந்தார் போற்றும் கலி" என்ற சிறப்பினைப் பெற்றதான கலித்தொகையினைப், "பாலைச் செல்வி", "குறிஞ்சிக்குமரி", "மருத நில மங்கை", "முல்லைக்கொடி", "நெற்தற் கன்னி" என்ற ஐந்து தலைப்புக்களிலும், முப்பது ஆண்டுகளுக்கு முன்பே விளக்கி வெளியிட்டேன்.

பழந்தமிழர் தொகுத்தளித்த வரிசையிலேயே அவ்வெட்டுத் தொகை நூல் விளக்கங்களையும் அளிக்க வேண்டும் என்

உள்ளம் விரும்பினும், சிலபல காரணங்களால், அவ் வரிசை வழிச் செல்ல இயலாமல் போய்விட்டது; இப்போது, அவ்வரிசையுள் நான்காவதாக நிற்பதும், ''ஒத்த பதிற்றுப் பத்து'' என்ற பாட்டினைப் பெற்றிருப்பதுமாகிய பதிற்றுப் பத்தின் விளக்கத்தினை அளிக்க எண்ணினேன்; ஒவ்வொரு தொகுப்பிலும் பத்துப் பத்துப் பாக்களைக்கொண்ட, பதிற்றுப் பத்தில், முதல் தொகுப்பும், பத்தாம் தொகுப்பும் கிடைத்தில; ஆகவே எஞ்சியுள்ள எட்டு தொகுப்புகளின் விளக்கங்களையே அளிக்க முடிந்தது. அவ்வாறு அளிக்கும் நிலையில், ஒவ்வொரு பத்திலும் உள்ள, பத்துப் பத்துப் பாக்களையும் பயின்று, ஒவ்வொரு பாவிலும், அப்பாவிற்குப் பெருமை சேர்க்கும் சிறுதொடரை, அப்பாட்டின் தலைப்பாகக் கொடுத்து பெருமை செய்துள்ளார்கள் நம் பண்டைத் தமிழ்ச்சான்றோர்.

அவ்வாறு அவர்கள் சூட்டியிருக்கும் பெயர்களில், ஒவ்வொரு பத்தின் விளக்கத்திற்கு, அப்பத்தின் முதற் பாட்டிற்குச் சூட்டியிருக்கும் பெயரையே, அப்பத்துப் பாட்டின் விளக்கத்திற்குப் பெயர் சூட்டும் முறையினைப் பின்பற்றி, இவ் விரண்டாம் பத்தின் விளக்கத்திற்குச் ''புண் உமிழ் குருதி'' என்ற பெயரைச் சூட்டியுள்ளேன். என் முன்னைய படைப்பு களுக்குத், தமிழகத்துப் பெரியார்களாகிய தாங்கள் காட்டிய பேரன்பையும், பாராட்டையும் இவ்வரிசைக்கும் வழங்கி, மேலும் தமிழ்ப்பணி ஆற்றும் துடிப்புணர்ச்சி, என் உள்ளத்தில் மீண்டும் துளிர்விடத், துணை நிற்க வேண்டுகின்றேன்.

கா. கோவிந்தன்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பாடிய புலவர் | 1 |
| பாட்டுடைத் தலைவன் | 3 |
| பாடற் பண்பு | 14 |
| பதிகம் | 20 |
| புண் உமிழ் குருதி | 21 |
| மறம் வீங்கு பல்புகழ் | 32 |
| பூத்த நெய்தல் | 41 |
| சான்ருேர் மெய்ம்மறை | 52 |
| குரைய வெள்ளம் | 60 |
| துயில் இனபாயல் | 71 |
| வலம்படு வியன்பனே | 79 |
| கூந்தல் விறலியர் | 84 |
| வளன்அறு பைதிரம் | 90 |
| அட்டு மலர் மார்பன் | 100 |

# பாடிய புலவர்
# குமட்டூர்க் கண்ணனார்

மாடமாளிகை அமைந்து ஒரு மாநகராய்க் காட்சி அளித்த ஓர் இடம், ஒரு சில ஆண்டுகள் கழித்து நோக்கிய போது, மண்மேடாகக் காட்சியளிப்பதும், மலையும், காடும் மண்டிக்கிடந்த ஓர் இடம், ஒரு சில ஆண்டுகளில் அழகிய நகராக ஆகிவிடுவதும், அன்றுதொட்டு இன்றுவரை நிகழும் உலகியல் முறையாகும். அதைப்போலவே, ஓரிடத்திற்கு ஒருகாலத்தில் இட்டபெயர், சில ஆண்டு கழிவதற்குள்ளாகச் சிதைந்து உருவு திரிந்து வேருகிவிடுவதும், உலகியல் நிகழ்ச்சியாம். உலகியல் அதுவாக, இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்னே இருந்த ஒரு மாநகர், இன்றும் அப்படியே இருக்கும் என்றோ, அப்படியே இருப்பதானாலும், அந்நகர்க்கு அன்று இட்டபெயர், இன்றும் இட்டது இட்டவாறே வழங்குகிறது என்றோ, கூறுவது இயலாது. ஆகவே, புலவர் கண்ணனார் பிறந்த குமட்டூரை, அறிந்துகொள்வது அத்துணை எளியசெயலன்று.

ஆந்திர நாட்டுக் குண்டூரை, ஒரு கல்வெட்டு, ''குமட்டூரு'' என்று கூறுகிறது. (A. R. 83 of 1917) புதுக்கோட்டைச் சித்தன்னவாசல் கல்வெட்டு ஒன்றில், ''யோமி நாட்டுக் குமட்டூர்'' என்ற தொடர் காணப்படுகிறது. (P. S. Ins. No. 1) அத்தொடரில்வரும் ''யோமிநாடு'' என்பது, திண்டிவனம், மதுராந்தகம் வட்டங்களைக் கொண்டதாய், சிறுபாணாற்றுப்படையால் சிறப்பிக்கப் பெறுவதாய, ஒய்மாநாடாகக் கருதுகின்றனர், சில கல்வெட்டு ஆராய்ச்சியாளர். அதற்கேற்ப, திண்டிவனத்திற்கு அணித்-

தாக "முட்டூர்" என்ற பெயருடைய, சிற்றூர் ஒன்று இருக்கிறது. ஆகவே, இம்முட்டூரே, சங்க காலத்து குமட்டூராகவும், கண்ணனாரின் பிறந்தஊராகவும் அமையும் எனல் ஒருவாறு பொருந்தும்.

குமட்டூர்க்கண்ணனார், இமயவரம்பனைப் பாடினார்; அவன் அளித்த உம்பற்காட்டு ஐந்நூறு ஊர்களும், தென்னாட்டு வருவாயில், முப்பத்தெட்டு ஆண்டு வரை, பாக உரிமையும் அவர்வாழத் துணைபுரிந்துவந்தன என்ற இவ்வளவே, அவர் வரலாறாக நாம் அறியத்தக்கன.

ஐந்நூறு ஊர்களைப் பிரமதாயமாகப்பெற்றார் என்பதால், அவர் அந்தணர் என்பது புலனாகும். கடற்கடம்பெறிந்து யானைமேல் அமர்ந்துவரும் இமயவரம்பனுக்குக், கடலிடை ஒளித்த சூரனும் மரத்தை, அழித்துப், பிணிமுக யானைமீது அமர்ந்து உலாவரும் முருகனையும், காக்கும் கடமை மேற்கொண்ட இமயவரம்பனுக்குக், காக்கும் கடவுளாம் திருமாலையும் உவமைகாட்டும் இயல்பால், கண்ணனாரின் கடவுட்கொள்கை, ஒருவாறு புலனாகவும் கூடும்.

# புண் உமிழ் குருதி

## பாட்டுடைத் தலைவன்
## இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

பாண்டவர் ஐவரும், கௌரவர் நூற்றுவரும் மேற்கொண்ட பாரதப்போர் முடியுங்காறும், இருதிறப் படை வீரர்க்கும், சோறு அளித்துப் பெருமை கொண்டான் ஒரு சேர வேந்தன். மாண்டு மறைந்துபோன தன்குலமுதல்வரின் நினைவாய், ஆண்டுதோறும் விழாக் கொண்டாடி வருவார்க் கெல்லாம் விருந்தளித்து மகிழ்ந்தான் மற்றொரு சேரவேந்தன். ஓரளவு பெயர் ஒற்றுமையோடு, பெருஞ்சோறு அளிக்கும் செயல் ஒருமைப்பாடும் இருப்பதால், இருவேந்தர்களையும் ஒரு வேந்தனாகவே கொண்டு, அவனுக்குப், பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் எனப் பெயர்சூட்டி, அவனை இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் தந்தையாகக் கொள்வர் சில வரலாற்று ஆசிரியர்.

பாண்டவர் ஐவரும், கௌரவர் நூற்றுவரும் மேற்கொண்ட பாரதப்போர் முடியுங்காறும் இருதிறப்படை வீரர்க்கும் சோறு அளித்துப் பெருமை கொண்ட சேரவேந்தன் செயலை,

"அலங்குளைப்புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக்கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம்பதின்மரும் பொருது களத்து ஒழிய
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

என முரஞ்சியூர் முடிநாகராயரும் (புறம் : 2)

"ஒரைவர் ஈரைம்பதின்மர் உடன்று எழுந்த போரில்
பெருஞ்சோறு போற்றுது தானளித்த சேரன்"

என இளங்கோவடிகளாரும், (சிலம்பு: 29 ஊசல்வரி) பாராட்டியுள்ளனர்.

இவர்களுள், முடிநாகராயர், தலைச்சங்கத்தைச் சேர்ந்தவராவர். இது, ''தலைச்சங்கம் இருந்தார், அகத்தியனாரும், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்று எறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத்து ஒன்பதின்மர் என்ப'' என்ற இறையனார் களவியல் உரையால் புலனாகிறது. முடிநாகராயர், தலைச்சங்கத்தைச் சேர்ந்தவராக, அதே செயலைப்பாராட்டும் இளங்கோவடிகளார், கடைச்சங்க காலத்துப் பிற்பகுதியில் வாழ்ந்தவராவர்.

முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய அப் புறநானூற்றுப்பாட்டில், பாரதப்போரில், பெருஞ்சோறு அளித்த பெருமைக்குரியோன் செயல்மட்டும் பாராட்டப் பட்டிருக்கிறதேயல்லாமல், அப்பெருமைக்கு உரியன் யாவன்? யாது அவன் பெயர்? யாது அவன் இனம்? என்பன குறித்து ஏதும் கூறப்படவில்லை.

அச்செயலைப் பாராட்டும் இளங்கோவடிகளாரும், அப்பெருமைக்கு உரியவன், சேரர் குலத்துவந்த ஒருவன், என்ற அளவிலேயே விளக்கம் அளித்துள்ளாரே ஒழிய, அவன் பெயர் யாது, என்பதை அறிவித்தாரல்லர்.

இந்நிலையில், முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய அப்புறநானூற்றுப்பாட்டின் அடியில், பிற்காலத்தே எழுதப்பட்டிருக்கும் கொளு, ''சேரமான் பெருஞ்சோற்று உதியன், சேரலாதனை, முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது'' என, அச்செயல் புரிந்தவன் ''பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்''

என, அவன், செயல், பெயர், குலம் ஆகிய மூன்றும் விளங்கக் கூறுகிறது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை ஈன்ற, பெருமைக்குரிய தந்தையின் பெயரைக் குறிப்பிடும், பதிற்றுப் பத்து இரண்டாம் பத்தின் பதிகம்,

''மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மான் நல்லினி ஈன்ற மகன்''

எனக் கூறுகிறது.

இதில், அவன் பெயர், உதியன்சேரல் என்ற அளவோடு நிற்கிறதே ஒழிய, பெருஞ்சோறு அளித்த பெருமைக்கு உரியவன், அவன்தானு என்பது குறித்து ஏதும் கூறவில்லை.

இவ்வாறு முடிநாகராயரின் புறநானூற்றுப்பாட்டும், இளங்கோவடிகளாரின் சிலப்பதிகார ஊசல்வரிப்பாட்டும், புறநானூற்றுப்பாட்டின் கொளுவும், அளிக்கும் சான்றுகளில், எந்த ஒரு சான்றும், பாரதப்போரில், பெருஞ்சோறு அளித்தவன், சேரமான் உதியன் சேரலாதன்தான் என்பதை அறுதியிட்டு உறுதிசெய்யும் வலிவுடையதல்லதாக இருக்கும் நிலையில், ''கோட்டம்பலத்துத்துஞ்சிய சேரமான்'' என்ற அச்சேரர்குலத்து வந்த புலவர், தாம் பாடிய அகநானூற்றுப்பாட்டு ஒன்றில் (168) ''மலைக்காட்டில் வயிறுஆர மேய்ந்து, அம்மலைக்காட்டு மரநிழலில் கிடந்து உறங்கி மகிழும், நல்ல ஆனிரைச்செல்வத்தால் சிறந்த, குழுமூர் என்னும் பெருநகரில், வருவார்க்கு வாரிவழங்குவதைத் தன்னுடைய பிறவிக் கடனுகக் கொண்டுவிட்ட, உதியன் என்பானின் அட்டில் சாலைக்கண், வேறுபாடின்றி வந்து, உண்டுசெல்வார் எழுப்பும்

பேரொலி, அம்மலைநாட்டு நீர்வீழ்ச்சிகள் எழுப்பும், இனிய ஒலிக்கு நிகராகும் எனக்கூறியுள்ளார்.

"பல்லான் குன்றில் படுநிழல் சேர்ந்த
நல்லான் பரப்பின் குழுமூர் ஆங்கண்,
கொடைக்கடன் ஏன்ற, கோடா நெஞ்சின்,
உதியன் அட்டில் போல, ஒலி எழுந்து
அருவி ஆர்க்கும் பெருவரை"

இதில், சோறு அளித்தவன், உதியன் என்று மட்டுமே கூறப்பட்டுளது. இப்பெருஞ்சோறு, பாரதப் பெரும்போரில் இரு-திறப் படைவீரர்களுக்கு அளித்த சோறு அன்று; மாறாக, பசித்து வந்து நிற்கும் பாணர், கூத்தர் போலும் இரவலர்க்கு அளித்த பெருஞ்சோறு; அளித்த இடமும் பாரதப்போர்க்களம் அன்று; மாறாக, பல்லான் குன்றை அடுத்த குழுமூர். ஆகவே, இதில் கூறப்பட்டிருக்கும், உதியன், பாரதப்பெரும் போரில், பெருஞ்சோறு அளித்த, உதியன்சேரலாதன் ஆகான். நிற்க,

தாம் பாடிய பாக்களில், வரலாற்றுக் குறிப்பு இடம்பெறாத பாட்டு, ஒன்றுகூட இல்லை; தமிழ்நாடாண்ட அரசர்களின் வரலாறுகளை மட்டுமல்லாமல், வேங்கடத்திற்கு அப்பாற்பட்ட நாடுகளை ஆண்ட அரசர்களின் வரலாறுகளையும் கூறியிருப்பவர்; தாம் வாழ்ந்த காலத்து அரசியல் நிகழ்ச்சிகளை மட்டுமல்லாமல், தம் காலத்திற்கு முற்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகளையும் கூறியிருப்பவர்; ஆகவே, பண்டைத் தமிழகத்தின் முதற்பெரும் வரலாற்றுப் பேராசிரியர் என்ற பெருமைக்குரியவர், புலவர் மாமூலனார். அவர், தன் நாட்டு எல்லைக்கு அப்பாற்பட்ட நாடுகளையெல்லாம் தனதாக்கிக் கொண்டு, நாட்டின் பரப்பளவை விரிவுபடுத்திக் கொண்டவ

னும், இறந்து துறக்கம் எய்திய தன்குல முன்னோர்க்காக, ஆண்டுதோறும் எடுக்கும் விழாவின்போது, வருவார் அனைவர்க்கும் பெருஞ்சோறு படைக்கும் பேருள்ளம் படைத்தவனும், உதியஞ்சேரல் எனும் பெயர் பெற்றவனுமாய ஒரு சேரமன்னனைப் பற்றி, அகநானூற்றுப் பாக்கள் இரண்டில் [அகம் : 65, 233] குறிப்பிட்டுள்ளார்.

"நாடுகண் அகற்றிய உதியஞ்சேரல்
பாடிச்சென்ற பரிசிலர்".
"துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியம் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை".

இமயம் முதல், குமரிவரையான பெருநிலப்பரப்பில், இறந்த காலத்தில் நடந்துவிட்ட நிகழ்ச்சிகளையும், அறிந்து-பாடும் இயல்புடைய மாமூலனார், உதியஞ்சேரல் அளிக்கும் பெருஞ்சோற்று விழாவைப், பாரதப் பெருஞ்சோற்று நிகழ்ச்சி-யோடு இணைத்துப் பாடவில்லை. அதுமட்டுமன்று; உதியஞ்-சேரல் அளித்தது, தன்குலமுன்னோர் நினைவுவிழாக் குறித்தது; என, முற்றிலும் வேறுபட்ட காரணமும் காட்டியுள்ளார். ஆகவே, மாமூலனார் பாடிய உதியஞ்சேரல், பாரதப்போரில் சோறு அளித்த சேரனாக இருத்தல் இயலாது.

செங்குட்டுவன், கண்ணகிக்குச் சிலை எடுத்துக் கொண்டாடிய விழாவிற்கு வந்திருந்த, இலங்கையர்கோன் கயவாகு, கி. பி. 177 - 199 ல் அரியணையில் இருந்தவன் என்கிறது, இலங்கையின் பழம்பெரும் வரலாற்று நூல் மகாவம்சம். ஆகவே செங்குட்டுவனும், அக்காலத்தவன் ஆதல் வேண்டும். செங்குட்டுவன் காலம் அதுவாகவே, அவன் தந்தை, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், அந்நெடுஞ்-

சேரலாதனின் தந்தை, எனப் பதிற்றுபத்து இரண்டாம்பத்தின் பதிகம் கூறும் உதியஞ்சேரலாதனும், முறையே இரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதியிலும், முதலாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் வாழ்ந்தவராதல் வேண்டும்.

பாரதப்போரில் பெருஞ்சோறு அளித்த சேரனைப்பாடிய, முரஞ்சியூர் முடிநாகராயர், தலைச்சங்க காலத்தைச் சேர்ந்த-வராவர்; ஆகவே அவரால் பாடப்பெற்ற, பாரதப்போரில் பெருஞ்சோறு அளித்த அச்சேரனும், அத் தலைச்சங்கத்தைச் சேர்ந்தவனே ஆதல் வேண்டும். அவ்வகையால், தலைச்சங்க காலத்தைச் சேர்ந்தவனுகிவிட்ட ஒருவன், கடைச்சங்க காலத்தைச் சேர்ந்தவனை, இமயவரம்பன் நெடுஞ்சேர-லாதனின் தந்தையாதல், ஒருபோதும் இயலாது. ஆகவே, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தந்தையாம் எனப், பதிற்றுப்பத்து இரண்டாம்பத்தின் பதிகம் கூறும் உதியஞ்-சேரல், பாரதப்போரில் பெருஞ்சோறு அளித்த உதியஞ்சேரல் ஆவன் எனல், அறவே பொருந்தாது. ஆகவே, மாமூலனா-ராலும், சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை என்ற சேரர்குலப் புலவராலும் பாடப் பெற்றனும், குழுமூரில் தம் முன்னேர் நினைவாக, ஆண்டுதோறும் பெஞ்சோறு வழங்குவோனும் ஆகிய உதியஞ்சேரலாதனே, இமயவரம்பன் தந்தை ஆவன்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு மனைவியர் இருவர்; ஒருத்தி, சோழர்குடி வந்தவள், மணக்கிள்ளி என்பவன் மகளாய், நற்சோணை எனும் பெயருடையாள்; கண்ணகிக்குக் கற்கோயில் கட்டிய காவலனும் செங்குட்டுவனும், காவியக்கோயில் கட்டிய துறவியாம் இளங்கோவடிகளாரும், இவள் வயிற்றில் பிறந்த, இமய-வரம்பன் மக்களாவர்.

"வடவர் உட்கும் வான்தோய் வல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேரலாதற்குச்
சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்
..........................................
கடல் பிறக்கு ஓட்டிய செங்குட்டுவன்"

எனப் பதிற்றுப்பத்து ஐந்தாம்பத்தின் பதிகமும்,

"குமரியொடு வடஇமயத்து ஒருமொழிவைத்து உலகாண்ட
சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன்,
கொங்கர் செங்களம் வேட்டுக், கங்கைப் பேரியாற்றுக் கரைபோகிய
செங்குட்டுவன்"

எனச் சிலப்பதிகாரம், வாழ்த்துக்காதை, உரைப்பாட்டு மடையும்,

"குணவாயில் கோட்டத்து அரசு துறந்திருந்த
குடக்கோச் சேரல் இளங்கோ அடிகள்"

எனச் சிலப்பதிகாரப் பதிகமும், அப்பதிகத்தின் உரை விளக்கமாக,

"குமரியொடு வடஇமயத்து ஒரு மொழிவைத்து உலகாண்ட சேரலாதற்குத், திகழொளி ஞாயிற்று ஏழ்பரி நெடுந்தேர்ச் சோழன்தன் மகள், நற்சோணை ஈன்ற மக்கள் இருவருள்.... அந்தமில் இன்பத்து அரசாள் உரிமை, இளையோற்கு உண்டென .... செங்குட்டுவன்தன் செல்லல்

நீங்கப், பகல்செல் வாயில் படியோர் தம்முன் அகலிடப் பாரம் அகல நீக்கிச், சிந்தை செல்லாச் சேணெடும் தூரத்து அந்தமில் இன்பத்து அரைசுஆள் வேந்தாயினன்'' என அடியார்க்கு நல்லார் அளிக்கும் உரையும் காண்க.

இமயவரம்பன் மற்றொரு மனைவி, வேளிர் குடியில் வந்தவள்; வேளாவிக்கோமான் பதுமன் என்பவன் மகள். இவ்விளையாள் வழியாகவும், இமயவரம்பனுக்கு, ஆண் மக்கள் பிறந்திருந்தனர்; களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்பது ஒருவன் பெயர். மற்றொருவன் பெயர் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்பது.

''ஆராத்திருவின் சேரலாதற்கு
வேளாவிக் கோமான்
பதுமன்தேவி ஈன்ற மகன்.;
களங்காய்க் கண்ணிநார்முடிச்சேரல்''
''குடக்கோ நெடுஞ்சேரலாதற்கு வேளள்
ஆவிக்கோமான் தேவி ஈன்ற மகன்
ஆடுகோட்பாட்டுச்சேரலாதன்''

என்பவரும், பதிற்றுப்பத்து, நான்கு, ஆறும் பத்துப் பதிகங்களைக்காண்க.

இவ்வாறு, மங்கலமும் நன்கலமும் விளங்க, மனையற வாழ்வால் மாண்புற்ற இமயவரம்பன், ஈடும் எடுப்பும் இல்லா வீரனுகவும் விளங்கினுன். தமிழகம் முழுவதையும், தன் ஒரு குடைக்கீழ்க்கொண்டு ஆண்டான். தமிழகத்தை வெற்றி கொண்ட பின்னர், அவன் பெரும்படை, இமயப் பெருமலை-காறும் உள்ள, வடநாட்டு ஆரிய அரசர்கள் அனைவரையும் வென்றது. தன் வடநாட்டு வெற்றி, இத் தாரணி உள்ளள

வும் மறவாதிருக்க வேண்டும் என விரும்பி, பனிதவழும் இமயப்பெருமலையில், தன்குல இலாஞ்சனையாகிய வில்லைப் பொறித்தான். அவ் வடநாட்டுப் போரில், வடவேந்தர்க்குத் துணையாய், தன்னோடு வந்து எதிர்த்த யவனர்களாம் வெளி நாட்டு வீரர்களைப், போர்க்கைதிகளாக்கி, அவர் கைகளைப் பின்புறமாகப் பிணித்து, அவர் தலையில் நெய்யை ஊற்றி இழிவு படுத்தினன்.

இவ்வாறு, வடபேரிமயம் முதல், தென்குமரிவரைப், பரவிய பெருநிலம் முழுவதையும் வெற்றிகொண்ட பின்னர், இமயவரம்பன் போர்க்குறி, கடம்பர் மீது சென்றது. கடலிடைத் தீவுகளை வாழிடமாகக்கொண்டு, தம் தீவுகளைக் கடந்து செல்லும் வாணிகப்பொருள் ஏற்றிய வங்கங்களை, வழிமடக்கிக் கொள்ளையிட்டுக் கொடுமை செய்து வந்தனர் அக்கடம்பர். அது பொருத இமயவரம்பன், தன் கடற்படைத் துணையால், அக்கடற்றீவினை அடைந்து, கடம்பரை வென்று அடக்கி, அவர் காவல் மரமாம் கடம்பமரத்தை அழித்துத் துண்டாக்கி, அம்மரத்துண்டால் முரசாக்கி முழக்கி மகிழ்ந்தான்.

போர் கொண்டுபோன இடங்களில், தோற்ற அரசர் கள்பால் இருந்த, நவமணிகள் இழைத்துப்பண்ணிய, அருவிலை நன்கலன்கள், வயிரமாலைகள் ஆகியவற்றை வாரிக் கொணர்ந்து, தன் அரசியல் பண்டாரத்தை நிரப்பி வைத்தான்; அம்மட்டோ; தன்னைப் பாடிப்பரவும் இரவலர் அனைவர்க்கும் வாரிக் கொடுத்தான். தன்னைப் பாடிய புலவர் பலராயினும், தன்னைப் பாராட்டப், பத்து பெரும்பாக்களைப் பாடியவரும், தன்னைத்தவிர்த்துப், 'பிறரைப்பாடி அறியாதவரும் ஆகிய, புலவர் குமட்டூர்க் கண்ணனார்க்குத், தனக்குரிய உம்பற் காட்டில் உள்ள, வளம்மிக்க ஐந்நூறு ஊர்களை வரிநீக்கி

வழங்கியதோடு, தென்னாட்டு வருவாயில் பாகம் பெறும் உரிமையை, முப்பத்தெட்டு ஆண்டுகளுக்கும் அளித்துப் பெருமை செய்துள்ளான்.

இமயவரம்பன், தன்மக்கள் நால்வருள், செங்குட்டுவன், இளங்கோ என்ற, இருவரோடு ஒருநாள் அரியணையில் இருந்த போது, அரசவை புகுந்த நிமித்திகன் ஒருவன், இளங்கோவின் உடலமைதியை ஊன்றி நோக்கிவிட்டு, அரசாள் உரிமை இளையோனுக்கே வாய்த்துளது என்றான். அதுகேட்ட மூத்தோன் முகப்பொலிவில் தோன்றிய மாறுதலைக்கண்ட இளங்கோ, மூத்தோன் இருக்க, இளையோன் கோலேந்துவது, செங்கோல் முறைக்கு முற்றிலும் முரணும்; மேலும் இந் நிமித்திகன் உரையையும் பொய்யாக்குதல் வேண்டும் என்று துணிந்த இளங்கோ, உலகப்பற்றை அன்றே துறந்து, இளங்கோ அடிகள், எனும் பெரும்பெயரோடு அரண்மனை விட்டுக் குணவாயிற்கோட்டத்துள் குடிபுகுந்தார்.

இவ்வாறு அரசியல் துறையில் அயர்ச்சி ஏற்பட்டிருக்கும் நிலையில், சோணாட்டில் புதிய உணர்ச்சியோடு பெருகிவரும் ஒரு பேரரசிற்குத், தலைமை பூண்ட வேற்பஃறடக்கைப் பெரு-விறற்கிள்ளி என்ற, கட்டிளங்காளையோடு போரிட நேர்ந்தது. அப்போரில் தன்னைப்பகைத்த அச்சோழப் பெருவீரனை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கொன்று வீழ்த்தி வெற்றி கொண்டான் என்றாலும், முதுமைத்தளர்ச்சியால், தானும் அக்களத்திலேயே உயிரிழந்து போனான்.

இமயவரம்பன், இவ்வாறு பீடும் பெருமையும் தோன்ற நாடாண்டிருந்தமையால் அவனைப் பெரும்புலவர்களாகிய பரணரும், மாமூலனாரும் பாடிப்பாராட்டியுள்ளார்கள்.

''ஆரியர் அலறத் தாக்கிப், பேரிசைத்
தொன்று முதிர் வடவரை, வணங்கு வில்பொறித்து
வெந்சினே வேந்தரைப் பிணித்தோன்''

இது பரணர் பாராட்டு (அகம்: 396)

''வலம்படு முரசின் சேரலாதன்
முந்நீர் ஒட்டிக் கடம்பறுத்து, இமயத்து
முன்னோர் மருள வணங்கு வில்பொறித்து''

''சால் பெரும் தானைச் சேரலாதன்
மால் கடல் ஒட்டிக் கடம்பறுத்து இயற்றிய
பண்ணமை முரசு''

இவை மாமூலனர் பாராட்டு (அகம்: 127 : 347)

# பாடற்பண்பு

இமயம் முதல் குமரிவரையான, ஒரு பெருநிலப்பரப்பின் தென்கோடிக் கண்ணதான, தமிழகமாகிய சிறிய நிலப்பரப்பில், அரசோச்சியிருந்த தமிழரசர்கள், வடக்கே இமயம், தெற்கே குமரி, கிழக்கிலும் மேற்கிலும் கடல்களை எல்லையாகக் கொண்ட, அப்பெரு நாட்டை, ஒரு குடையின்கீழ்க் கொண்டு வந்து, ஓர் அரசாணைசெல்ல ஆண்டுவந்த பெருமைக்குரியவர் என்பதற்கு, அரண்செய்யும் நல்ல சான்றுகளை அளிக்கிறது குமட்டூர்க் கண்ணனாரின் பதிற்றுப்பத்துப்பாக்கள்.

> " ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
> தென்னம் குமரியொடு ஆயிடை
> மன்மீக் கூறுநர் "

> " கடலக வரைப்பின் இப்பொழில் முழுது ஆண்ட நின்
> முன் திணை முதல்வர்'
>
> —பதிற்று: 11, 14.

அத்துணைப் பெரியநாட்டை ஆளவேண்டும் என்றால், அந்நாட்டின் எப்பகுதிக்கும், எந்நேரத்திலும் தேவைப்படும் நாற்படை, விரைந்து சேர்வது இன்றியமையாதது: அதற்குக் காடு காறு மலைமுகடு, மணல்திட்டுகளுக்கு இடையே, பெருவழி அமைக்கப்படவேண்டியது நனிமிக இன்றியமை யாதது என்பதனை உணர்ந்து, அது அமைக்கவல்ல நிலையான தூசிப்படையினை வகுத்துக்கொண்டிருந்த தமிழரசின், அரசியல் உணர்வுக்குச், சான்றுபகர்ந்து நிற்கிறது பதிற்றுப்பத்து.

''கொள்ளை வல்சிக் கவர்கால் கூடளியர்
கல்லுடை நெடுநெறி போழ்ந்து சுரன் அறுப்ப''
—பதிற்று: 19

காடுகொன்று நாடு ஆக்கிக், குளம்தொட்டு வளம்பெருக்க வேண்டியது நல்லரசின் கடமையாகும். பண்டு பாராண்ட சேரர் குலத்தவர், அது செய்து சிறப்புற்றவர் என்பதை அறிவிக்கும் பாடல்கள் பல, எடுத்துக்காட்டிற்கு ஒன்று.

பசும்புல் தலைகாட்டுவதல்லது, மக்கள் பசிபோக்கும் உணவுப்பொருள்விளையா வன்னிலம், ஒரு நாட்டின் வளத்திற்குத் துணைநிற்காது. அத்தகைய நிலமெல்லாம், வரப்புயர நீர் நிறைந்து, ஆரல் மீன் பிறழும் நஞ்செய்களாக, கலப்பையின் கொழுமுனை நுழையமாட்டாக் கல்லாங்குத்துக்களாக இருந்தவையெல்லாம், ஏர் ஓடவேண்டாதே கொல்லேறுகளின் கால்பட்ட அளவே, விதைப்பதற்குப் பக்குவப்பட்ட கொள்ளைப் புழுதியாகிவிடும் மென்னிலமாக மாறி மாண்புற்றுக்கிடந்தன. கால்நடைகள், பசி உறும்போதெல்லாம், கருப்பங்கழனிகளின் வரப்புகளில் விளைந்துகிடக்கும் நெய்தல், அக்கால்நடைகளின் வயிற்றை நிறைத்து, வேறு ஒன்றை உண்ணவேண்டும் என்ற நினைவே தலைதூக்காவாறு அக்கால்நடைகளைத் தடுத்துவிடுவதால், கழனிகளின் வானளாவ வளர்ந்து நிற்கும் செங்கரும்பு, அக்கால்நடைகளால் உண்ணப்படுவது இல்லை. கரும்புவிளைகழனிகளின் வரப்புகளுக்குச் சென்று, வயிற்றை நிரப்பிக்கொள்ளும் நிலை, இளமை நலம்கெடாக் காளைகளுக்கு மட்டுமே. தலைவளைந்து ஆட்டம் கொடுத்துவிட்ட முதியஆவினத்திற்கு, அந்நிலை இல்லை. அவை ஊர்மன்றை அடைந்தாலே போதும். ஆங்கு இடையறவுபடாது நிகழும், துணங்கை ஆட்டத்தில் கலந்து கொள்ளும் மகளிர் அணிந்து மகிழும், மாலைகளிலிருந்து,

அவர்கள் ஆட ஆட உதிர்ந்து குவியும், ஆம்பல் இதழ்கள் அவற்றின் வயிற்றை நிரப்பிவிடும்.

இத்தகு வளநலத்தால் நிலம்நல்கும் பயன் அளவை, முற்றிக் கதிர்காய்ந்து கிடக்கும் நெல்லின்தாள்கள், அறுவடை செய்வாரின் கைஅரிவாளின் கூரை மழுங்கச் செய்து விடு-மளவு, வளமாக வளர்ந்து மடிந்து வீழ்ந்துகிடக்கும் என்றும், கரும்பைப்பிழியும் இயந்திரங்களின், பிழிந்த கருப்பஞ் சாற்றை வெளிப்படுத்தும் பகுதியாம் பத்தல் வளைந்துபோ-மளவு, சாறு கொட்டுகொட்டு எனக் கொட்டும் என்றும் கூறுவதன், மூலம் விளக்கியுள்ள நயம், வியந்து பாராட்டற்கு உரியது.

''தொறுத்த வயல் ஆரல் பிறழ்நவும்,
ஏறு பொருத செறு, உழாது வித்துநவும்,
கரும்பின் பாத்திப், பூத்த நெய்தல்
இருங்கண் எருமையின் நிரை தடுக்குநவும்,
கலிகெழு துணங்கை ஆடிய மருங்கின்
வளைதலை முதுஆ, ஆம்பல் ஆர்நவும்''.

''நெல்லின் செறுவின் நெய்தல் பூப்ப,
அரிநர் கொய்வாள் மடங்க, அறைநர்
தீம்பிழி எந்திரம் பத்தல் வருந்த''.

—பதிற்றுப்பத்து 13, 19

இயற்கை வளம்பாடும் அப் பாக்கள், அந்நிலத்து விலங்குகளின் வியத்தகு வாழ்க்கை வனப்புகளையும், வகைப் படுத்திக் கூறியுள்ளன. தம் உடலின் ஒரு மயிரை இழக்க நேரினும் உயிர்விட்டுப்போகும் இயல்புடைய கவரிமான் கூட்டம், தம் உடல் மயிர் சிக்குண்டு, உதிர்ந்துபோகச்

செய்துவிடும் முள்முருக்க மரங்கள் செறிந்த காட்டகத்தே வாழும் நிலையிலும், அது நேரவும் கூடும், அல்லது கொல்புலி போலும் கொடுவிலங்குகளால் தம்உயிர் இழப்புநேரவும் கூடும் என்றஅச்சம், அறவே இல்லாமல், இரவில் கண்ணயர்ந்து உறங்குவதும், அவ்வுறக்கத்தினிடையே காணும் கனவு நிலையிலும், அவ்வச்ச உணர்வு கொள்ளாது, மாருக, நரந்தம் புல் மேய்வது, தெளிந்த அருவிநீர் பருகுவது போலும் இனிய காட்சிகளையேகாணும், இனிய வாழ்க்கை நலத்தை எடுத்துக் கூறியிருக்கும் நலம், நயத்திற்கு உரியது.

''கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி
பரந்திலங்கு அருவியொடு நரந்தம் கனவும்''
—பதிற்றுப்பத்து: 11

பிறந்தமயிர் உதிரப்பெருத இளமையும், இளமையால் தளர்ந்த நடையும் உடைய, அமையவேண்டிய உறுப்புநலனெல்லாம் அமையப்பெற்ற, சிறப்பு வாய்ந்த இளங்கன்று, மதநீர் நாற்றத்தால் வந்துமொய்த்து வருத்தும் வண்டுக் கூட்டத்தை ஓட்ட அறியாது வருந்த, கன்று வருந்துவது கண்டு, அது ஈன்ற பிடியும் வருந்தும் நிலையில், கொத்துக் கொத்தாக மலர்ந்து மணம் கமழும் காட்டு மல்லிகையாம் பூங்கொம்மை முறித்துக்கொண்டு, வண்டுக்கூட்டத்தை ஓட்டிக், கன்றின் துயரையும், கன்றீன்ற பிடியின்பெருந் துயரையும் ஒரு சேரப்போக்கித் துணைநிற்கும் களிற்றின் பெருமையினை, ஒருபாட்டின் சில வரிகளில் சிறக்கத் தீட்டியிருப்பது, சிந்தைக்கு விருந்தளிப்பதாகும்.

''கமழும் குளவி
வாடாப் பைம்மயிர், இளைய, ஆடுநடை

அண்ணல் மழகளிறு அரி ஞிமிறு ஒப்பும்
கன்றுபுணர் பிடி''. —பதிற்றுப்பத்து: 12

சேரநாட்டின் நிலங்கள் வளம் பெற்றுத் திகழ்வதற்கும், அந்நிலத்து வாழ்விலங்குகள், இன்னல்அறியா இனியவாழ்வு வாழ்வதற்கும், சேரவேந்தர்கள் செங்கோலர்களாகத் திகழ்ந்ததே காரணமாகும்.

காடு, கடவுளுக்கு நிகரான முனிவர்கள், தம்கடமையாம் தவவேள்விகளைத், தவருது மேற்கொண்டு வாழும் மாண்புடை-யதாகவும், நாடு, ஆடவரும், மகளிரும் அன்பால் பிணைப்புண்டு, இன்பவாழ்வு வாழும் இனிய நலமுடையதாக வும் விளங்குவது, ஆள்வோரின் ஆட்சி நலத்தால் என்றும், அரியணையில் வீற்றிருப்பாரின் ஆட்சிக்கோல், கொடுங்-கோலாகிவிடின், வானத்துக் கோள்கள் நிலைபெயர்ந்து போகி விடும். அவை நிலைகுலையின் மழை இல்லாகிப்போகும்; மழை இல்லாயின், மக்களும் மாண்பிழந்து போவர் என்றும் கூறுவர் ஆன்ருேர்.

''கோன்நிலை திரிந்திடின் கோன் நிலைதிரியும்;
கோள்நிலை திரிந்திடின் மாரி வறங்கூரும்;
மாரி வறங்கூரின் மன் உயிர் இல்லை''
—மணி: 7: 8-10.

''மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்று எனின் இன்ருல்''
—மணி 22 : 209 - 209

என்ற வரிகளைக் காண்க.

சேரமன்னர்கள் இந்நெறி உணர்ந்து, நாடாண்ட காரணத்தால், காடெல்லாம் கடவுள்நிகர் முனிவர்கள் வாழிடமாகவும், நாடெல்லாம் மகளிரும் அவர்தம் மணாளரும் மகிழ்ந்துறையும் மனைகளாகவும், அந்நாட்டுப் பெருவழிகளெல்லாம் அச்சமற்ற இன்பஉலகத்துப் படிகளாகவும், கூலம் முதலாம் பல்வேறு பொருள்களை வாங்கி விற்கும் வாணிகப்பெருமக்களையும், உணவுப்பொருள்களை உழைத்துக்குவிக்கும் உழவர் பெருமக்களையும் போற்றி வளர்த்தமையால், அவர் ஆட்சிக்காலத்தில், தன் உச்சநிலையா உலகிற்கு நலமே பயக்கும் வெள்ளிக்கோள், தன் உச்சநிலையா ஊறுவிளைக்கும் செவ்வாயொடு சேராதாக, மழை, வேண்டும் நிலத்திற்கு, அது வேண்டுமளவே பெய்து காத்தலால், நோயும் பசியும் அந்நாட்டின் எல்லைக்கு நெடுந்தொலைவுக்கு அப்பால், ஓடி ஒளிந்து கொள்ளும் ஆட்சி நலத்தைப் பதிற்றுப் பத்துப்பாக்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

காடே கடவுள் மேன; புறவே
ஒள்ளிழை மகளிரோடு மள்ளர் மேன;
ஆறே அவ்வனைத்து; அன்றியும் ஞாலத்துக்
கூலம் பகர்நர் குடிபுறந் தராஅக்,
குடிபுறந்தருநர் பாரம் ஓம்பி,
அழல் சென்ற மருங்கின், வெள்ளி ஓடாது
மழைவேண்டு புலத்து மாரி நிற்ப,
நோயொடு பசி இகந்து ஒரீஇப்
பூத்தன்று பெரும! நீ காத்த நாடே!

—பதிற்று : 13 : 20—28

பதிற்றுப்பத்துப்பாக்கள் தரும், நலனில், ஒரு சில துளி இவை; இனி அப்பாக்கள் அளிக்கும் இன்ப வெள்ளத்துள் ஆழ்வோமாக.

# பதிகம்

''மன்னிய பெரும்புகழ், மறுவில் வாய்மொழி,
இன்னிசை முரசின் உதியஞ்சேரற்கு
வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்,
அமைவரல் அருவி இமையம் வில்பொறித்து,
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்,
தன்கோல் நிறீஇத், தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபின் ஆரியர் வணக்கி,
நயன் இல் வன்சொல் யவனர்ப் பிணித்து,
நெய்தலைப்பெய்து, கைபின்கொளீஇ,
அருவிலை நன்கலம், வயிரமொடு கொண்டு,
பெருவிரல் மூதூர்த் தந்து, பிறர்க்கு உதவி
அமையார்த் தேய்த்த அணங்குடை நோன்தாள்
இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனைக்
குமட்டூர்க் கண்ணனார் பாடினார் பத்துப்பாட்டு''

அவைதாம், புண்உமிழ்குருதி, மறம் வீங்குபல்புகழ், பூத்த நெய்தல், சான்றோர் பெய்ம்மறை, நிரைய வெள்ளம், துயில் இன்பாயல், வலம்படு வியன்பனை, கூந்தல் விறலியர், வளன்அறு பைதிரம், அட்டு மலர் மார்பன். இவை பாட்டின் பதிகம்.

பாடிப்பெற்ற பரிசில், உம்பற்காட்டு ஐஞ்ஞூறூர் பிரமதாயம் கொடுத்து, முப்பத்தெட்டு யாண்டு தென்னாட்டுள் வருவதினிற் பாகம் கொடுத்தான் அக்கோ.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டி-யாண்டு வீற்றிருந்தான்.

# 1. புண் உமிழ் குருதி

இமயம் முதல் குமரிவரை பரவிய ஒரு பெருநாட்டை வெற்றிகொண்டவன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். அவன் காலத்தில், அப்பெருநாட்டில், ஆங்காங்கே அரசமைத்து வாழ்ந்திருந்த, அறிவிலாச்சிற்றரசர்கள், இமயவரம்பன்போலும் பெருவீரன் பிறந்திருப்பதை அறியாமையாலோ அல்லது ஆணவத்தாலோ, தாமே பெரியவர், ஆண்மையும் ஆற்றலும் தம்மிடமே அமைந்துள்ளன, என வாய்விட்டுக் கூறி விட்டனர். அதுகேட்டான் இமயவரம்பன்; அவ்வளவே, அவன் பெரும்படை அவ்வரசர்களின் ஆற்றலை அழித்து, அடிமை கொண்டுவிட்டது. இமயம்வரை சென்று அம்மலைநாடு ஆண்டிருந்த ஆரிய அரசர்களை வெற்றிகொண்டு முள்முருக்க மரங்கள் மலிந்த குறுங்காட்டையே வாழிடமாகக் கொண்டிருந்தும், தம் உறக்க நிலையிலும், தாம், பகற்பொழுதில் உண்ட நரந்தம் புல்லையும், குடித்த அருவி நீரையுமே கனவிற் கண்டுகளிக்கும் கவரிமான்களின், கவலையற்ற வாழ்வால், கவின்பெறும் இமயப் பெருமலையின் இயற்கை நலம்கண்டு இன்புற்றதோடு அமையாது, அம்மலை முடியில், தன் விற்கொடியை வானளாவப் பறக்கவும்விட்டுப் பெரும்புகழும் கொண்டான்.

இமயம் வரை சென்று வெற்றிகொண்டு, அப்பெரு-வரையில் தன் விற்கொடியைப் பொறித்த விறலோனும் பெருஞ்சேரலாதன் பேராண்மை, புலவர் குமட்டூர்க் கண்ணனாரைச் சேரர் தலைநகர் நோக்கி விரையப் பண்ணிற்று. தம்போலும் பெரும்புலவர்களால், அத்தகைய பெருவீரனை பாராட்டப் பெறுதல் வேண்டும் என்ற வேட்கை உந்த, சேரர்

தலைநகர்க்குள் புகுந்த புலவர் கண்களுக்கு, அப்பேரூர் வீதிகளில் சென்றுகொண்டிருந்த வெற்றித்திருவுலா விருந்தளித்து வரவேற்றது.

கடம்பர் என்ற கடற்கொள்ளைக் கூட்டத்தினரை வென்று திரும்பும், இமயவரம்பனைத் தலைநகர்மக்கள் விழாக் கொண்டாடி வரவேற்றுக் கொண்டிருந்தனர். கடலிடைத்-தீவுகளை வாழிடமாகக்கொண்டு, வாணிகம் குறித்துவரும் வங்கங்களை வழிமடக்கிக் கொள்ளையடித்து உண்ணும் அக் கொடியோரால், தன் நாட்டுக் கடல்வாணிகம் வளமிழந்து போவதுகண்டு கடுஞ்சினம் கொண்டான் இமயவரம்பன். இமயவரம்பன் இயல்பாகவே போர்வேட்கை மிகுந்தவன். தன் வேற்படைவீரரின் ஆண்மையை மதியாது, அவர் ஏந்தி நிற்கும் வேற்படைகளின் வன்மைகண்டு அஞ்சாது, தன்னைப் பகைப்பவர் உளராயின், அவர்கள் எத்துணைப் பெருவீரராயினும், தம்மொடு மாறுபடுவார் மார்பைப் புண்ணுக்குவதல்லது, தம்மார்பில் புண்பெருப் பேராண்மையுடையவரேயாயினும், அவர்கள் காத்துநிற்கும் அரண், எத்துணை உறுதிப்பாடுடையதாயினும், அவ்வரணைச் சூழ்ந்திருக்கும் அகழி, நிறமற்ற நீரும், கருநீலம் பெறுமளவு, ஆழம்மிக்கதேயாயினும், அவர்-மீது அஞ்சாது போர்தொடுத்துச் சென்று, அன்னார் மார்புகள், தன்வேற்படையால் பிளப்புண்டு புண்ணுக, அப்புண்வழியே பெருக்கெடுத்து வெளிப்படும் குருதிவெள்ளம் பாய்வதால், அகழியின் ஆழ்நீர், நீலநிறம் மாறிச் செந்நிறம் பெறும்படி, அவ்வீரர்களைக்கொன்று, அவர்கள் காத்துநின்ற அரணை அழித்து, வெற்றிகொள்ளும் போர்வேட்கையும், அதற்கேற்ற உரமும், ஆக்கமும் ஒருங்கே உடையவன் இமயவரம்பன். அத்தகையான், தன்நாட்டின் வளம்பெருக்கும் கடல்வாணிகத்திற்குக் கேடுவிளைவிக்கின்றனர் கடம்பர், என்பதைக் கேட்டும் வாளா இருப்பனே?

கடம்பர்செயல் கேட்ட அக்கணமே, சேரநாட்டுக் கடற்படை போருக்குப் புறப்பட்டுவிட்டது. கடம்பர்வாழ் தீவுகளை வளைத்துக்கொண்டது. சேரநாட்டு வாள்வீரர், கலம் புகுந்து கடம்பர்களைத்தாக்கினர். சேரர் படையோடு செருச்செய்தல் தம்மால் இயலாது என்பதைக் கண்டுகொண்ட கடம்பர், தம் குலமரமாம் கடம்பமரத்தைக் காத்துக்கொள்வதையாவது மேற்கொள்ளலாம் என்ற கருத்துடையராய் ஒன்று திரண்டு, அம்மரத்தைக் காக்கத்தலைப்பட்டனர். ஆனால், சேரர் நாட்டு வீரர்கள், கடம்பர்களுக்கு, அச்சிறுவாய்புதானும் அளிக்க விரும்பினாரல்லர். காவல் மரமாம் கடம்பை அழித்தாலல்லது, கடம்பர்களின் செருக்கு அடங்காது என்பதறிந்து, அதைக் காத்துநின்ற கடம்பர்களைக்கொன்று, அக்கடம்பை அடியோடு வெட்டி வீழ்த்தினார்கள். வீழ்ந்த கடம்பைக் குடைந்து முரசாக்கி முழக்கி, அம்முழக்கொலி கேட்டுக் களிகூர்ந்தார்கள்.

புலவர் புகுந்த காலை, அவ்வெற்றி விழாவே சேரர் தலைநகரில் சிறப்புறக்கொண்டாடப்பெற்றது. களம்பலகண்டு, கோட்டைகள் பலவற்றைக் குத்திப்பாழாக்கிய, பெருமிதம்மிக்க, வெண்கோடுடைமையால், வீறுபெற்ற வேழத்தின் பிடரிமீது, பெருமிதம் தோன்ற வீற்றிருந்தான் இமயவரம்பன். அவன் மார்பிற்கிடந்து புரளும் வாகைமாலை, பொன்னரிமாலை அணிந்த அவ்வேழத்தின் ஓடையளவும் தாழ்ந்து தவழ்ந்தது. போர் என்றால் பூரிக்கும்நாற்படை முன்னேசெல்ல, இமயவரம்பன் வீற்றிருக்கும் வேழம், பெருமித நடைபோட்டு அசைந்து செல்லும்!அழகிய காட்சியைக், கண்குளிரக்கண்டு, களித்த நாட்டவரெல்லாம், அவன் வெற்றிச் சிறப்பினை நாவாரப் புகழ்ந்து பாராட்டினர். வெற்றி வாழ்த்தொலி வானதிர வரும், அத்திருவுலாக் காட்சியைக் கண்டுகளித்தார் புலவர்.

கடலிடையே புகுந்து கடம்பமரத்தைவெட்டி வெற்றி பெற்று, களிற்றின் மீது அமர்ந்து, இமயவரம்பன் உலா வரும் அக்காட்சியைக் காணும் புலவர் அகத்தே, பிறஉயிர்களுக்குத் துன்பம் தருவதையே தொழிலாகக் கொண்ட அவுணர்க்கு அரசனாய், அவர் அழிவுத் தொழில்களுக்கு ஆக்கம் அளித்துவந்த சூரன்மீது போர் தொடுக்க, அவன், அஞ்சி ஓடிக் கடலிடைத்தீவு ஒன்றில் மாமரமாக உருவம் திரிந்து ஒளிந்துகொண்டானாக, காற்று கடும்புயலென வீசுவதால், மலைபோல் உயர்ந்தெழும் அலைகள், வெண்சிறு துளிகளாக உடைந்து ஓவென ஒலமிடும் பரந்த கடலைக் கடந்து சென்று, அம்மரத்தை இருகூறாகப் பிளந்து அழித்து, அவ்வவுணர்தலைவன் உயிர்குடித்து, அச்சிறப்பால் பிணிமுகம் எனும் பெயர்பூண்ட களிற்றின்மீது அமர்ந்து உலாவரும் முருகன் திருவுலாக்காட்சி நிழலாடிற்றுபோலும்!

அவ்வளவே! இமயவரம்பனை, உமையவள்தன் திருமகனாகவே கருதிவிட்டார் புலவர். அவர் காணும், அகப்புறக் காட்சிகளை, அழகிய சொல்லோவியமாக்கிவிட்டது அவர்வாய்.

அச்சொல்லோவியத்தைச் சுவைத்து மகிழ்ந்த யாரோ ஒரு பெரியார், அச் செய்யுளில் இடம்பெறும் "புண்உமிழ் குருதி" என்ற தொடரில், முதற்கண் நிற்கும் "புண்" என்ற சொல், பகைவர் படைக்கலம் பாயாப் பெருமை வாய்ந்த மார்பைப், பிளந்து பண்ணிய புண், என முன்வரும் தொடரால் பெருமைபெற, "குருதி" என்ற சொல், அகழிநீரின் இயல்பான, நீலநிறத்தையும்அழித்துச் செந்நிறமாக்குமளவு பெருக்கெடுத்துப்பாயும் குருதி எனப், பின்வரும் தொடரால் பெருமைபெற, அமைந்திருக்கும் அழகைக்கண்டு, அச்சொல்லோவியத்திற்குப் **புண் உமிழ் குருதி** என்பதே பெயராக்கிப் பெருமை செய்துள்ளார்.

11. வரைமருள் புணரி வான்பிசிர் உடைய,
வளிபாய்ந்து அட்ட துளங்கு இரும் கமஞ்சூல்
ஒளிஇரும் பரப்பின் மாக்கடல் முன்னி,
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்,
கடுஞ்சின விறல்வேள், களிறு ஊர்ந்தாங்கு,
செவ்வாய் எஃகம் விலங்குநர் அறுப்ப,
அருநிறம் திறந்த புண்உமிழ் குருதியின்
மணிநிற இருங்கழி நீர்நிறம் பெயர்ந்து,
மனாலக் கலவை போல அரண்கொன்று
முரண்மிகு சிறப்பின் உயர்ந்த ஊக்கலை;
பலர் மொசிந்து ஓம்பிய அலர்பூங் கடம்பின்
கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்
வென்று எறி முழங்குபணை செய்த வெல்போர்
நார்அரிநறவின், ஆர மார்பின்,
போர் அடுதானைச் சேரலாத!
மார்புமலி பைந்தார் ஓடையொடு விளங்கும்
வலன் உயர் மருப்பின் பழிதீர் யானைப்
பொலன்அணி எருத்தம் மேல்கொண்டு பொலிந்த நின்
பலர்புகழ் செல்வம் இனிது கண்டிகுமே;
கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி
பரந்து இலங்கு அருவியொடு நரந்தம் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்,
தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறம்தபக் கடந்தே,

**துறை : செந்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : புண்ணுமிழ் குருதி**

மறந்தபக்கடந்து (21-25) அரண்கொன்று, ஊக்கலை, கடம்பின் முதல் தடிந்த ஏஎய், பணிசெய்த சேரலாத (7-16) வேள் களிறு ஊர்ந்தாங்கு, (1-6) யானை எருத்த மேல் பொலிந்த நின்செல்வம், இனிது கண்டிகும் (17-20) என மாற்றிப் பொருள் கொள்க.

கவிர்ததை=சிலம்பில் முருக்கமரங்கள் மலிந்த மலையில். துஞ்சும் கவரி = உறங்கும் கவரிமான்கள்; பரந்து இலங்கு அருவியொடு=பகற்போதில் தாம் பருகிய பரந்து விளங்கும் அருவி நீரோடு. நரந்தம் கனவும் = மேய்ந்த நரந்தம் புல்லையும் கனவிற்கண்டு மகிழ்தற்கு இடமாய்; ஆரியர் துவன்றிய = ஆரியர்கள் நிறைந்த; பேரிசை இமயம் = பெரும்புகழ் வாய்ந்த இமயம்; தென்னம்குமரி = தெற்கின்கண் உள்ளதான குமரி; ஆயிடை = ஆகிய இவற்றிற்கு இடைப்பட்ட நாட்டில் உள்ள; மன் = மன்னர்களுள்; மீக்கூறுநர்= தம்மைத்தாமே உயர்வாகக்கருதிச் செருக்குற்றவர்களின்; மறம்தபக் கடந்து = ஆற்றல் கெட்டழிய வென்று; செவ்வாய் எஃகம் = கூரிய வாயினை உடைய வேற்படை; விலங்குநர் அறுப்ப=எதிர்த்து நிற்கும் பகைவரை அழிக்க; அருநிறம்= பிறரால் தீண்டற்கரிய அப்பகைவர் மார்பு; திறந்த = உன் வேற்படை பாய்ந்து பிளந்ததனால் உண்டான; புண்உமிழ்குருதி = புண்களிலிருந்து ஒழுகும் குருதிவெள்ளம் பாய்ந்து கலப்பதால்; இருங்கழி = பெரிய அகழியின்; மணி நிறநீர்=ஆழம்மிகுதியால் நீலமணியின் நிறம் காட்டும் நீர்; நிறம்பெயர்ந்து = தன் நீலநிறம்கெட்டு; மனாலக் கலவை போல = குங்குமக்குழம்புபோல் ஆகுமாறு; அரண்கொன்று =அப்பகைவர்களின் கோட்டைகளை அழித்து; முரண்மிகு சிறப்பின்=ஆற்றல்மிகு சிறப்பினால்; உயர்ந்த ஊக்கலை = சிறந்த மனவெழுச்சி உடையையாகி; பலர்மொசிந்து ஓம்பிய = கடம்பர் பலர் கூடியிருந்து காத்திருந்த; அலர்பூங்-

கடம்பின் = மலர்ந்த மலரால் நிறைந்த கடம்ப மரத்தின்; கடியுடை முழுமுதல் துமிய ஏஎய் = காவல் அமைந்த அடிமரத்தை அடியோடு அழிக்குமாறு படைகளை ஏவி; வென்று = வெற்றி கொண்டு; எறிமுழங்கு பணைசெய்த = அம்மரத்தைக்கொண்டு, அடித்து ஒலி எழுப்பும் போர் முரசினைப் பண்ணிக்கொண்ட; வெல்போர் = வெல்லும்போரினையும்; நார் அரி நறவின் = நாரால் வடித்தெடுக்கப்பெற்ற நறிய மதுவினையும்; ஆர மார்பின் = மாலையணிந்த மார்பினையும்; போர் அடுதானை = அஞ்சாது போர்புரியும் ஆற்றல்மிக்க படையினையும் உடைய; சேரலாத = சேரலாதனே! வரைமருள்புணரி = மலைபோல் உயர்ந்த அலைகள்; வான்பிசிர் உடைய = வெண்சிறு துளிகளாக உடைந்துவிடுமாறு; வளிபாய்ந்து அட்ட = காற்றுப் புகுந்து அலைத்த; துளங்கு இரும் கமம் சூல் = ஓவெனும் ஒலியெழுப்பியவாறே அலையும், கார்மேகக் கூட்டப்படிந்து பருகுவதால் குறைதலோ, ஆறுகள் பாய்வதாலும் பெருமழை பெய்வதாலும் நிறைதலோ இல்லாமல். என்றும் ஒரு படித்தாக நிறைந்தது கிடக்கும், ஓவெனும் ஒலியெழுப்பியவாறே அலையும் நிறைந்த நீரையும்; ஒளி இரும்பரப்பின் = அளந்து காணலாகா மிகப்பெரிய இடப்பரப்பினையும் உடைய; மாக்கடல் முன்னி = கரியநிறம் வாய்ந்த கடலிடையே சென்று, அணங்குடை அவுணர் = பிறர்க்குத் துன்பம் தருவதையே தொழிலாகக்கொண்ட அவுணர்க்கு; ஏமம் புணர்க்கும்; காவலாய் நின்று துணைபுரியும்; சூருடை முழுமுதல் தடிந்த = சூரவன்மாவினுடைய மறுவுருவாய் நின்ற மாமரத்தினை வேரோடு வெட்டி அழித்த; பேரிசை = பெரியபுகழும்; கடுஞ்சின = பெருஞ்சினமும்; விறல்வேள் = பேராற்றலும் வாய்ந்த செவ்வேல் முருகன்; களிறு ஊர்ந்தாங்கு = பிணிமுகம் எனும் பெயர்பூண்ட யானைமேல் அமர்ந்து உலாவருதல் போல்; மார்புமலி பைந்தார் = மார்பில் கிடந்து அசையும் புதிய மலர்களால் தொடுக்கப்பெற்ற வெற்றிமாலை,

ஓடையொடு விளங்கும் = யானையின் நெற்றிப்பட்டத்தோடு அமைந்து அழகு செய்யும்; வலன் உயர் மருப்பின் = வெற்றி பல கண்டதால் உயர்ந்த தந்தங்களைக் கொண்ட; பழிதீர் யானை = பிறவிக்குற்றமோ, போர்க் குற்றமோ இல்லாத பட்டத்து யானையின்; பொலன் அணி எருத்தம் மேல்கொண்டு பொலிந்த = பொன்னரி மாலையால் அணி செய்யப்பெற்ற கழுத்தின் மீது அமர்ந்து பொலிவுபெற்ற; நின் பலர் புகழ் செல்வம் = பலரும் புகழ்ந்து பாராட்டத்தக்க நின் பெருஞ்செல்வ வாழ்வை; இனிது கண்டிகும் = யாமும் இனிது கண்டு மகிழ்கின்றோம்.

"சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி" எனச்-சினம் பொதுவாக பழிக்கத் தக்கதே எனினும், முருகன் கொண்ட சினம், பிறர்க்கு அல்லல் புரிவதையே பிறவிக் குணமாகக்கொண்ட அவுணரை அழித்து அவுணர் இல்லாதார் அனைவர்க்கும், இன்பவாழ்வு தரத்துணைபுரி-வதால் அதுகொண்டு, அதைப் பெரும்புகழ்கொண்ட சினம்— "பேரிசைக் கடுஞ்சினம்" எனப் புகழ்ந்திருக்கும் நயம் பாராட்டுதற்கு உரியது.

மாவடிவில் நின்ற சூரவன்மாவை அழித்த முருகன் "பார் முதல் பனிக்கடல் கலங்க உள்புக்குச் சூர்முதல் தடிந்த சுடர் இலை நெடுவேல்" என்றும் (45-46) "அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர் மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து எய்யா நல்லிசை நெடுவேல் சேஎய்" என்றும் (59-61) திருமுருகாற்றுப்படையில், நக்கீரர் பாராட்டியிருப்பது உணர்க.

ஒருமுறை அழிவுற்ற அரண், பிறிதொருகால் மீண்டும் பழைய வலிபெற்று எழாத வகையில், அழிந்தது அழிந்ததே

என்ற நிலையுறும் வகையில், அழிக்கப்பட்டது என்பதை உணர்த்தி, நெடுஞ்சேரலாதனின் அழிக்கும் ஆற்றலின் திறத்தைப் பாராட்ட விரும்பிய புலவர் ''அரண் கொண்டு'' என்றோ, ''அரண் அழித்து'' என்றோ கூறலாமாயினும், அவ்வாறு கூறாமல், ''அரண்கொன்று'' எனக் ''கொன்று'' என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்து ஆண்டிருக்கும் நயம். அறிவுக்கு ஒரு நல்ல விருந்து.

நெடுஞ்சேரலாதன் கடம்பு எறிந்து முரசுகொண்ட வெற்றிச்சிறப்பினை இவ்வாசிரியர், ''துளங்குபிசிர் உடைய மாக்கடல் நீக்கிக் கடம்பறுத்து இயற்றிய வியன்பனை ''(பதிற்று: 17)'', ''இருமுந்நீர்த் துருத்தியுள் முரணியோர்த் தலைச்சென்று கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின முன்பின் நெடுஞ்சேரலாதன்'' (பதிற்று :20) என, மேலும் பாராட்டி-யிருப்பதோடு, ''சால்பெரும் தானைச் சேரலாதன் மாக்கடல் ஒட்டிக் கடம்பறுத்து'' இயற்றிய பண்அமை முரசு, ''வலம் படு முரசின் சேரலாதன், முந்நீர் ஒட்டிக் கடம்பறுத்து'' (அகம்: 347-127) என மாமூலனாரும் பாராட்டியுள்ளார்.

மயிர் இழக்கநேரின், தாம் உயிர் வாழோம் என்பதைத் தாம் வாழும் காட்டில் உணர்ந்திருந்தும் அடர்ந்து வளர்ந்-திருக்கும் முருக்க மரத்து முட்கள் தம் உடல் மயிர்க்கு ஊறு செய்யா என உணர்ந்திருந்தமையாலும், தாம் வாழும் அக் காடு, தம் பகை விலங்காம் கொல்புலிபோலும் கொடுவிலங்கு களுக்கும் வாழ்வளிக்கும் இடமாயினும், அவையும், தமக்கு ஊறுசெய்யா என உறுதியாக உணர்ந்திருந்தமையாலும், சிறிதே கண்ணயரவும் அஞ்சுவதோ, ஒரோவழிக் கண்ணியர்ந்-தாலும், அக்கண்ணயர்வில், முருக்கம் முள்ளில் சிக்குண்டு மயிர் இழக்க நேரிடுவது, புலிக்கூட்டம் தம்மீது பாய்வது போலும் கனவுகளே வரக்கண்டு வெருவி விழித்துக் கொள்வதோ

இல்லாமல், தம்மை மறந்து உறங்குவதும், அவ்வுறக்கத்தினிடையே மலைச்சாரலில் மண்டிக்கிடக்கும் நரந்தம்புல்லை வயிறுர மேய்ந்து, ஆங்குப் பளிங்கெனப்பாயும் நறுநீர் உண்பது போலும் இன்பக் கனவுகளே கண்டு இன்புறுவதும் செய்யும் கவரிமானின் மாண்பினைக் கூறுமுகத்தான், தன்னிடத்து மாவும், மரமும் மறந்தும் பிறஉயிர்க்கு ஊறுசெய்யா, இமயப்பொருப்பின் இனிய இயல்பை, எடுத்து விளக்கியிருக்கும் நயம் வியந்து இன்புறற்கு உரியது

நெடுஞ்சேரலாதன், இமயம் வரை சென்று, ஆங்கு வாழ் ஆரிய மன்னரை வென்று மங்காப்புகழ் கொண்ட செய்தியை,

''ஆரியர் அலறத்தாக்கிப், பேரிசைத்
தொன்று முதிர்வடவரை வணங்குவில் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி''
—அகம் :396

எனப் பரணரும்,

''வலம்படு முரசின் சேரலாதன்
முந்நீர் ஒட்டிக் கடம்பறுத்த—இமயத்து
முன்னோர் மருள வணங்குவில் பொறித்து''
—அகம் : 127

என மாமூலனாரும் பாராட்டியுள்ளனர்.

நரந்தம்புல் மேய்ந்து, அருவியில் நறுநீர் பருகிய கவரிமான் கவலையற்றுக் கண்ணுறங்கும் இமயமலைப் பெருமையை

''நாந்தை நறும்புல் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனைப்பருகி, அயல

தகரத்தண்ணிழல் பிணையொடுவதியும்
வடதிசையாதுவே வான் தோய் இமயம்''.

—புறம்: 132

என உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரும் பாராட்டி-யுள்ளனர்.

அதுபோலவே சின்னஞ்சிறு குட்டிகளோடு கூடிய பொன்மான் கூட்டம், அந்திப்போதில் அந்தணர், வளர்க்கும் செந்தழல் அருகே கிடந்து அயர்ந்து உறங்கும், இமயத்து இன்பக்காட்சியை முரஞ்சியூர் முடிநாகராயரும் பாராட்டியுள்ளார்.

''சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
பொற்கோட்டு இமயம்''.

—புறம்: 2

# 2. மறம் வீங்கு பல்புகழ்

இமயவரம்பன், கடம்பரைவென்று அவர் காவல்மரமாம் கடம்பை வெட்டி வீழ்த்திய வெற்றிச்செயல், ஏனைய வேந்தர்க் கெல்லாம் பேரச்சம் தந்துவிட்டது. தம் வாள் வன்மையால் பிறநாட்டு வாள் வீரர்களையெல்லாம் வீழ்த்திவென்று, அந்நாடுகளைத் தந்நாடுகளாக ஆக்கிக்கொள்ளும் அத்துணை ஆற்றல் வாய்ந்திருந்தும், அவர்கள், இமயவரம்பன் கடம்பெறிந்த ஒரு செயல்கண்டே நடுக்கம்கொண்டனர். தாம்மிகப் பலராக இருந்தும், தனியொருவனும் அவன்முன் அஞ்சி, தத்தம் அரணகத்தே அடங்கியிருந்தார்கள். மான், யானை போலும் விலங்குகள் கூட்டங் கூட்டமாகவாழும் இயல்புடையவேனும், ஆண் சிங்கம் வாழும் மலைச்சாரலை அணுகவும் அஞ்சி, தத்தம் வாழிடங்களில் அடங்கி ஒடுங்கிக்கிடக்கும் நிலையிலும், அச்சிங்க ஏற்றால், தமக்கு எந்நேரத்தில், எத்தகைய கேடுவந்து வாய்க்குமோ எனும் நடுங்கும் உள்ளத்தோடு உறக்கம் ஒழிந்து கிடப்பதுபோல், சேரநாட்டை அடுத்துள்ள அரசர் அத்தனைபேரும், முரசொலிக்கும் பெருமைவாய்ந்த, பெரிய பெரிய கோட்டைகளைத் [அகத்தே வாழ்ந்திருந்தும், சேரலாதன் பெரும்படை தம் கோட்டை] தகர்த்துவிடுமோ? என்ற எண்ணங்கள் அலைக்கழிக்க, உறக்கம் அறியாது, அஞ்சி விதிர்விதிர்த்துக் கிடந்தார்கள். இவ்வாறு தன்னை நினைக்கும் நெஞ்சமும் அஞ்சுமளவு பேராற்றல் பெற்றிருந்தான் இமயவரம்பன் என்ற செய்திகேட்டு, இனித்தது புலவர் உள்ளம்.

புகழ்வரும் வழிகள்பலவே எனினும், வீரத்தால் வரும் புகழே விழுமிய புகழாம் எனக்கொண்டு, அப்புகழைப்

பெருமளவில் பெற்றுள்ளான் இமயவரம்பன் எனக்கேட்ட புலவர் உள்ளத்தில், அப்புகழ்படைத்த பெரியவனைப் பார்க்க வேண்டும், அத்தகு வெற்றிப் புகழ்உடையான்பால், இயல்-பாகவேவந்து குவிந்து கிடக்கும் பெருஞ்செல்வப் பேற்றினையும் பார்க்கவேண்டும் என்ற வேட்கை பெருகிவளர்ந்தது.

உடனே, இமயவரம்பனைக் காணச் சேரநாடு நோக்கிப் புறப்பட்டார் புலவர். புலவர் தனியொருவர் அல்லர். ஆல்-போல்தழைத்த ஒருபெருஞ்சுற்றம், அவரைச் சுற்றியிருந்தது. புலவர்பால் தெள்ளிய நல்லறிவு வாய்த்திருந்ததுபோல், வற்றுப்பெருந்திரு வாய்த்திருக்கவில்லை. அதனல், நெடுநாட்-களாகவே பசிப்பகைவனல் பெருந்துன்பத்திற்கு உள்ளாகி-யிருந்த அவர்களும், புலவரைத் தொடர்ந்தார்கள்.

புலவரும், அவருடைய பெருஞ்சுற்றமும் மலையிடை வழி களைக் கடந்து செல்வாராயினர். பசிமிகுதியால் இயல்பாகவே உடல் தளர்ந்திருக்கும் அவர்களைக்,காட்டுக்கொடுவழி, மேலும் துன்புறுத்தியிருக்கும். ஆனல் அக்காட்டு வழியின் இயற்கைக் காட்சிகள், அவர்களைப் பற்றியிருந்த உடல் தளர்ச்சியைப் போக்கியதோடு, உள்ளத்தில் உயர்ந்த நம்பிக்கை எழவும் துணைபுரிந்தன.

காட்டுவழியெங்கும் கன்றீன்ற பிடியானைகளே காட்சி அளித்தன. கன்றுகள் ஆணகப் பிறந்திருந்தமையால், அவற்றின்பால் பெருமிதவுணர்வு இயல்பாகவே அமைந்து கிடந்தது. பிறந்த மயிரும் உதிராத, அத்துணை இளமைய-வாய், அக்கன்றுகள் அசைந்து அசைந்து செல்லும் நடையழகு கண்டு, களித்தவாறே அவற்றின் பின்செல்லும் பிடிகள், கன்றுகளின் மத்தகத்திலிருந்து ஒழுகும், மதநீரை உண்ணும் விருப்பத்தால் வண்டுக்கூட்டம் வந்து மொய்க்க, தம்

இளமையால், அவற்றை ஓட்ட அறியாது கன்றுகள் வருந்தக் கண்டு, ஆங்கே மலர்ந்து மணக்கும் காட்டு மல்லிகைக் கொடிகளைப் பறித்து, அவற்ருல் அவ்வண்டுகளை விரட்டும் அழகிய காட்சி, வறுமையுடைமையால், பசிப்பகையை விரட்ட மாட்டாது வருந்தும் நம் துயரை, இமயவரம்பன் தன் கொடைநலத்தால் விரட்டிக்காப்பன் என்ற நம்பிக்கை ஊட்ட, உடற்றளர்ச்சியையும் பொருட்படுத்தாது காட்டு வழியைக் கடந்துசென்று, சேரநாட்டுத் தலைநகரை அடைந்தார்கள்.

தன்னைக் காணவந்த புலவர்குழாம், தலைநகர் விருந்தினர் மாளிகையில் தங்கியுளது என்பதை அறிந்து, அவர்களை அரண்மனைக்கு அழைத்துச்சென்ற இமயவரம்பன், அவர்கள், நல்ல உணவுகாணுது நெடுநாட்களாகவே வருந்தி வந்தவர்களாதலின், முதற்கண் அவர் பசிதீர்க்கும் பணியினை மேற் கொண்டான். அரிவாளால் பிளந்து அறுத்து நெய்யிலிட்டு பொறித்தெடுத்த, வெண்கொழுப்பு கலந்த இறைச்சிப்பொறியலையும், ஆட்டிறைச்சி கலந்து ஆக்கிய வெண் காரரிசிச்சோற்றையும், வயிரூர உண்ண அளித்தான். குடிக்க இஞ்சிப்பூ முதலாயின இட்டுப், பக்குவம்பெற்ற தெளிந்த தேனையும் கொடுத்தான். இவற்றையுண்டு பசிதீர்ந்த பின்னரே, அவன் அவர்களின் வறுமை நிலைகாட்டும் கந்தலாடையைக் கண்ணுற்ருன். மாற்ருடை இன்மையால், ஒற்றையாடையே உடுத்தி வந்தவராதலின், மாசுபடிந்தும் வியர்வையால் நனைந்தும் நைந்துபோய், தண்ணீரில் மூழ்கி எழுந்த, பருந்தின் இறகுபோல், காட்சிதரும் அக்கந்தல் ஆடையைக் களைந்து பட்டாடை உடுத்து, உள்ளம் பூரித்தான். வந்த புலவர்சுற்றத்தினிடையே, மகளிர் சிலரும் இருக்கக் கண்டான். அடர்ந்து நீண்டு வளர்ந்த கூந்தலும், வளைந்த மூங்கில்போல் வனப்புமிகு தோளும் உடைமையால், இயற்கை

யழகு காட்டி நிற்கும் அம்மங்கை நல்லார்க்குச், சிறந்தபல் அணிகளைப் பூட்டிப், பேரின்பம் கொண்டான்.

அம்மட்டோ! வறுமையால் வந்தவர்கள்; ஆகவே பசி-தீர்த்தோம்; பொருள் சில அளித்தோம்; இனியும் அவர்கள் ஒண்டியிருக்க வேண்டியதில்லை; செல்க அவர் இடம், நோக்கி என்று எண்ணி, அவர்களை அனுப்பிவிட்டானல்லன். அமைச்சர் உள்ளிட்ட அரசியல் தலைமைச்சுற்றத்தினரோடு அரியணை அமர்ந்து, அரசியல் பணிபுரியும் நாளோலக்க-நிலையிலும், அவர்களைத், தன் உடலைவிட்டுப்பிரியா உறவுடை-யார் போன்று, உடன் இருத்திப் பெருமைசெய்தான்.

வறுமையால் வாடிவந்த தம் சுற்றத்தினர் இமயவரம்பனோடு இரண்டறக்கலந்த நிலையில், இனிது வீற்றிருக்கும் வனப்புமிகு அக்காட்சியைக் கண்டார் புலவர். ''இமயவரம்ப! நின்வெற்றிப்புகழ் கேட்குந்தொறும் இனித்தது என்றால், நின் நாளோலக்கச்சிறப்பு, காணுந்தோறும் இனிக்-கிறது. இப்பேரின்பக் காட்சியைக் காணும் என் கண்பெற்ற பேறுதான் என்னே!'' என வியந்து, வாய்பிளந்து நின்றார்.

கல்வி, செல்வம் முதலியவற்றாலும் புகழ்வரும் என்றாலும்; அக்கல்வியும் செல்வமும், முன்னை வினைவயத்தான் வருவன என்ப ஆதலின், அவற்றாலாம் புகழ், அவற்றைப் பெற்றானுக்-குரிய புகழாகாது. வீரத்தால் வரும் புகழ், அப்புகழுடையான், மெய்யாற்றல் காரணமாக வருவது; ஆதலின் அப்புகழே விழுமிய புகழாம். அரசர்க்கு அப்புகழ் ஒன்று மட்டும் வாய்த்துவிடுமாயின், ஏனைய புகழ்எல்லாம் தாமே வந்தடைந்ததுபோலாம். ஆகவே இமயவரம்பன்பால் பொருந்தியிருக்கும் வெற்றிப்புகழினை, மறம் வீங்கு பல்புகழ், எனக் குறிப்பிட்ட புலவர் தம் பெருமையறிந்து; அவர்பாடிய இப்பாட்டிற்கு, **மறம் வீங்கு பல்புகழ்** என்பதையே பெயராக்கி யுள்ளனர்.

12. ''வயவர் வீழ வாள் அரில் மயக்கி
இடம் கவர் கடும்பின் அரசு தலைபனிப்பக்
கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின வேந்தே!
தார் அணி எருத்தின் வாரல் வள் உகிர்
அரிமான் வழங்கும் சாரல், பிறமான்
தோடுக்கொள் இனநிரை நெஞ்சு அதிர்ந்தாங்கு,
முரசுமுழங்கு நெடுநகர் அரசு துயிலீயாது
மாதிரம் பனிக்கும் **மறம் வீங்கு பல்புகழ்**
கேட்டற்கு இனிது. நின் செல்வம் கேட்டொறும்
காண்டல் விருப்பொடு, கமழும் குளவி,
வாடாப் பைம்மயிர் இளைய, ஆடுநடை
அண்ணல் மழகளிறு அரிஞிமிறு ஒப்பும்
கன்றுபுணர் பிடிய குன்றுபல நீந்தி
வந்து அவண் இறுத்த இரும்பேரொக்கல்
தொல்பசி உழந்த பழங்கண் வீழ
எஃகு போழ்ந்து அறுத்த வால் நிணக்கொழுங்குறை
மைஊன் பெய்த வெண்ணெல் வெண்சோறு
நனையமை கள்ளின் தேறலொடு மாந்தி,
நீர்ப்படு பருந்தின் ஈர்ஞ்சிறகு அன்ன
நிலம்தின் சிதாஅர் களைந்த பின்றை
நூலாக்கலிங்கம் வால் அரைக்கொளீஇ
வணர் இருங்கதுப்பின், வாங்கு அமை மென்தோள்
வசைஇல் மகளிர் வயங்கிழை அணிய
அமர்பு மெய்யார்த்த சுற்றமொடு
நுகர்தற்கு இனிது நின் பெருங் கலிமகிழ்வே''

**துறை : செந்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : மறம் வீங்கு பல்புகழ்**

வேந்தே! (1-3) புகழ் கேட்டற்கு இனிது; கேட்டொறும் காண்டல் விருப்பொடு, குன்றுபல நீந்தி வந்து இறுத்த ஒக்கல், மாந்தி களைந்த பின்றை, கலிங்கம் கொளீஇ, மகளிர் இழை அணிய சுற்றமொடு, நின் பெருங்கலிமகிழ்வு நுகர்தற்கு இனிது, எனக்கூட்டிப்பொருள் கொள்க.

வயவர் வீழ = பகைநாட்டு வாள் வீரர்கள் இறந்து விழும்படி; வாள்அரில் மயக்கி = கொடிய வாட்போர் புரிந்து; இடம் கவர் கடும்பின் = பகைநாட்டு நிலங்களைக் கவர்ந்து கொள்ளும் வாள்வீரர்களைக் கொண்ட; அரசு = அரசர்கள் எல்லாம்; தலைபனிப்ப = தலைநடுங்கி வணங்கும் வண்ணம்; கடம்பு முதல் தடிந்த = கடம்பர்களின் காவல் மரமாம் கடம்பு மரத்தை அடியோடு வெட்டி வீழ்த்திய; கடுஞ்சின வேந்தே = கொடிய சினம் மிகுந்த அரசர்க்கரசே; தார் அணி எருத்தின் = பிடரிமயிரால் அழகுபெற்ற கழுத்தினையும்; வாரல் வள் உகிர் = நீண்ட கூரிய நகங்களையும்கொண்ட; அரிமான் வழங்கும் சாரல் = ஆண் சிங்கம் உலாவும் மலைச்சாரற்கண்; பிறமான் தோடுகொள் இன நிரை = கூடிவாழும் இயல்பினவாய மான் ஆமான் போலும் பிறவிலங்குகளின் கூட்டம்; நெஞ்சு அதிர்த்தாங்கு = உள்ளம் நடுங்கி தாம் வாழிடத்திலேயே ஒடுங்கி உறைவதுபோல்; மாதிரம் = நால்வேறு திசைகளிலும் உள்ள; முரசு முழங்கு நெடுநகர் அரசு = முரசு முழங்கும் பெரிய கோட்டைகளை வாழிடமாக் கொண்ட அரசர்கள் எல்லாம். துயிலீயாது = உன்பால் கொண்ட அச்ச மிகுதியால் உறக்கம்கொள்ளாது; பனிக்கும் = நடுங்குவதற்குக் காரணமான; நின்மறம் வீங்கு பல்புகழ் = வீரத்தால் மிகுந்து வகைவகையாக விரிந்த உன்புகழ்; கேட்டற்கு இனிது = கேட்குந்தொறும் எமக்கு இனிக்கிறது. நின்செல்வம் கேட்டொறும் = உன்செல்வச் சிறப்பினைக் கேட்குந்தோறும்; காண்டல் விருப்போடு = உன்னைக் காணவேண்டும் என்று

எழுந்த விருப்பத்தால்; வாடாப் பைம்மயிர் = உதிராத இளம் மயிரினையும்; இளைய = இளமைத் தன்மையினையும்; ஆடு-நடை = அசைந்து அசைந்து செல்லும் இயல்பினையும் உடைய; அண்ணல் மழகளிறு = பெருமைமிக்க இளங்கன்று-களை மொய்க்கும்; அரிஞிமிறு - வண்டுகளை கமழும் குளவி = மணக்கும் காட்டுமல்லிகைக் கொடிகளால்; ஒப்பும் = ஓட்டும்; கன்றுபுணர்பிடிய = கன்றுகளை விட்டுப்பிரியாத பிடியானை களைக் கொண்ட; குன்று பலநீந்தி = மலைகள் பலவற்றைக் கடந்து; வந்து அவண் இறுத்த = வந்து உன்தலைநகர்கண் தங்கிய; இரும்பேரொக்கல் = வறுமையால் உடல்கறுத்த என்னுடைய பெரிய சுற்றம். தொல்பசி உழந்த = நெடுநாட்-களாக விடாது தொடர்ந்து பற்றிக் கொண்டுவரும் பசித்-துன்பத்தால் வருந்திய; பழங்கண் வீழ = துன்பமெல்லாம் கெடும்படி; எஃதுகு போழ்ந்து அறுத்த = கூரிய அரிவாளால் பிளந்து அறுக்கப்பட்ட; வால் நிணக்கொழுங்குறை = வெள்ளிய கொழுப்பு படிந்த கொழுத்த இறைச்சித்துண்டு-களையும்; மைஊன் பெய்த = ஆட்டிறைச் சிகலந்து ஆக்கிய: வெண்ணெல் வெண்சோறு = வெண்ணெல் அரிசியாலான வெண்சோற்றினையும்; நனையமை கள்ளின்தேறலொடு = இஞ்சிப்பூ முதலாயின இட்டுப் பக்குவம் பெற்ற கள்ளின் தெளிவோடு; மாந்தி = உண்டு பசிநீர்ந்து; நீர்ப்படுபருந்தின் ஈர்ஞ்சிறகு அன்ன = தண்ணீரால் நனைந்து ஈரம்பட்ட பருந்தின் சிறகுபோல் கிழிந்து காட்சி அளிக்கும்; நிலம்தின் சிதாஅர் = மண்படிந்து அழுக்கேறிய கந்தலாடையை; களைந்த பின்றை = களைந்துவிட்ட பின்னர்; நூலாக்கலிங்கம் = நூற்கப் படாத நூலாகிய, பட்டு நூலால் ஆன பட்டாடையை; வால்-அரைக் கொளீஇ = சிறப்பாக அரையில் உடுத்திக்கொண்டு; வணர் இருங்கதுப்பின் = அடர்ந்து நீண்டு வளர்ந்த கூந்த லும்; வாங்கு அமைமென்தோள் = வளைந்த மூங்கில் போலும் மென்மையுற்ற தோளும் உடையராகிய; வசைஇல் மகளிர் =

நாண், கற்புபோலும் மகளிர்க்குரிய பண்புகளில் குற்றமிலா மகளிர்; வயங்குஇழை அணிய=விளங்கும் சிறந்த அணிகளை அணிந்துகொள்ள; அமர்பு=மிகவும் விரும்பி; மெய் ஆர்த்த சுற்றமொடு=உன் உடலோடு இரண்டறக்கலந்தாற்போல், உன்னைச் சூழ்ந்திருக்கும் அமைச்சர் உள்ளிட்ட அரசியல் சுற்றத்தாரோடு; நின்பெருங்கலி மகிழ்வு=அரசவையில் அரியணைமீது வீற்றிருக்கும் பெருமைமிக்க உன் திருவோலக் காட்சி இன்பம்; நுகர்தற்கு இனிது=கண்டு மகிழ்தற்கு இனிது.

தன் நாட்டுக்கு அணித்தாக உள்ள அனைத்து அரசுகளை-யும் அழித்தொழிக்கும் போர்வெறி படைத்தவன் அல்லன் நெடுஞ்சேரலாதன். அவன் நாட்டை அடுத்துச் சிற்றரசர் பலர் அரண்அமைத்து அரசுபுரிந்தனர் என்றாலும், அவர் அனைவரும் அவனைக்கண்டு அஞ்சினரல்லர். தம்மிடம் வாட்போரில் வல்ல வீரர் பெரும்படை உளது என்ற செருக்கால், தம் அண்டை நாடுகள் மீது படையெடுத்துச் சென்று, அந்நாடுகளின் அரசர்களை அழித்து, அன்னார் நாடுகளைத் தமதாக்கிக்கொள்ளும் மண்ணாசைகொண்ட, போர் வெறி உடையார்மீது மட்டுமே நெடுஞ்சேரலாதன் கடுஞ்சினம் கொள்வான்; அவர்களை மட்டுமே அழிதொழிக்கத்துணிவன். அதனால், அத்தகைய மண்ணாசை கொண்ட கோட்டைக்கு உரியவர் மட்டுமே அவனைக்கண்டு நடுங்குவர். நெடுஞ்-சேரலாதன் போர்த்திட்டம், இத்தகைய நெறியோடுபட்டது. என்பதை விளக்கவே, புலவர், அவனைக்கண்டு நடுங்கும் அரசர்களைக்குறிப்பிடுங்கால், கொன்னே, "அரசு" என்று மட்டும் குறிப்பிடாமல், பிற நாட்டு மண்ணைக்கைப்பற்றிக் கொள்ளும் வீரர்களை உடைய அரசு எனும் பொருள் தோன்ற, "இடம் கவர் கடும்பின் அரசு" என்று குறிப்பிட்டுள்ளார்.

சிங்கஏறு உலாவரும், மலைச்சாரலில் கூட்டம் கூட்டமாக வாழும் இயல்பினவாய, யானைஇனமும், மான் இனமும்

போல்வன, அணுகவும் நெஞ்சு நடுங்கி ஒடுங்கிக் கிடப்பது போல, காவல்மிக்க கோட்டைகளுக்கு உரியராக இருந்தும், சேரலாதன் ஆற்றலை நினைந்து, கண்ணுறக்கம் ஒழிந்து கலங்கிக் கிடக்கும் காட்சி, படைக்கலன்களின் முனைமுரிந்து போமாறு பகைவரை அழித்து வெற்றிகொள்வது, உண்மை வீரனுக்கு அழகாது. அரவு குடிவாழும் புற்றையும், கொல்லேறு உலாவும் ஊர் மன்றையும் அணுகவும் அஞ்சி அகன்றுபோவது போல், இவ்வரணகத்தே உள்ளான், ஒரு வீரன் எனக் கேட்டகணமே, பகையரசரெல்லாம் அஞ்சி அகன்று ஓட, வாழும் வாழ்வே, உண்மை வீரத்துக்கு அழகாம் என்ற கருத்தமைந்த, மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார் பாட்டை நினைவூட்டிவிடுவது உணர்க.

இரும்பு சிதைய நூறி, ஒன்னார்
இருஞ்சமம் கடத்தல் ஏனோர்க்கும் எளிவதே;
நல் அரா உறையும் புற்றம் போலவும்,
கொல் ஏறு திரிதரும் மன்றம் போலவும்,
மாற்றரும் துப்பின் மாற்றோர், பாசறை
உளன் என வெரூஉம் ஓர் ஒளி
வலன் உயர் நெடுவேள் என் ஐ கண்ணதுவே

—புறம் : 309

# 3. பூத்த நெய்தல்

நிலம், நாடாகிவிடுவதால் நலம்பெற்று விடுவதுமில்லை; காடாகவேயிருப்பதால் கேடுற்றுப்போவதும் இல்லை. நிலம் நல்லதாதலும் தீதாதலும், அது நாடாகவும், காடாகவும் இருப்பதால் மட்டும் ஆகிவிடுவதில்லை. நிலத்தில் தொழில் புரியும் ஆடவரின் நன்மை தீமைக்கு ஏற்பவே, நிலத்தின் நன்மையும் தீமையும் அமையும். ஆடவர் நல்லவராயின், நிலமும் நல்லதாம். ஆடவர் தீயவராயின், நிலமும் தீதாம். இவ்வாறு கூறியுள்ளார் ஒரு பெரியவர்.

இவ்வுண்மை உரைக்குச் சான்றுபகர்ந்து நிற்கும் நிலை, இமயவரம்பன் இருந்தாளும் நாட்டிற்கும், அவன் பகை-பெற்று அழிவுற்ற நாட்டிற்கும், இருப்பதைக் கண்டார் புலவர் குமட்டூர்க் கண்ணனார்.

இமயவரம்பன் பகைபெருதபோது, அவன் பகைவர் நாடு பெற்றிருந்த பெருவளப்பெருமையைப், பார்த்திருந்தார் புலவர். ஆனிரைகள் புல்மேயுமளவு, புல்லும்பூண்டும் முளைத்து மேய்புலமாகவே விளங்கிய, மேட்டு நிலங்களெல்லாம், ஆரல்மீன்பிறழுமளவு நீர்வளம்மிக்க நன்செய்களாகமாறியிருந்தன எருதுகள் ஒன்றோடொன்று போரிடுவதினாலேயே, வயல்கள் சேருகிவிடுவதால், ஏர்கொண்டு உழவேண்டாமலே விதைக்குமளவு, பண்பட்டுத் திகழ்ந்தன. கரும்புவிளை கழனிகளில் எப்போதும் நீர் நிறைந்திருந்தமையால், அக்கரும்புப் பாத்திகளில் வளர்ந்து மலர்ந்திருக்கும் நெய்தல், எருமைகளுக்குத்தாமே சிறந்த உணவாகிவிடுவதால், கரும்பைத் தின்னவேண்டும் என்ற கருத்து, அவற்றின் உள்ளத்தில்

தோன்றுவாறு தடைசெய்து, கரும்பிற்கு மறைமுகக் காவலாக வும் அமைந்தன. மகளிர், ஆம்பல் இலைகளால் ஆன, ஆடை உடுத்து, அதன் மலர்களால் ஆன மாலைஅணிந்து, மனம் நிறை மகிழ்ச்சியால், ஓவெனும் ஒலியெழத், தம்மை மறந்து துணங்கை ஆடுவதால், அவ்வாடிடம்எங்கும் உதிர்ந்து கிடக்கும் ஆம்பல் மலர் இதழ்களையும், தழைகளையும் மேய்ந்து உயிர் வாழலாயின, முதுமையால் தலைதளர்ந்து, தொலை விடம் செல்லமாட்டா, முதியபசுக்கள். மேலும், காணும் இடம் எங்கும், ஓங்கிஉயர்ந்த தென்னைகளும், மகிழ்ந்து குரல் எழுப்பும் புள்ளினம் நிறைந்த மருதமரங்களுமே காட்சி அளித்தன. வயல்களுக்கு நீர்போக்கும் வாய்க்கால்களைக் கொண்ட, மலர்ப்பொய்கைகள் பல, ஆங்காங்கே காட்சி அளித்தன. இத்தகு செல்வச் செழுமையைச் சிறக்கப்-பெற்றிருந்தமையால், புலவர்பாடும் புகழ்நிறைந்த பெருமையுற்றிருந்தது அந்நாடு.

நாடு, இவ்வாறு நனிமிகச் சிறந்திருந்தும், அந்நாட்டை ஆளும் ஆடவர், நல்லவரல்லராகவே, அந்நாட்டின் நலமெலாம் ஒருங்கே அழிந்துபோயின. ஆளும் அரசர்பால், நலம் இல்லாதுபோகவே, அந்நாடு, இமயவரம்பன் சினக்கண்ணின், பார்வைக்குள் சிக்கிக்கொண்டது. அவ்வளவே, நாடு எனும் இயல்பையே, அது இழந்துவிட்டது. இமயவரம்பன், படை-யோடு ஆங்குச்சென்று தங்கிவிட்டான். நாட்டு மக்கள் உள்ளத்தில், அதுவொன்றே பேரச்சம் ஊட்டிவிட்டது.

அந்நாட்டின் அழகு, அப்போதே அழிந்து விட்டது. உயிர்போக்கும் கொடுநோயால் தாக்குண்டு உயிரிழக்கும் நிலையுற்றுன் உடலேபோல், உருக்குலைந்துவிட்டது. போர்-வரவு கண்டு அஞ்சிய மக்கள், அந்நாட்டை விட்டே வெளி-யேறிவிட்டார்கள். அதனால், விளைநிலங்கள் பாழுற்றன.

கரும்புவிளையும் கழனிகளெல்லாம், கரம்புகளாய்க் காட்சி அளித்தன. விடைத்தேரை மரங்களும், உடைமரங்களுமே எங்கும் வளர்ந்திருந்தன. மகளிர் துணங்கையாடி மகிழ்ந்த இடங்களிலெல்லாம், பேயும் பிசாசும் திரியலாயின. மன்றங்களில் மக்கள்அமர, ஆங்கு அமைத்திருந்த மேடைகள், போர்க்களப் புழுதிபடிந்து மாசடைந்துபோயின. மக்கள் ஆரவாரம் அற்ற அவ்விடங்களை, அணுகவும் அஞ்சவேண்டியதாயிற்று. ஒருவாறு உள்ளுரம் மிகுந்து, உட்புகுவார் உளரேல், சென்றவர், ஆற்றல் இழந்து அஞ்சி அலறிப்புடைத்து வருவோராயினர். இவ்வாறு பாழ்பட்டுப் போயின பகைவர்தம் நாடும் நகரமும்.

நாடுகள் நல்லனவாயிருந்தும், நாடாள்வோர்பால் நன்மையிலாக்குறையால், கேடுற்றுப்போகும் காட்சியை, இமயவரம்பனின் பகைபெற்றநாட்டில் கண்ட புலவர், கேடுற்ற நிலம், தன்னை ஆள்வோர் நன்மையால், பீடுற்றநிலமாம் பெருமையை, இமயவரம்பன் நாட்டில் கண்டார்.

இமயவரம்பன் ஆட்சிக்குட்பட்ட நாடு, அவன் ஆளத் தொடங்கும் முன், காடாகவே காட்சி அளித்தது. அவன் ஆளத்தொடங்கினன். அன்றே, அது நன்னாடாகிவிட்டது. கொடுவிலங்கு வாழ்ந்துவந்த பெருங்காடுகள், அறம் அறிந்து உரைக்கும் ஆன்றோர்களின் வாழிடமாக மாறிவிட்டன. வரகும், சோளமும் மட்டுமே விளையும் கொல்லைமேடுகளெல்லாம், உயர்ந்த அணிபல அணிந்த மகளிரும், அவர்தம் கணவராம் உழவரும், மகிழ்ந்து தொழில்புரியும் விளைநிலங்களாகிவிட்டன. ஆறலைகள்வர் அலைந்துதிரிந்த அந்நாட்டுப் பெருவழிகள், ஆன்றோர்களும், அணிபலபூண்ட ஆரணங்குகளும் அச்சம் ஒழிந்து, தனித்தே கடக்கும் அருமையுடையவாயின. சேரலாதன் செங்கோற்சிறப்பால், மழை

வேண்டும்காலத்தில், வேண்டியஅளவே பெய்யலாயிற்று. அதனால் நெல்முதலாம் உணவுப்பொருள்களை உளவாக்கித்-தரும், உழவர்களும் உயர்வாழ்வுடையராயினர்; அவர்கள் உளவாக்கும் உணவு முதலாம் பொருள்களைப், பிற நாடுகளுக்குக் கொண்டு சென்று விற்று, ஆங்குள்ள பொருள்-களுள், தம் நாட்டவர்க்குத் தேவையாம் பொருள்களை வாங்கி வரும் வணிகர்களும், வனப்புமிகு வாழ்வுடையராயினர். அதனால் நாட்டில் பசிஒழிந்தது. பசி ஒழியவே பிணிஇல்லை. அதனால் பகை அச்சமும் அகன்றது.

இமயவரம்பன் நாட்டின், இவ்வின்பக் காட்சியைக்-கண்டார் புலவர். இந்நலம் என்றும் அமைந்திருக்கவேண்டும் என்ற பேரவா, அவர் உள்ளத்தில் பெருகி எழுந்தது. அதனால் அவன் பகைவர்நாட்டுத் தாழ்வையும், அவன் நாட்டு வாழ்வையும் அவனுக்கு எடுத்துக்காட்டி, அவன் ஆற்றலைப் பாராட்டுவார்போல், ''இமயவரம்ப ! உன் பகைவர் நாடு, இயல்பாகவே பாழுற்ற நாடன்று; அது அந்நாட்டு அரசரின் அறியாமையால் வந்தது. அதைப்போலவே, உன்நாடு. இயல்பாகவே, இன்பத்தின் நிலைக்களமாயதன்று. அது உன் செங்கோல் திறத்தின் சீரியபயன். ஆகவே, இம்முறை மாறி, நீயும் அழிகோலனாகிவிடின், உன்நாட்டின் நலனும் நசிந்துவிடும். உன்பகைவர் நாட்டிற்குப், பிறரால்வந்துறும் அழிவுபோலும் அழிவு, உன் நாட்டிற்கும் வந்துறும் ஆகவே, உன்பகைவர் நாட்டு அழிவுகண்டு மகிழும் அதே நிலையில், நல்லதோர் அரசியல் நெறியினையும் அறிந்து அதன்வழி நடப்பாயாக! ''என்று, கூறாமல் கூறி அறிவூட்டினார்

வளமும் சுவையும் மிகுந்து, எருமைகளுக்கு வயிறார உண்ணும் உணவாகிப் பயன்படும் நிலையால், அவ்வெருமை-களைக், கரும்பினைத் தின்னவொட்டாமல் செய்யும் முகத்தான், கரும்பிற்குக் காவலாகவும் அமையும், நெய்தலின் சிறப்பை-

யுணர்த்தும் பெருமை, "**பூத்த நெய்தல்**" என்ற தொடர்க்குப், பொருந்தி யிருப்பதுகண்டு, இப்பாட்டிற்கு அத்தொடரையே பெயராக்கி யுள்ளார்கள் சில பெரியார்கள்.

13. "தொறுத்தவயல் ஆரல் பிறழ்நவும்
ஏறுபொருத செறு உழாது வித்துநவும்
கரும்பின் பாத்திப் **பூத்த நெய்தல்**
இருங்கண் எருமையின் நிரை தடுக்குநவும்,
கலிகெழு துணங்கை ஆடிய மருங்கின்
வளைதலைமூதா ஆம்பல் ஆர்நவும்,
ஒலிதெங்கின், இமிழ்மருதின்,
புனல்வாயின் பூம்பொய்கைப்
பாடல்சான்ற பயங்கெழு வைப்பின்
நாடு கவின் அழிய, நாமம் தோற்றிக்
கூற்றறுஉ நின்ற, யாக்கை போல
நீ சிவந்து இறுத்த நீரழி பாக்கம்
விரிபூங் கரும்பின் கழனி புல்லெனத்,
திரிகாய் விடத்தரொடு காருடை போகிக்
கவைத்தலை பேய்மகள் கழுது ஊர்ந்து இயங்க,
ஊரிய நெருஞ்சி நீறு ஆடு பறந்தலைத்
தாது எரு மறுத்த, கலை அழி மன்றத்து,
உள்ளம் அழிய, ஊக்குநர் மிடல் தபுத்து
உள்ளுநர் பனிக்கும் பாழாயினவே;
காடே கடவுள் மேன; புறவே
ஒள் இழை மகளிரொடு மள்ளர் மேன;
ஆறே அவ்வனைத்து; அன்றியும், ஞாலத்துக்
கூலம் பகர்நர் குடி புறந்தரஅக்
குடிபுறந் தருநர் பாரம் ஓம்பி,
அழல்சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது
மழைவேண்டு புலத்து மாரி நிற்ப

நோயொடு பசி இகந்து ஒரீஇப்
பூத்தன்று பெரும! நீ காத்த நாடே''.

பெரும! (28) நாடு (1-10) கூற்றடூ நின்ற யாக்கை-போல (11) கவினழிய, நாமம் தோற்றி (10) நீ சிவந்திறுத்த பாக்கம் (12) கழனி புல்லென, உடைபோகி பேய்மகள் இயங்க, மன்றத்து அழிய, தபுத்து பாழாயின. (13-19) நீ காத்தநாடு (28) பூத்தன்று (20-28) என முடிக்க.

பெரு=பெருமானே! தொறுத்தவயல் = பசுக்கூட்டம் புல்மேயும் கொல்லைமேடுகளெல்லாம்; ஆரல் பிறழ்நவும்= ஆரல்மீன் உலாவவல்ல நீர்நிறை நன்செய்களாயினவும்; ஏறு பொருதசெறு=எருதுகள் போரிட்டதால் சேறுபட்ட வயல்கள்; உழாதுவித்துநவும்=உழவேண்டாமலே விதைக்கும் வளம் உடையவாயினவும்; கரும்பின் பாத்தி பூத்த நெய்தல்= கரும்புப் பாத்திகளில் முளைத்து மலர்ந்திருக்கும் நெய்தல், இருங்கண் எருமையின் நிறை தடுக்குநவும்=பெரிய கண்களை யுடைய எருமைக் கூட்டத்தைப் பிற புலம் நாடிச் செல்லாவாறு தடுக்கும் வளம் உடையவாயினவும். கலிகெழு துணங்கை ஆடிய மருங்கின்=ஆரவாரம் எழ, மகளிர் துணங்கைக்-கூத்தாடும் இடங்கள். வளைதலைமூதா=வளைந்த தலையுடை-யவாகி விட்ட முதிய பசுக்கள். ஆம்பல் ஆர்நவும் = மகளிர் உதிர்த்த ஆம்பல் இலைகளையும் மலர்களையும் மேயும் இடங்-களாயினவும். ஒலிதெங்கின்=தழைத்து வளர்ந்த தென்னை-களையும். இமிழ்மருதின்=பறவைகள் ஒலிக்கும் மருதமரங்-களையும். புனல்வாயின் பூம்பொய்கை = புனல்போக்கும் கால்வாய்களையும், தாமரைப் பொய்கைகளையும் உடைய, பாடல்சான்ற = புலவர் பாராட்டப்பெற்ற. பயங்-கெழுவைப்பின்=பொருள்வளம் பொருந்திய ஊர்களையுடை-யனவுமாகிய; நாடு=உன் பகைவர்நாடு. கூற்று அடுஉ

நின்ற யாக்கைபோல — கூற்றுவனால் அலைக்கப்பட்ட உடல் உருக்குலைந்து போதல்போல். கவின்அழிய = அழகிழந்து போகுமாறு. நாமம் தோற்றி — அந்நாட்டு மக்கள் உள்ளத்தில் முதற்கண் படையெடுப்பு அச்சத்தை உண்டாக்கிவிட்டு. நீ சிவந்து இறுத்த — நீ சினம் மிகுந்து, நாற்படையோடு சென்று தங்கிவிட்டமையால். நீர் அழி பாக்கம் — தன் இயல்பு கெட்டுப் போன பேரூர்கள். விரிபூங் கரும்பின் கழனி புல்லென — மலர்ந்த வெண்பூக்களையுடைய கரும்பு விளையும் கழனிகள், விளைவிழந்து பொலிவிழந்துபோக. திரிகாய் விடத்தரொடு — முறுக்குண்ட காய்களையுடையவாகிய விடத்தேரை மரங்களோடு; கார் உடைபோகி — கரிய உடை மரங்களும் வளர்ந்து ஓங்கவும்; கவைத்தலைப் பேய்மகள் — இரு பிளவாய்ப் பிரிந்து முறுக்குண்ட மயிர்களையுடைய பேய்கள்; கழுது ஊர்ந்து இயங்க = கழுதைமீது ஏறித்திரிய. ஊரிய நெருஞ்சி — பரந்த நெருஞ்சிமுட்செடிகளையுடைய. நீறுஆடு பறந்தலை தாது எரு மறுத்த = செந்தூள் பறக்கும் போர்க்களத்திலிருந்து எழுந்த புழுதியாகிய குப்பைகளால் மாசுபடிந்த. கலிஅழிமன்றத்து — மக்கள் வழங்கும் ஆரவாரம் அடங்கிய மன்றங்களில். ஊக்குநர் உள்ளம் அழிய — செல்லுமாறு ஊக்குவோரின் உள்உரம் அழியவும், உள்ளுநர் மிடல் தடித்து = செல்ல நினைவோரின் ஆற்றலை அழித்து. பனிக்கும் பாழாயின அச்சுறுத்துமளவு பாழிடங்களாயின. நீ காத்த நாடு = நீ இருந்து ஆளும் உன் நாடு. காடே கடவுள்மேன = காடுகள் அறவோர் வாழும் இடங்களாயின. புறவே = கொல்லைமேடுகள். ஒள்ளிழை மகளிரொடு மள்ளர்மேன — ஒளிவீசும் அணிகள்பூண்ட மகளிரும், மைந்தரும் தொழில்புரியும் விளைபுலன்களாயின. ஆறே அவ்வனைத்து — பெருவழிகளும் அந்நல்லியல்பே உடையவாயின. அன்றியும் = மேலும். ஞாலத்து — உலகில். கூலம் பகர்நர் குடிபுறந்தராஅ — நெல் முதலாம் கூலப்பொருள்களைவிற்கும் வணிகர்களைப் பேணியும்,

குடி புறந்தருநர் பாரம் ஓம்பி = உணவாக்கி உயிர்களை ஓம்பும் உழவர்களின் பெருங்குடியைப் பேணியும். அழல் சென்ற மருங்கில் = தீய கோளாகிய செவ்வாய் சென்ற இடத்திற்கே. வெள்ளிஓடாது = நல்ல கோளாகிய வெள்ளியும் சென்றுவிடாது நல்லிடத்தே நிற்பதால், மழைவேண்டு புலத்து = மழை வேண்டிநிற்கும் நிலங்களில். மாரி நிற்ப = மழைபெய்ய. நோயொடு பசி இகந்து ஒரீஇ = நோயையும் பசியையும் இல்லையாக ஒட்டி. பூத்தன்று = பொலிவு பெற்றது.

அரசன் செங்கோல் நெறிமறந்து, கொடுங்கோல் நெறி சென்று விடுவனாயின், வெள்ளிமுதலாம் கோள்களும், தம்நிலை மாறிவிடும். அவை நிலைமாறிவிடின், நாட்டில் மழைமாறி-விடும். மழை மாறிவிட்டால் மண்ணுலகில் உயிர்வாழ்க்கை நடைபெறாது. "கோன் நிலை திரிந்திடின், கோள் நிலைதிரியும்; கோள் நிலைதிரிந்திடின் மாரி வறங்கூரும்; மாரி வறங்-கூரின், மன் உயிர் இல்லை" (மணிமேகலை 7: 8—10) எனச் சாத்தனாரும், நல்லாட்சிக்குரிய இயல்பு வழிநின்று அரசு நடாத்துவோன் நாட்டில், மழையும், அது துணையால் உளவாம் விளையுளும் சிறந்த வளங்கொழிக்கும். "இயல்புளிக்-கோலோச்சும் மன்னவன் நாட்ட, பெயலும் விளையுளும் தொக்கு." (குறள்: 545) என்ற உடன்பாட்டுநிலை, மன்னவன் முறைகெட அரசு நடத்துவனாயின், அவன் நாட்டில் மாரியும் கெட்டுப்போகும்: "முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம் பெயல்" (குறள்: 559) என்ற எதிர்மறை நிலைகளில், வள்ளுவரும், கூறி ஒரு நாடு மழைவளம் குன்றாது உளது என்றால், அந்நாட்டின் அரசு அறவழி அரசு என்பது பொருளாம் என்பதை உறுதி செய்துள்ளனர். நெடுஞ்-சேரலாதன், நல்லரசு நடாத்தும் நல்லோன் என்பதைக்கூற விரும்பிய புலவர், குமட்டூர்க் கண்ணனாரும், சாத்தனாரும்

வள்ளுவரும் காட்டிய, அவ்வுத்தியை மேற்கொண்டு, நல்லதே செய்யும் வெள்ளி, கேடுவிளைவிக்கும் செய்வாய்க் கோள்வழி செல்லாது நிற்க, சேரலாதன் நாட்டில், விளைநிலம் வேண்டும் மழை, வேண்டியவாறே பெய்யும்—''அழல் சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது, மழை வேண்டுபுலத்து மாரி நிற்ப'' எனக் கூறியிருக்கும் நயம், நினைத்தொறும் இனிமை பயப்பது.

''கூலம் பகர்நர் குடிபுறந் தராஅக்
குடிபுறந் தருநர் பாரம் ஓம்பி''

என்ற இவ்வரிகள் சொல் அமைப்பாலும், பொருள் செறிவாலும்

''பகடு புறந்தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறம் தருகுவை ஆயின், நின்
அடிபுறம் தருகுவர் அடங்காதோரே''

என்ற புறநானூற்று வரிகளை (35) நினைவூட்டல் உணர்க.

''கிழங்கு தேடும் ஆண் பன்றிகள் தோண்டுவதால் நிலம் வேறுபட்டுவிடுவதால், உழவர், ஏர்கொண்டு உழுவது வேண்டாதே விதைப்பதற்கான அகச்சான்று, ''கடுங்கண் கேழல் உழுத பூழி நன்னாள் வருபதம் நோக்கிக் குறவர், உழாஅது வித்திய பருஊக்குரல் சிறுதினை'' (புறம்: 168) என்பதுபோலும் வரிகளில் இருப்பதையும், பன்றியின் ஆண், ஏறு என அழைக்கப்பெறும் எனத் தொல்காப்பியர் விதிவகுத் திருப்பதையும் ''பன்றி புல்வாய் உழையே கவரி, என்றிவை நான்கும் ஏறு எனற்கு உரிய'' (தொல். மரபு: 593) கருத்தில்கொண்டு, ''ஏறுபொருத செறு உழாது வித்துநவும்', என்ற தொடரில்வரும், ஏறு என்ற சொல்லுக்கு,"ஆண் பன்றி எனப்பொருள்கொண்டு, பன்றிகள் தம் மருப்புகளால் கிண்டிப்-புழுதி ஆக்கிய புலம்எனப் பொருள் கொள்வர்சிலர்.

''பன்றி புல்வாய் உழையே கவரி, என்றிவை நான்கும் ஏறு எனற்கு உரிய'' ''எருமையும் மரையும் பெற்றமும் அன்ன'' ''கடல் வாழ் சுறவும் ஏறு எனப்படுமே'' (தொல்: மரபு: 38, 39, 40) எனத் தொல்காப்பியர், விதிகள் வகுத்திருந்தாலும், ஏறு எனும் சொல் தனித்து நின்றவழி, பன்றி முதலானவற்றின் ஆணைக் குறிப்பது இல்லை; மாறாக, ''ஏற்றினம் பன்றி'' ''ஏற்றினம் கவரி'' (தொல் மரபு 40 மேற்கொள்) ''ஏற்றெருமை'' (கலி 103) ''கடமா நல்லேறு'' (புறம் : 157, 202) ''புரியுடை மரையான் கருநரை நல்லேறு'' (குறுந். 317) ''சுறவேறு'' (கலி ; 84) ''திரி மருப்பு இரலை அண்ணல் நல்லேறு'' (குறுந். 338) என, இனம் தெரியவரும் இடங்களில் மட்டுமே வழங்கப்படும்.

இவ்வியல்புக்கு மாறாக, ''ஏறு'' எனும் சொல். தனித்து ஆளப்படும் இடங்களிலெல்லாம், அது ஆணினத்து ஆணைக்குறிக்க மட்டுமே வழங்கப்படும். ''ஊர்தி வால்வெள் ஏறே'' (புறம் : கடவுள் வாழ்த்து) ''கொல்லேறு'' திரிதரும் மன்றம்'' புறம்: 309) ''கொல்லேற்றுக் கோடு அஞ்சுவானைப் புல்லாளே ஆயமகள்'' (முல்லைக்கலி : 5) ''நல்லேறு இயங்கு தோறியம்பும் பல்லான் தொழுவத்து ஒருமணிக் குரலே'' (குறுந் :190) ''எல்லூர்ச் சேர்தரும் ஏறுடை இனம்'' (குறுந் : 275) ''இமிலேறு எதிர்ந்தது இழக்கு என அறியான்'' (சிலம்பு. 16: 100) என்ற தொடர்களில் ஆளப்பட்டிருக்கும் ஏறு எனும் சொல், ஆனேறு குறித்தே வருவது காண்க.

பன்றிகள் கிண்டுவதால் விளைநிலம் சேறுபடுவது போலவே, கொல்லேறுகள் போரிடுவதாலும், நிலம் சேறுபடுவதும், அவ்வாறு சேறுபட்டு விடுவதால் உழவர் மேலும் உழுவது செய்யாதே, விதைத்தலும் ஆகிய, நிகழ்ச்சிகளுக்கும் இலக்கியச்சான்று உண்டு. பைஞ்சாய் கொன்ற மண்படு-

மருப்பின் காரேறு பொருத கண்ணகன் செறுவின் உழாஅ நுண்தொளி நிரவிய வினைஞர் முடிநாறு அழுத்திய நெடுநீர்ச் செருவு'' (பெரும்பாண் : 209-212) என்ற வரியினைக்காண்க.

ஆகவே, ''ஏறுபொருத செறு உழாது வித்துநவும்'' என்ற தொடரில் வரும், ஏறு என்னும் சொல்லுக்குப், பன்றியின் ஆண் எனப் பொருள்கோடல், பொருந்தாது. ஆனேறு எனப் பொருள் கோடலே, சாலவும் பொருந்தும்.

# 4. சான்றோர் மெய்ம்மறை

இமயவரம்பன் ஆற்றல், புகழ், அருள், அளப்பரும் செல்வம் ஆகிய நலன்களைக் கேட்டறிந்து, அவனைக் காண வேண்டும் எனும் ஆர்வம் உந்த வந்த புலவர், குமட்டூர்க்-கண்ணனார், அவன் அரசவையில் சிலநாள் வாழப்பெற்றதும், அவன்பால் அமைந்து கிடக்கும் அரும்பெருங் குணங்களைக் கண்ணெதிர்காணும் வாய்ப்பினைப் பெற்றார்.

நிலத்தையும், நீரையும், காற்றையும், வானத்தையும் அளந்து மதிப்பிடுவது எவ்வாறு இயலாதோ, அவ்வாறே இமயவரம்பன் இயல்புகளையும் அளந்து மதிப்பிடுவது இயலாது. அறிவும், அருளும் நிறைந்து வழியும் அக வொளியைப் புறங்காட்டும் அவன் முகவொளிக்கு, இணையான ஒளியை யாண்டும் காண்பது இயலாது. ஒவ்வொரு நிலையில் நின்று, ஒவ்வொரு காலத்தில், உலகிற்கு ஒளிதருவனவாகிய நாள், கோள், ஞாயிறு, திங்கள், ஊழித்தீ அனைத்தும், ஓரிடத்-தில் ஒன்று கூடியிருந்து, ஒருசேர ஒளிதந்தால், அவ்வொளி எத்துணைப்பேரொளியாமோ, அத்துணைப்பேரொளி வீசிற்று இமயவரம்பன் இன்முகம். பாரதப்போரில், இயல்பாகவே போர்வன்மை வாய்த்தவராகிய, நூற்றுவர்க்குப் படைத்துணை யளிக்குமளவு பேராற்றல் உடையவனாகிய அக்குரன் என்பவன்பால் அமைத்துகிடந்த கொடைவளம், இவன்பாலும் குடி கொண்டிருந்தது.

'எம்மை எதிர்ப்பவர் இந்நிலவுலகில் எவரும் இலர்: உளரேல் வருக' என வஞ்சினம் கூறிய வேந்தர்களை யெல்-லாம்வென்று, தம் ஆண்மையை நிலைநாட்டிய மாவீரர்களின்,

மனச்செருக்கையெல்லாம் அழித்து, வெற்றி கொள்ளவல்ல அடலேருக விளங்கினன் இமயவரம்பன். தான் கைப்பற்றக் கருதிய உயிரை, அவ்வுயிருடையார், வாழ்க்கையில் எத்துணை உயர்வுடையராயினும், பற்ற நினைந்த நேரத்தில், பிழையறப் பற்றிச் செல்லவல்ல பேராற்றல் வாய்ந்தவன் யமன். அவனே சினந்து செருமேற்கொண்டு வந்தாலும், இமயவரம்பன் அஞ்சான். அவனையும் வென்று துரத்தும் ஆற்றல் அவன்பால் அமைந்து கிடந்தது. மேலும் அத்தகைய பெருஞ்செயல் புரிவதற்கேற்ற, பலம் பொருந்திய உடலமைப்பும், அவனுக்கு வாய்த்திருந்தது. தான்வென்ற பகையரசர் எழுவரின், ஏழு முடிகளையும் அழித்து, அப்பொன்னால் ஆக்கிய அழகிய பெரிய அணியைத் தாங்குமளவு, பரந்து அகன்ற மார்பு, வலிமை-யுலாவும் பருத்து நீண்ட தோள்கள், ஆகிய உறுப்பு நலத்தால் உயர்ந்துவிளங்கினமையால், ''போர்க்களத்திற்குப்படைவீரர்-கள் முன்னே செல்க. பாய்ந்துவரும் பகைவர் படையாலாம் அழிவினையெல்லாம் அவர்களே ஏற்கட்டும்; பகைவர் தளர்ந்த நிலைநோக்கி இறுதியில் செல்வோம் நாம்' என்று எண்ணுமல், போர்க்கவசம், போர்வீரன்உடலை மறைத்துக் காப்பது-போல், களப்போரில் வீரர்களைப் பின்னே நிறுத்தி முன்னே நின்று போரிட்டு, பகைவர் தாக்குதலையெல்லாம் தானே தாங்கித், தன் படைவீரரைப் பேணிக்காக்கும் பேராண்மை-யுடையவன் இமயவரம்பன்.

இயல்பாகவே பேராற்றல் வாய்ந்தவனுகிய அவன்பால், பெரும்படையும் இருந்தது. மலைநாட்டு மன்னனுகிய அவன்பால், வேழங்கள் மலிந்த உம்பற்காட்டு நாடும் இருந்தமையால், அவன்படையுள் வேழப்படையே சிறந்து விளங்கிற்று. பகைவர்களின் பெரிய பெரிய கோட்டைகளை-யெல்லாம் பாழ்பண்ணத் துணைபுரிவது வேழங்களேயாதலின்,

அவ்வேழப் படையையே அவனும் பெரிதும் விரும்புவன். அப்படை யுடைமையால், அவன் நாற்படை எப்போதும் வெற்றிக் கொடியேந்தியே உலாவரும்.

இமயவரம்பன் ஆற்றல் ஆண்மைகளில் மட்டுமே சிறந்தவன் என்று நினையன்மின். அன்பு அருள் ஆகிய அரும்-பண்புகளும், அவனிடம் மிகப்பரந்தஅளவில் பொருந்தி-யிருந்தன. மகளிர்க்கு அணியாவது, கணவன்மார் தம்பால் காட்டும் அன்பு ஒன்றே. அவ்வன்பு இமயவரம்பன்பால் குறைவறப் பெருகியிருந்தமையால், அப்பேறுபெற்ற, அவன் மனைவிபால், ஏனைய அழகுகள் எல்லாம், இயல்பாகவே வந்து குடிபுகுந்தன. அவள் இயற்கை அழகு காணும் இமையவர், தம்அழகிகளெல்லாம், 'இவள் அழகு என்னிடமே உளது; இல்லை, என்னிடமே உளது' எனத், தமக்குள்ளே பகை-கொள்வர் என்றால், அவள் அழகின் பெருமையை என்னென்பது! அத்துணைப் பேரழகியான அவள், கருத்து நீண்ட கூந்தலின் ஒளியும் ஒளிகுன்றுமளவு, ஒளிவீசும் நவமணிகள் இழைத்த தலைக்கலனும், காதுமறையுமளவு ஒளிவீசும் குழையும் அணிந்து காட்சிதருவள். அவளை, இத்துணைப் பேரின்ப வாழ்வில், வாழப்பண்ணுவது, இமயவரம்பன் அன்பே. வாழ்க உரிமைமகளிர்பால் அவ்வன்பு செலுத்தும் இமயவரம்பன்! தன் அரசவைவந்து தன்னைப் பாடிப்பரவும் பாணர்க்குள், பெண்டிர்பால் பேரருள் கொண்டு, அவர் விரும்பும் பரிசில்கள், பல அளித்து அனுப்புவன்.

இவ்வாறு வாழ்வாங்கு வாழும் இமயவரம்பனின் வளமார் வாழ்வைக்கண்டு மகிழ்ந்த புலவர், இவ்வளம், அவன் பிறந்த குடியின் பெருமையால் வந்தது. தம் அரச ஆணை இனிது செல்ல, தமிழகம் அனைத்திலும் தம் ஒருகுடையே நிழல் செய்ய, நெடிது ஆண்டு, நீள்புகழ்பெற்றவர், அவன்

முன்னோர். ஆகவே அந்நலம், இமயவரம்பன்பாலும் அமைந்துவிட்டது. தன் குலம்தந்த பெருமையைக், குன்ற விடாது காக்கும்திறம், இவன்பால் இயல்பாகவே அமைந்துளது என்றாலும், அதை அழியவிடாது காப்பது மட்டுமல்லாமல் இமயவரம்பன், நெடிதுநாள் நின்று அப்பயன் துய்க்கவேண்டும் என்றும் விரும்பினர் புலவர். விரும்பியதோடு நில்லாது, அவ்வாறே வாழ்த்திப் பல்லாண்டும் கூறினர்.

வீரர்களைத் தனக்குக் காவலாய் அமைத்துக்கொள்வதைவிடுத்து, அவர்க்குத் தான் காவலாய் அமையும், அரிய போர்ப்பண்பு வாய்ந்த பெரியான் இமயவரம்பன், என்பதைத் தோற்றுவித்த பெருமை, **சான்றோர் மெய்ம்மறை** என்ற தொடர்க்கே இருப்பதால், இப்பாட்டிற்கு அத்தொடரே பெயராய் அமைந்து விட்டது.

**14.** "நிலநீர் வளி விசும்பு என்ற நான்கின்
அளப்பரியையே;
நாள் கோள் திங்கள் ஞாயிறு கனைஅழல்
ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை;
போர் தலைமிகுந்த ஈரைம்பதின்மரொடு
துப்புத் துறைபோகிய துணிவுடை ஆண்மை
அக்குரன் அனைய கைவண்மையையே!
அமர்கடந்து மலைந்த தும்பைப் பகைவர்
போர் பீடழித்த செருப்புகல் முன்ப!
கூற்று வெகுண்டு வரினும் மாற்றும் ஆற்றலையே!
எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை!
வான்உறை மகளிர் நலன் இகல் கொள்ளும்
வயங்கு இழை கரந்த வண்டுபடு கதுப்பின்
ஒடுங்கீர் ஓதிக் கொடுங்குழை கணவ!
பல்களிற்றுத் தொழுதியொடு வெல்கொடி நுடங்கும்

படைஏர் உழவ ! பாடினி வேந்தே !
இலங்கு மணிமிடைந்த பொலங்கலம் திகிரிக்
கடலக வரைப்பின் இப்பொழில் முழுது ஆண்ட நின்
முன்திணை முதல்வர் போல நீ
கெடாஅ நல்லிசை நிலைஇத்
தவாலியரோ இவ்வுலகமோ டுடனே !

நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின்=நிலம் நீர் காற்று விசும்பு என்ற நான்கினையும் போல; அளப்பு அரியை = அளந்து காணமாட்டா ஆற்றல் உடையை. நாள்=அசுவனி முதலாம் நாள் மீன்களும்; கோள்=சனி முதலாம் கோள்களும் திங்கள், ஞாயிறு, கனைஅழல் = திங்களும், ஞாயிறும், ஊழித் தீயும்; ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை= என்ற ஐந்தும் ஒரு சேர இருந்து ஒளி வீசினாற் போலும் முகப் பொலிவு உடையை. போர் தலைமிகுந்த=போரில் சிறந்த, ஈரைம்பதின்மரொடு=நூற்றுவருடன், துப்புத்துறைபோகிய = படைத்துணையளிக்கும் பணியில் சிறந்து விளங்கிய. துணிவுடை ஆண்மை=அஞ்சாமையோடுகூடிய ஆண்மை வாய்ந்த. அக்குரன் அனைய கைவண்மையை=அக்குரன் என்பானைப்போல வரையாது வழங்கும் கொடைவளம் உடையை. அமர் கடந்து=பற்பல போர்களைவென்று. மலைந்த தும்பைப் பகைவர் = சிறந்த பேராற்றல் புலப்படுத்தும் தும்பை மாலைஅணிந்த தும்பை வீரர்க்குப் பகைவராய் நின்று ஆணவப் போர்புரியும் மறப்போர் வீரர்களின். போர்பீடு அழித்த=போரால் பெற்ற பெருமைகளையெல்லாம் அழித்த. போர்புகல் முன்ப=எப்போதும் போரே விரும்பும் வலியினை உடையாய். கூற்று வெகுண்டுவரினும்= கூற்றுவனே சினங் கொண்டு எதிர்த்தாலும். மாற்றும் ஆற்றலை= அக்கூற்றுவனையும் தோற்று ஓடப்பண்ணும் ஆற்றல் உடையை. எழுமுடி கெழீஇய=பகையரசர் எழுவர் முடிகளை அழித்து ஆக்கிய

ஆரம் விளங்கும். திருஞெமர் அகலத்து=வெற்றித்திருமகள் விரும்பி வீற்றிருக்கும் அகன்ற மார்பும். நோன்புரித் தடக்கை =வன்மை பொருந்திய பெரிய கைகளும் உடையையாய். சான்ேறார் மெய்ம்மறை=வீரர்களுக்குக் கவசம்போல் இருந்து காப்பவனே. வான் உறைமகளிர்=தேவமகளிர். இகல்கொள்ளும்=தம் முன்னே மாறுபட்டுப் போரிடுவதற்குக்-காரணமான. நலன்=இயற்கை அழகும். வயங்கு இழைகரந்த=விளங்கும் தலையணிகளால் மறைப்புண்ட. வண்டுபடு கதுப்பு=வண்டுகள் வந்து மொய்க்கும் மணம் மிக்ககூந்தலும். ஈர்ஓதி ஒடுங்கு கொடுங்குழைகணவ =நெய் ஈரம் புலராத கூந்தல் ஒடுங்கியதால், புலப்படும் வளைந்த காதணிகளும் உடைய அரசமாதேவியின் அன்புக் கணவனே. பல்களிற்றுத்தொழுதியொடு=பற்பல யானைக் கூட்டங்களோடு. வெல்கொடி நுடங்கும்=வெற்றிக்கொடி பறக்கும். படை ஏர் உழவ=படைகளை ஏராகக் கொண்டு பகைநாட்டை உழுது பயன்கொள்ளும் உழவனே. பாடினி வேந்தே=பாண்மகளிர்க்குப்பரிசளிக்கும் பேரரசனே. இலங்கு மணியிடைந்த பொலங்கலம்=ஒளிவீசும் நவமணிகள் இழைத்துப்பண்ணிய அணிகள்பூண்டு. திகிரி=அரச ஆணை செலுத்தி. கடல் அகவரைப்பின்=கடல்சூழ்ந்த இவ்வுலகில். இப்பொழில் முழுதாண்ட=இத்தமிழகம் முழுவதும் ஆண்ட. நின்முன்திணை முதல்வர்போல=உன்குலத்து முன்னோர்களைப்-போல நின்று=நிலைபெற நின்று. இவ்வுலகமோடு=இவ் வுலகில். கெடாஅ நல்இசை நிலைஇ=அழியா நற்புகழை நிலை பெறப்பண்ணி. உடனே=அதனுடன். நீ தவாஅலியர்= நீயும் அழிவின்றி வாழ்வாயாக.

உடல்வலியாலும், படைவலியாலும் சிறந்துவிட்ட வேந்தன் ஒருவன், அதனால் செருக்குமிகுந்து தன் பேராண்மையை நிலைநாட்டும் ஒரே குறிக்கோளொடு,

அண்டை அயலில் உள்ள வேந்தர்கள் மீதெல்லாம் போர்-தொடுத்துச்சென்று, தொல்லை தருவனுயின், அத்தகையான் மீது தன்னளவில் பகை இல்லையாயினும், அவன் போர் ஆணவத்தை அழித்து அடக்கிநிறுத்தவேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன், அவனை எதிர்த்து வெற்றி கொள்ளும் வீரன், தும்பைவீரன் என்றும், அவன் மேற்-கொள்ளும்போர், தும்பைப்போர் என்றும் அழைக்கப்படும். ,'மைந்து பொருளாக வந்த வேந்தனைச் சென்று தலையழிக்கும் சிறப்பிற்று என்ப'' என்பது தொல்காப்பியம் (பொருள் : 70)

நெடுஞ்சேரலாதன், சென்று தாக்கும் அழிவுப்போர்-புரிபவன் அல்லன். தம் ஆற்றல் ஆண்மைகளை நிலைகாட்ட, அரசுகள் மீதெல்லாம் சென்று தாக்கும் போர்வெறிகொண்டு திரிவாரை, வென்று துரத்தி அவர்க்குப் பாடம் புகட்டப் போர் மேற்கொண்டெழும், நல்லரசுகளையெல்லாம் பகையரசர்-களாகக்கொள்ளும், ஆணவப் போர்புரிவானை மட்டுமே எதிர்த்துப்போரிட்டு அழிப்பன். ஆகவே, அவன் ஒரு நல்ல தும்பை மறவன் என்பதை வியந்து பாராட்டவே, புலவர் குமட்டூர்க் கண்ணனுர், ''அமர்கடந்து மலைந்த தும்பைப் பகைவர், போர் பீடு அழித்த செருப்புகல் மறவ', என்று பாடியுள்ளார்.

நிலம், நீர், நெருப்பு, விளி, விசும்பு ஆகிய ஐம்பெரும் பூதங்களின், அளந்து அறிய மாட்டாப் பெருமையினையும், பொறை, அளி, அழிவாற்றல், வண்மை அளந்து காணலாகப்பரப்பு, ஆகிய இயல்புகளையும், பேரரசர்களுக்கு ஏற்றிப் பாராட்டுவது புலவர், பண்பாடு என்பதை

''மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்.

விசும்பு தை வரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கைபோலப்
போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்
வலியும், தெறலும், அளியும் உடையோய்''

எனச், சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய புறநானூற்றுபாட்டும் (2)

''இருமுந்நீர்க் குட்டமும்
வியன் ஞாலத்து அகலமும்
வளிவழங்கு திசையும்
வந்து நிலைஇய காயமும், என்றாங்கு
அவை அளந்தறியினும் அளத்தற்கு அரியை''

எனச், சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைக், குறுக்கோழியூர் கிழார் பாடிய புறநானூற்றுப்பாட்டும் (20) உறுதி செய்தல் காண்க.

''கூற்று வெகுண்டுவரினும் மாற்றும் ஆற்றலை'' என்ற இத்தொடர், ''கூற்று உடன்று மேல்வரினும் கூடி எதிர் நிற்கும் ஆற்றலதுவே படை'' என்ற திருக்குறளை (765) நினைவூட்டுவது அறிக.

தன்னால் வெற்றிகொள்ளப்பட்ட அரசர்களின் மணிமுடியை அழித்து, மார்பு ஆரமாக ஆக்கி அணிந்து கொள்வதும், அம்மணிமுடியை அழித்து வீரக்கழலாக ஆக்கிக், காலில் அணிந்துகொள்வதும் வழக்கமாம் என்பதை, எழுமுடி என்ற சொல்லுக்கு ''எழுமுடி என்பது அரசரை வென்று, அவர்கள் எழுமுடியானும் செய்ததோர் ஆரமாம்'' என்ற பழைய உரையாலும் ''அவர் முடிபுனைந்த பசும்பொன்னின், அடிபொலியக் கழல் தைஇய வல்லாளை'' (புறம் : 40) என்ற ஆவூர் மூலங்கிழார் பாட்டும், உணர்த்துவது உணர்க.

# 5. ஊரைய வெள்ளம்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் காணவேண்டும் எனும் ஆர்வம் உந்த, அவன் தலைநகராம் வஞ்சிமாநகர் நோக்கிப் புறப்பட்ட புலவர் குமட்டூர்க்கண்ணனார், இடைவழியில் ஒரு பேரூரைக் கண்டார். மழைமேகம் வந்து தங்கு-மளவு உயர்ந்தமதிலும், அம்மதிலைச்சுற்றி அடர்ந்த காவற்காடும் அமைத்து, அரண்செய்யப் பெற்றிருந்த அப்பேரூரை, யானைப்படையே மிகுந்த, ஒரு பேரரசன்படை வளைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அதுகுறித்து வழியில் எதிர்ப்-பட்டார் சிலரைக்கேட்க, அவர்கள் "இமயவரம்பன் அழிக்க வேண்டும் என்று விரும்பி, மேற்கொண்ட முற்றுகைகளுள் இதுவும் ஒன்று. இம்முற்றுகை, இன்று நேற்று தொடங்கிய-தன்று. ஓராண்டு காலமாக நீடித்து வருகிறது. போர் முகத்து ஊர்களையெல்லாம் எரியூட்டி அழிக்க வேண்டும் என்ற, ஆராச்சினத்தோடு வளைத்திருக்கும் இப்படை, வாளா இராது, அரணகத்தே அடங்கியிருக்கும் அரசனுடைய, கழங்கிட்டு எண்ணியும் காணமாட்டாப் பேரெண் அளவான, பெரும் படைச் சுற்றத்தையும் அழித்துவிட்டு, ஓர் ஊரை எரியூட்டியக்-கால், கொடி கொடியாக எழுதரும்புகை, வானில் படர்ந்து மெல்ல மெல்ல மறைந்து போகும்படிக், காற்று புகுந்து வீசத் தொடங்கிவிட்டால், எரியூட்டப்பெற்ற அவ்வூர், எவ்வாறு அறவே அழிந்து போகுமோ, அதைப் போலவே, அறவே உருக்குலைந்து போகுமாறு, இவ்வூரையும் அழித்து விட்டது. படையின் அழிவுத் தொழிலால், இப்பேரூரின் பண்டை வளப்பெலாம், அடியோடு அழிந்து விட்டன என்று கூறிச் சென்றார்கள். ஊரைக் கடந்து வந்த புலவர், ஆங்குக்-கண்ணுற்ற அழிவுகளால், அவர் கூறியன உண்மை என்பதை உணர்ந்து, அவ்வழிவு குறித்துப் பெரிதும் வருந்தினார்.

அவ்வருத்த உணர்வால் சிறிதே ஓய்ந்திருந்த புலவர், பின்னர் ஒருவாறு உளம்தேறிச் செல்ல தொடங்கினர். வழியின் இருமடங்கிலும், ஆங்காங்கே சிற்றூரும் பேரூருமாக ஊர்கள் பற்பல இடம் பெற்றிருந்தன. என்றாலும், அவ்வூரெல்லாம், வாழ்வோர் போகிய பாழூர்களாகவே காட்சி அளித்தன. வீட்டுக்கூரைகள்மீது வேளைக்கொடிகளும் சுரைக்கொடிகளும், பீர்க்கங்கொடிகளும் படர்ந்து கிடந்தன. கண்ணும் கருத்துமாய் வளர்க்கவேண்டிய காந்தட்செடியெல்லாம் நீரில்லாமல் வாடிச் சிவந்து வனப்பிழந்திருந்தன. பழம்பெரும் காலத்தே கட்டப்பெற்ற, பெருமையுடையவாய மனைகளும் மாடங்களும் பேணுவார் இன்மையால், அடிதகர்ந்து அழிந்து கிடந்தன. மக்கள் வாழ்தற்கேற்ற மாண்பிழந்துபோன அவ்விடி வீடுகளைத்தாம் கரைந்துறைதற்கேற்ற இடங்களாக ஆக்கிக்கொண்ட ஆறலைகள்வர், பனைஓலைகளால் வேய்ந்திருந்தனர். இவ்வழிவுக் காட்சிகளையெல்லாம் காண நேர்ந்ததே என்ற கவலை, வருத்த வழி நடந்துவரும் புலவர், இவ் அழிவுகளை, இமயவரம்பன் தானே மேற்கொண்டானல்லன்; தன்னைப் பகைப்பவர் நாடுகளைப் பாழ்பண்ணுவதில் பேராற்றல் வாய்ந்தவன் இமயவரம்பன்; அந்நிலையில் இரக்கவுணர்வே அவன் உள்ளத்தில் இராது என்ற உண்மையை, அரசியல் ஆணவம் அளித்த அறியாமையால் மறந்துபோய், அவனைப் பகைத்து கொண்டதால் வந்த விளைவு இது, என்பதை அறிந்து, அத்தகு அரசர்தம் அறியாமையால் அல்லலுறும் மக்களின் மாளாத்துயர்கண்டு மனம்நொந்தார்.

வழியிடையிருந்த பகைவர் நாடுகளையெல்லாம் கடந்து, இறுதியில் இமயவரம்பன் தலைநகர்க்குள் புகுந்தார். ஆங்கு அவர் கண்ட காட்சி, அவரை ஆனந்தக்கடலுள் ஆழ்த்திவிட்டது. முத்தும் பவழமும் போலும் கடல்படுபொருள்கள் ஒருபால் குவிந்து கிடந்தன. பொன்னும் மணியும் போலும்

மலைபடுபொருள்கள், வானளாவும் குவியல்களாக ஆங்காங்கே கொட்டிக்கிடந்தன. நெல்லும் கரும்பும், கொள்ளும் வரகும்போலும் உணவுப்பொருள்கள் வானளாவும் குவியல்களாக ஆங்காங்கே கொட்டிக்கிடந்தன. இவையன்றி, இந்நாட்டு மக்கள் காணாத நவநவமான வெளிநாட்டுப் பொருள்கள் வனப்புற வரிசை செய்யப் பெற்றிருந்தன. காட்சி நலம் இவ்வாறிருக்க, மன்னன் பிறந்த நாள், மணிமுடி சூடியநாள் மாற்றாரை வெற்றிகொண்டநாள், மணநாள் என எடுக்கும் விழாக்கள் குறித்து எழும் முரசொலி, காததிர முழங்கிக்கொண்டிருக்க, மேலே கூறியன குறித்து எடுத்த கொடிகளோடு, இன்னின்ன பொருள்கள் இன்னின்ன இடங்களில் விற்கப்பெறும் என்பதை உணர்த்த எடுத்த கொடிகளும் வானளாவப் பறந்துகொண்டிருந்தன. "வேந்தன் பெற்ற வெற்றித் திருநாள் இன்று: மக்காள் அந்நாளை மகிழ்ந்து கொண்டாடுங்கள்" என்றும், "வேந்தன் வரையாது வழங்க வாயிற்கண் உள்ளான்; வாங்கும் விருப்புடையார் வருக வருக" என்றும், வீரர்கள் வணிக வீதிகளில் முரசறைந்து அறிவிக்கக்கேட்டு அரண்மனை வாயிலை அடைந்தார் புலவர்.

ஆங்கு, இமயவரம்பன், தனக்கென எதையும் வைத்துக்கொள்ளாது, தன்பால் உள்ளது அனைத்தையும் வருவார் அனைவர்க்கும் வழங்கும் வன்மைச் சிறப்பையும், அவன் அளிக்கும் பரிசில் பெற்று மீள்வார் ஒவ்வொருவரும், "இமயவரம்பன் செல்வம், எங்கள் செல்வம்: எங்களுக்கே உரிய ஒப்புயர்வற்ற விழுநிதி அவ்வேந்தன்; வாழ்க அவ்வேந்து!" என வாழ்த்திச் செல்வத்தையும் கண்டார். இவ்வாறு நாடெலாம் போற்றக், கேடிலா வாழ்வளிக்கும் அவ்வேந்தனைக்காண, அவன் இருக்கும் திசையை நோக்கியபோது, அவன் அருகே, அணியாக இட்ட பொற்றொடிகளும் சிதைந்து போகும் வண்ணம், பகைவர் கோட்டைக் கதவுகளைக்

குத்திப் பாழ்பட்ட கோடுகளையுடைய யானைகள், மாலை அணிந்து அணி அணியாக நிற்கும் அழகைக் கண்டார் புலவர். வளமார் வாழ்வுபெற்று, அவ்வளத்தை வருவார்க், கெல்லாம் வழங்கி, பெரும்பெயர்ப்பெரியோனாய் விளங்கும் அந்நிலையிலும், தனக்கு அப்பெருவளம் வந்து வாய்க்கப், போரில் துணைபுரிந்த தன் நாற்படையை, அதிலும் சிறந்த யானைப்படையை மறவா மாண்பினைக்கண்டு மருண்டார் புலவர்.

மருண்டு நிற்கும் புலவர் காதுகளும் ''எம் வேந்தனைக் காணும் விழைவோடு எம் வஞ்சி மாநகர்க்கு வந்திருக்கும் புதியோரே! அத்தானி மண்டபத்துள் அமர்ந்துள்ளான் அரசன். உம்மை வரவேற்கும் வேட்கையுடையவனாய்க் காத்துள்ளான் வருக'' என்ற அன்பழைப்பு நுழைந்து, அவரை நினைவுலகிற்குக் கொண்டு வந்தது.

புலவர் அரசவை புகுந்தார். தோற்பைகளுள் வைத்-திருந்த யாழ் முதலாம் இசைக்கருவிகளை எடுத்து இயக்கிப், பாணரும் பொருநரும் ''இமயவரம்ப! இவ்வுலகம் இனிது வாழ வேண்டின், நீ இனிது வாழவேண்டும். ஆகவே, உலகத்தார் பொருட்டு நீ நெடிது வாழ்க!'' என வாழ்த்தும் வாழ்த்தொலி, அவர் காதுகளுள் சென்று ஒலித்தது. வாழ்த்து முறைகேட்டு வியந்த புலவர், அவ்வாறு வாழ்த்தும் அவர் களின் நாக்கு, அவன் அளித்த கறியும் சோறும் கணக்கின்றித் தின்று, தழும்பேறி விட்டமையால் உரைதடுமாறுவது கண்டு களிகூர்ந்தார்.

அரியணையின் இடதுபக்கத்தை நோக்கினார். மனைவி, மக்கள் போலும் உரிமைச் சுற்றத்தார் ஆங்கு அமர்ந்-திருந்தனர். அவர்களை நோக்கிய புலவர், அவர்தம் முகப்-

பொலிவு, பகைவர் பயம் அறியா வாழ்வு பெற்றவர். பல வளமும் வாய்க்கப் பெற்றவர், இமயவரம்பன் கருத்தும் கடமையுமே, தங்கள் கருத்தும் கடமையுமாகக் கொண்டவர் என்ற உண்மைகளை, உரையாமல் உரைக்கும் திறம் உணர்ந்து உளம் மகிழ்ந்தார். அரியணைக்கு வலப்புறம் நோக்கினர்; ஆங்கு, அமைச்சர் முதலாம் ஆன்றோர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் உயிர்போகும் நிலையிலும் உண்மையே உரைப்பவர்; ஆன்றவிந்தடங்கிய அறிவுடையார்; ஒழுக்கநெறி நிற்கும் உயர்வுடையார்; இயற்கையாலோ வேறு எதனாலோ நாடு கேடுற்றபோதும், நாட்டில் கிடைப்பதே கொண்டு நாட்டைவிட்டுப்போகா நாட்டுப் பற்றுடையார்; நரகத்திற்கு ஏதுவாம் பழிபாவம் கண்டு அஞ்சும் ஆண்மையுடையார்; இவ்வாறு எவ்வகையால் நோக்கினும் இறப்ப உயர்ந்தவர் என்பதை, அவர் தோற்றமே உணர்த்திற்று. அத்தகு பெரியோர்கள் தன்னை உயிரினும் சிறந்தானாக மதித்து, தன்னோடு வாழும் பெறற்கரும் பேற்றினைப் பெற்ற இமயவரம்பன் பெருமை, புலவர்க்கு இரும்பூது பயப்பதாய் இருந்தது.

உலகத்தார்க்கு உயிர் போன்றவனாய், தனக்கென எதையும் கொள்ளாது, அனைத்தையும், அன்போடளிக்கும் கொடையாளனாய், அக்கொடைத்தொழில் குறைவற நடை-பெறத் துணைபுரியும் பொருளை, ஈட்டித்தரவல்ல போர்பல மேற்கொள்வதற்காம் பேராற்றல் உடையனவாய் விளங்கும் இமயவரம்பன் முன்நின்று, அவனைக் கண்ணாரக் கண்டு களிக்கும் புலவர் அகக்கண்முன், உலகத்துயிர்களை ஓம்பும் அருளும், அவ்வுயிர்க்கு ஊறு விளைவிப்பாரை ஒழிக்கும் அருந்-திறலும், அன்பு அருள் நெறிகளால் உயர்ந்தவர்க்கு ஆரா இன்ப நிலை அளித்துக் காக்கும் கடவுளாம் திருமால், காட்சி

அளிப்பாராயினர். அவ்வளவே, இமயவரம்பனைக் திருமாலாகவே கருதிவிட்டார். புலவர்வாய் தானே திறந்து கொண்டது.

"சேரலாத" வரும் வழியில், உன்பகைபெற்றுப் பாழுற்ற உன் பகைவர் நாடுகளைக் கண்டு வந்தேன். அதுவே, உன் ஆற்றல் கண்டு மதிமருளப் பண்ணிவிட்டது. உன் தலைநகருக்கு வந்தேன். ஆங்கு அத்துணை அழிவிருக்க, ஈங்குத் திரண்டிருக்கும் வளத்தைக்கண்டேன். இத்தகு வளத்திற்குக் காரணமாம் உன் அரசியல் நலம், என்னை மேலும் மருட்டிவிட்டது. அரசவை புகுந்தேன். இரவலர் வாழ்த்து, சுற்றத்தார் நலம், பெரியோர்ப் பண்பு ஆகியவற்றைக் கண்டேன். மருண்டே போனேன். உன்னைக் கண்டேன். மண்ணுயிர் புரக்கும் மாலே போலும் பண்புகளால் நிறைந்து, புகழ் பெருக வாழும் வனப்பினைக் கண்டேன், என்னை மறந்தேன். இமயவரம்ப! என்னே உன் பெருமை" என்ற சொற்கள் வெளிப்பட்டன அவர்வாயிலிருந்து,

வெள்ளம்போல் திரண்டு சென்று பகையவர்க்கு நிரையத்துன்பம் போலும் கொடுந்துன்பம் தரும் இயல்பினவாகிய யானைப்படையை, நிறைய வெள்ளம் என்று குறிப்பிட்ட நயம் கண்டு மகிழ்ந்த ஆன்றோர், அப்பாட்டிற்கு அத்தொடரையே, பெயர் சூட்டிப் பாடியுள்ளனர்.

**15**. "யாண்டு தலைப்பெயர வேண்டு புலத்து இறுத்து
முனை எரி பரப்பிய துன்னரும் சீற்றமொடு
மழை தவழ்பு தலைஇய மதில் மரம் முருக்கி
நிரைகளிறு ஒழுகிய நிரைய வெள்ளம்
பரந்து ஆடுகழங்கு அழி மன்மருங்கு அறுப்பக்

கொடி விடு குருஉப்புகை பிசிரக் கால்பொர
அழல்கவர் மருங்கின் உருவு அறக் கெடுத்துத்,
தொல்கவின் அழிந்த கண் அகல் வைப்பின்
வெண்பூ வேளையொடு பைஞ்சுரை கலித்துப்
பீர் இவர்பு, பரந்த, நீர் அறு நிறைமுதல்
சிவந்த காந்தள் முதல் சிதை மூதில்
புலவுவில் உழவின் புல்லாள் வழங்கும்
புல்இலை வைப்பின் புலம் சிதை அரம்பின்
அறியாமையான் மறந்து துப்பெதிர்ந்த நின்
பகைவர் நாடும் கண்டு வந்திசினே.
கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவு அறுபு அறியா முழவு இமிழ் மூதூர்க்
கொடி நிழல் பட்ட பொன்னுடை நியமத்துச்
சீர்பெறு கலிமகிழ் இயம்பும் முரசின்
வயவர் வேந்தே பரிசிலர் வெறுக்கை
தார் அணிந்து எழிலிய தொடி சிதை மருப்பின்
போர்வல் யானைச் சேரலாத
நீ வாழியர் இவ் உலகத்தோர்க்கு என
உண்டு உரை மாறிய மழலை நாவின்
மென் சொல்கலப்பையர் திருந்து தொடை வாழ்த்த
வெய்துறவு அறியாதுநந்திய வாழ்க்கைச்
செய்த மேவல் அமர்ந்த சுற்றமொடு,
ஒன்று மொழிந்து அடங்கிய கொள்கை என்றும்
பதிபிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி
நிரையம் ஒரீஇய வேட்கைப் புரையோர்
மேயினர் உறையும் பலர்புகழ் பண்பின்
நீ புறந்தருதலின் நோய் இகழ்ந்து ஒரீஇய
யாணர் நன்னாடும் கண்டு மதி மருண்டனென்;
''மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க்கு எஞ்சாது

ஈத்துக் கைதண்டாக் கைகடுந் துப்பின்
புரைவயின் புரைவயின் பெரிய நல்கி
ஏமமாகிய சீர்கெழு விழவின்
நெடியோன் அன்ன நல்லிசை
ஓடியா மைந்த! நின் பண்புபல நய்ந்தே.''

**துறை : செந்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : நிரைய வெள்ளம்**

சேரலாத, (16—23) பகைவர் நாடும் கண்டு வந்திசின் (1—15) யாணர் நன்றுடும் கண்டு (24—34) நின் பண்புபல நயந்து (35, 40) மதிமருண்டனென் (34) என முடிக்க.

கடலவும்=முத்தும் பவழமும்போலும் கடல் படுசெல்வமும். கல்லவும் = பொன்னும் மணியும், போலும் மலைபடு செல்வமும். யாற்றம்=ஆறுபாயும் மருதமும் முல்லையும் ஆகிய நாட்டில் உளவாகும் பல்வகை உணவுப் பொருள்களும். பிறவும், பிறவெளி நாட்டுப் பொருள்களும் ஆகிய. வளம்பல நிகழ்தரும்=பலவளமும் நிறைந்த=நனந்தலை நன்னாட்டு. அகன்ற நல்ல நாட்டில் உள்ள. விழவு அறுபு அறியா= திருவிழா நிகழாத நாட்களை அறியாச் சிறப்பு வாய்ந்த. முழவு இமிழ் மூதூர்=முரசு முழங்கும் மூதூர்களில். கொடி நிழல்-பட்ட=பல்வேறுவகைக் கொடிகளால் நிழல் பெற்ற, பொன்-னுடை நியமத்து=பொன்வளம் மிக்க வணிக வீதிகளில். சீர் பெறு கலிமகிழ்=சிறப்பு வாய்ந்த வெற்றி விழாக்களையும் கொடைவிழாக்களையும். இயம்பும் முரசின்=நாட்டு மக்களுக்கு அறிவிக்கும் முரசினை முழக்கவல்லோராகிய. வயவர் வேந்தே =வீரர்களின் வேந்தே. பரிசிலர் வெறுக்கை=பரிசிலர்களின் செல்வம் போன்றவனே. தார் அணிந்து எழிலிய=மாலை அணிந்து அழகு பெற்ற. தொடி சிதை மருப்பின்=போரில்

சிதைந்த தொடியணிந்த கோடுகளைக்கொண்ட. போர் வல் யானைச் சேரலாத=போரில் வல்ல யானைப்படையுடைய சேரலாதனே. யாண்டு தலைப்பெயர=பகைப்புலத்தில் தங்குதற் உரிய ஓராண்டு காலமும் கழிந்து போகவும். வேண்டு புலத்து இறுத்து=அழிக்க வேண்டிய பகைநாட்டில் தங்கி-யிருந்து. முனைஎரி பரப்பிய துன்னரும் சீற்றமொடு=போர் முனைக்கண் உள்ள ஊர்களில் எரியூட்டற்பொருட்டு பகை-வரால் அணுகுதற்கரிய சினத்தொடு. மழை தவழ்பு தலைஇய-மதில் மரம் முருக்கி=மழைமேகம் தங்குமளவு உயர்ந்த மதில்களையும், காவற்காடுகளையும் அழித்து. நிரைகளிறு ஒழுகிய=வரிசை வரிசையாகக் களிறுகள் செல்லும். நிரைய வெள்ளம்=பகைவர்க்கு நரகத்துன்பம் போலும் கடுந்துன்பம் தரவல்ல, வெள்ளம் போன்ற பெரியபடை. பரந்து=பரந்து சென்று. ஆடுகழங்கு அழி மன்மருங்கு அறுப்ப=கழற்சிக்காய் இட்டு எண்ணியவழியும் எண்ணுமுறை மறந்துபோகும் பேரெண் அளவானதும். அரணகத்து அரசர்க்கு உரிமை-யுடையதுமாகிய படையை அழிக்க. கொடிவிடு குருஉப்புகை= கொடிகொடியாக எழுந்த கரும்புகை. பிசிர=பிசிர் பிசிராகச் சிதறுமாறு. கால்பொர=காற்று விரைந்துவீச. அழல்கவர் மருங்கின்=நெருப்பால் அழிவுற்ற இடங்களைப்போல உருவு அறக்கெடுத்து அறவே உருக்குலைந்து போகுமாறு, அழிக்கவே. தொல்கவின் அழிந்த=தம் பண்டை அழகு அழிந்துபோன. கண் அகன் வைப்பின்=இடம் அகன்ற ஊர்களையும். வெண்பூ வேளையொடு=வெள்ளிய பூக்களைஉடைய வேளைக்கொடி-யோடு. பைஞ்சுரை கலித்து=பசிய சுரைக்கொடி தழைத்து வளர, பீர் இவர்பு பரந்த=பீர்க்கங்கொடி ஏறிப்படர்ந்த. நீர் அறு=நீர் அற்றமையால். நிறைமுதல் உழுசால்களில் சிவந்த காந்தள்=பகுத்த அடிவாடிச் சிவந்த காந்தட்செடிகளை யுடைய. முதல் சிதை=அடித்தளம் தகர்ந்துபோக. மூதில் =பழைய வீடுகள். புல்வுவில் உழவின்=புலால் நாறும் வில்

துணையாக வழிப்பறித்து வாழும். புல் ஆள் = ஆறலைகள்வர். வழங்கும் = வாழும். புல்இலை வைப்பின் = பனைஓலை வேய்ந்த குடிசைகளாக மாறிய ஊர்களையும் உடையவான. புலம் சிதை அரம்பின் = பகைப்புலத்தை அழித்து நீ அளிக்கும் துன்பத்தின் கொடுமையை. அறியாமையால். மறந்து துப்பு எதிர்ந்த = மறந்து உன்பகையை ஏறட்டுக்கொண்ட. நின் பகைவர் நாடும் = உன் பகைவர் நாட்டையும். கண்டு வந்திசின் = பார்த்துக்கொண்டு வந்தேன்; மென்சொல் கலப்-பெயர் = இன்சொல் வழங்குவோரும், யாழ் முதலாம் இசைக் கருவிகளைக் கொண்ட பையினை உடையவருமாகிய பாணரும் பொருநரும். உண்டுஉரை மாறிய மழலை நாவின் = கறியும் சோறும் உண்டு உண்டு உரை குழறுமளவு தழம்பேறிய நாக்கினால். நீ வாழியர் இவ்வுலகத்தோர்க்கு என = இவ்வுலகத்தார் பொருட்டு நீ வாழ்வாயாக என்று கூறி, திருந்து தொடை வாழ்த்த = இசைக்குற்றம் இல்லாத யாழ் இசைத்து வாழ்த்த. வெய்துறவு அறியாது = துன்பம் அறியாமல். நந்திய வாழ்க்கை = வளம் மிக்க வாழ்க்கையினை உடையாராய், செய்த = தலைவனும் நீ செய்வனவற்றையே மேவல் அமர்ந்த சுற்றமொடு = செய்து அமர்ந்தஉரிமைச் சுற்றத்தாரோடு. ஒன்று மொழிந்து = உண்மையே வழங்கி. அடங்கிய = பணிவுடைமை மேற்-கொண்ட. கொள்கை = ஒழுக்கத்தையும். என்றும் = எக்காலத்தும். பதி பிழைப்பு அறியாது = வாழ்பதி விட்டுப்-போகும் குற்றத்தைச் செய்துஅறியாது. துய்த்தல் எய்தி = நுகர்பொருள் அனைத்தையும் நுகர்ந்து. நிரையம் ஒரிஇய வேட்கை = நரகத்துன்பம் தரவல்ல பழிபாவங்களைக் கைவிடும் வேட்கையினை உடையராய. புரையோர் = பெரியோர்களும், மேயினர் உறையும் = விரும்பி உடன்வாழும். பலர் புகழ் பண்பின் நீ = பலராலும் புகழத்தக்க பண்புடையோனாகிய நீ, புறந்தருதலின் = ஆட்சி புரிவதால். நோய் இகந்து ஒரீஇய

= நோயைத் துரத்தியடித்த. யாணர் நன்றுடும்= புதுவருவாய் மிக்க நல்ல நாட்டையும். கண்டு=கண்ணுற்று. மண்ணுடை ஞாலத்து=மண் அணுக்கள் செறிந்த இவ்வுலகில் உள்ள. மண் உயிர்க்கு = நிலபேறுடைய உயிர்களுக்கு. எஞ்சாது ஈத்து = தன் பேருளைக் குறைவறக்கொடுத்து. கைதண்டா=கைஓயாத கொடைவளமும் கைகடுந்துப்பின் = மிக்க வன்மையும் உடையனும். புரைவயின் = அன்பு அருள் அறநெறிகளால் உயர்ந்தோர் ஒவ்வொருவர்க்கும். பெரிய நல்கி = பேரின்பநிலையை அளித்து. ஏமம் ஆகிய = அவர் தம் உயிர்க்குக் காவலாய் அமைந்த. சீர்கெழுவிழவின்=புகழ் மிக்க விழாக்கள் பல கொண்ட. நெடியோன் அன்ன= திருமாலைப்போன்ற. நல்இசை ஒடியா மைந்த = நற்புகழ் கெடாத ஆற்றல் மிக்கோனே, நின்பண்பு பல நய்ந்து = உன் பண்பு பலவும் கண்டு உன்னைப்பெரிதும் விரும்பி. மதிமருண்டனென் = உன் பெருமையை அளந்து காணமாட்டாது மதிமருண்டேன்.

கோடிபோலும் ஒரு பேரெண் அளவான பெருள்களை எண்ணிக் கணக்கிடும்போது, ஒன்று தொடங்கி கோடி முடிய வரிசையாக எண்ணிக் கணக்கிடுவதும் இயலாது. அவ்வாறு எண்ணின் இடையே எண்ணிக்கை விடப்படவும் கூடும் என்பதால், ஒன்றுமுதல் நூறுவரை எண்ணி முடிந்ததும், ஒரு கழங்குக்காய் அல்லது அதுபோலும் சிறுபொருள் ஒன்றை ஓரிடத்தே இடுவதும், மீண்டும் அதேபோல், ஒன்று முதல் நூறு வரை எண்ணிமுடிந்ததும், மேலும் ஒரு காயை, முன்வைத்த காயோடு சேர்ப்பதும், இவ்வாறே முழுவதும் எண்ணி முடிந்ததும், இடப்பட்ட காய்களை எண்ணி, எத்தனை காய்கள் எனக் கணக்கிட்டு, அத்தனை நூறு எனக் கணக்கை முடிப்பதும், பண்டையோர் மேற்கொண்ட ஓர் எண்ணிக்கை முறையாம். இம்முறைக்கு இட்டு வழங்கும் பெயரே, இடுகழங்கு என்பது,

## 6. துயில் இன்பாயல்

இமயவரம்பனைப்பாடிப் பாராட்டிப் பரிசில் பெற்றுப் போக வேண்டும் என்ற விருப்பம் ஒன்றே காரணமாகச், சேரர் அரண்மனைக்குள் அடியிட்டார் என்றாலும், புலவர் தம் புலமைச் சிறப்பு, அவர்க்கு அரண்மனையில் உயர்ந்த ஓடரிம் அளித்து விட்டது. அரண்மனையில் உள்ளார் அனைவரும் அவர்பால் அன்பு செலுத்தலாயினர். பிரிந்து போகவிடாது பற்றிக் கொண்டது அவர்தம் அன்பு. அதனால் ஆண்டே வாழ வேண்டியதாயிற்று. அவ்வுரிமையால் அ ர ண் ம னை யி ல் உள்ளார் ஒவ்வொருவரைப் பற்றியும், ஆங்கு நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது.

அரசமாதேவி, கணவன் கற்பித்த நெறியில் கலங்காது நிற்பதே அறமாம் என அறிந்து ஒழுகும் அறக்கற்புடையவள். அழகு அறிவு ஆகிய அருங்குணங்களைக் குறைவறக் கொண்டிருந்தும், அதனால் செருக்குறாது பணிந்தொழுகும் பேரழகுடையவள். கணவன்பால் காணலாகும் குறைகண்டு, ஊடி நிற்கும் காலத்தில், புறத்தே ஊடல் உணர்ச்சியுடையாள் போல் காணப்படினும், அகத்தே அளக்கலாகா அன்புடையவள் என்பதை அறிவிக்கும் புன்முறுவல் காட்டும் முகப் பொலிவுடையாள். அமிர்தம்போல் இனிக்கும் அச்சொற்களே குடிகொண்டிருக்கும் வாயுடையாள். கணவனையும் கணவனோடு வரும் விருந்தினரையும் விரும்பி வரவேற்கும் மனவேட்கையைப் புலப்படுத்தும் அருள் நோக்குடையாள். மனத்து மகிழ்ச்சியை மக்களுக்குக் காட்டும் மலர்ந்த முகமுடை

யாள் மலர்க்கொம்பு நடைகற்பதுபோலும், நடையழகுடையாள் என்று, அரசமாதேவியின் அகப்புற அழகுகள் அனைத்தையும் அளந்து அறிந்திருந்தார்

அம்மட்டோ, மன்னன் மனையின்கண் தங்கியிருப்பாளாயின் அரசமாதேவியார், தன்கண் இழைக்கும் நவமணிகளின் ஒளியோடு போட்டியிட்டு ஒளிவீசுமாறு உருக்குற்று வலியிழந்து போனதால், புத்தொளிவீசும் பொன்னால் பண்ணப் பெற்ற ஆரங்களும், விளக்கமுறக்காட்டும் பேரொளி வாய்ந்த வைர மாலைகளும் ஒன்றோடொன்று மாறுபட்டு ஒளிவீசும்படி அணிந்துகொண்டு, பேரசர்களின் மணிமுடிகளை அழித்துப் பண்ணிய பொன்னாரம் விளங்கும் கணவன் மார்பில், வெற்றுத்திருமகள் வீற்றிருப்பதைக் கண்டும், அவனோடு புலந்து கொள்ளாது, வெற்றித்திருமகளை மார்பில் மகழ்ந்தேற்றுக் கொள்வது, ஆண்மைமிகு அடலேறனையர்க்கு அழகு என அறிந்து, அறிவுடையளாய் அம்மார்பில் தன்கண் புதைத்து உறங்கும் பேரின்பவாழ்வால் பெருமிதம் கொள்வாள். இவ்வாறு வினையொழிந்து மனையின்கண் இருப்புழி, தன்மார்பை மனைக்கிழத்திக்கே உரிமையாக்கிக் கொடுத்துவிடும் அரசன் வினைமேற்செல்ல நேர்ந்ததும் அம் மார்பை அவளிடமிருந்து கவர்ந்து கொள்ளத் தயங்கான். அவளை நெடிதுநாள் தனித்திருக் கவிடுத்துப், பிரிந்து போய் விடுவன் என்பது போலும் உண்மைகளையும் உணர்ந் திருந்தார்.

இமயவரம்பன், காதலையும் கடமையும் ஒருசேர மதிப்பவன் என்ற புலவர் மதிப்பீட்டை உண்மையாக்கும் நிகழ்ச்சி, புலவர் ஆங்கிருக்கும் போதே நிகழ்ந்து விட்டது. பற்றற்கரிய பேரரண் தன்பால் உளது என்ற பெருமையால் ஓர் அரசன், இமயவரம்பனைப் பகைத்துக் கொண்டான். அது

பொருத இமயவரம்பன், அவன்மீது போர் தொடுத்துப் போய்விட்டான். போய்ப்பார்த்தபோது, அக்கோட்டை உண்மையிலேயே அழிக்கலாகா அமைப்புடையது என்பது புலனாயிற்று.

மலைச்சிகரங்களோடு மாறுபடும் உயர்வுடையதாய் வளைந்து வளைந்து கட்டப்பெற்ற புறமதில், தன்னகத்தே ஒரு பெரிய நாட்டையே அடக்கிக் கொண்டதுபோலும் அகத்திடம், அம்புக்கட்டு முதலாம் அரிய போர்ப்பொறிகள் பொருத்தப்பெற்ற இடைமதில் அகத்தே, அரணாக சார்த்தி வைக்கப்பெறும் கணைய மரங்கள்பலபெற்று புறவாயிலின் மேற்புறத்துப் பாவு கல்லில் கட்டப்பெற்று, அணுகுவார் தலையைப் பற்றித் திருகித் தூக்கிக் கொள்ளும் ஐயவித்துலாம் எனும் பொறியமைந்த நெடியபெரிய கதவுகள் ஆகிய இவ்வுறுப்பெலாம் அமைய ஆக்கப்பெற்றிருந்தது அவ்வரண். இத்தகைய பேரரணை அழிக்கவேண்டி நேர்ந்தமையால், இமயவரம்பன் தான் கருதி வந்தநாளைக் காட்டிலும் அதிக நாள் தங்கவேண்டி இருந்தது. உறுதியும் திண்மையும் வாய்ந்த அவ்வரணை அழிக்க, இமயவரம்பன் தன்பெரிய யானைப்படையைப் பணிகொண்டான். மதம் மிகுந்து, மாளாச் சினங்கொண்டு மரங்களை மளமளவென முறித்துத் தள்ளவல்ல, ஆற்றலும் இளமையும் வாய்ந்த அவன் களிறுகள் அரண் கதவுகளைத் தம் கோடுகளால் தம்மால் ஆகும்வரைத் தாக்கித் தாக்கிச், சிதைத்துத் திறந்துவிட்டன. கோட்டைக் கதவுகள் பயனற்றுப்போகவே, இமயவரம்பன் கருதிவந்த காரியம் எளிதாக முடிந்து விட்டது. அரணுக்குரிய அரசனை வெற்றி கொண்டு விட்டான். மேற்கொண்டுவந்த வினை இனிதே முடிந்து விட்டதாகவும், வேந்தன் வீடுதிரும்பக் கருதினானல்லன். ஓராண்டு காலமாக ஓயாப்போர் புரிந்து வந்த தன்படை, மிகவும் தளர்ந்துபோயிருக்கும் நிலையில்,

உடனே ஊர் நோக்கிப்புறப்படுவது பொருந்தாது என்று கருதியோ, அல்லது வேறு எக்காரணத்தாலோ, தலைநகருக்கு வாராது பகைப்புலத்துப் பாசறையிலேயே மேலும் சிலநாள் இருந்து விட்டேன்.

கணவன் வரவேண்டிய காலம் கடந்துபோகவே அரசமாதேவி ஆருத்துயர்கொண்டாள். அவன் மார்பிற்கிடந்து உறங்கும் இன்பநிலைக்கு, ஏங்கிற்று அவள் உள்ளம். அவ்வேக்க மிகுதியால், அவள் கண்கள் உறக்கம் கொள்ள மறுத்துவிட்டன. அவ்வுள்ளக் கவலை அவள் உடல் நலனையும் உருக்குலைத்துவிட்டது.

அரசமாதேவியின் துயர்நிலையைக் கண்டார் புலவர். இமயவரம்பன் வருகை இன்னும் சில நாள் கடந்து விடுமாயின், இவள் உயிர் நிற்காது என்பதை உணர்ந்தார். உடனே விரைந்தார். வேந்தன் இருக்கும் பாசறைநோக்கி. பாசறைக்கு அணித்தாகச் செல்லும்அவரை, வென்ற களிறுகள் அவ்வெற்றிப்பெருமிதம் தோன்ற முழங்கும் முழக்கொலி முன் வந்து வரவேற்றது. அதைக் கேட்டுக்கொண்டே உள்ளே புகுந்த புலவர், அரணழிக்கும் கொடும்போரில், தம் கோடுகளை இழந்துவிட்ட அக்களிறுகளெல்லாம், காட்டுப் பன்றிகள்போல் காட்சியளிக்கும் விந்தையைக் கண்ணுற்றவாறே அரசன் இருக்கும் அறையுட்புகுந்தார். வீண்சொல் வழங்கிக் காலத்தைக் கெடுக்க விரும்பாமையால், "வேந்தே ! அரசமாதேவியார் உறங்கி இன்புறுதற்காம் இனிய பள்ளியாகிய உன்மார்பை, அவர்க்கு அளிக்கவும் உன்னல் இயலும்; அளித்ததைக் கைப்பற்றிக் கொள்ளவும் இயலும். ஆனல் கொண்ட ஒன்றைக், கொடுத்து மறக்கும் மனவலி அரசமாதேவிக்கு இல்லை. இதை அறியாது நெடிதுதங்கிவிட்டாய். அமர்மேற்சென்று வெற்றி கொள்வது அரசர்க்கு அறமாம் என்பதை அறிந்து, அவரைப் போகவிடுத்து

ஆற்றியிருப்பது, தமக்கு அறமாம்என்ற உள்ளுணர்வுடைமையால், ஓராண்டு காலம் காத்திருந்தார்கள். ஆனால் அக்காலம் கடந்துவிட்ட பின்னரும், அடங்கியிருப்பதுஅவரால் இயலாது. அந்நிலையில் கணவனை நினையாது,கணவன்தரும் இன்பத்தைக் கருதாது அடங்கிக்கிடப்பது காரிகையால் இயலுமோ? அக்கவலைவந்துற்ற பின்னர், பள்ளியில் தனித்தே கிடந்து உறங்கவும் ஒண்ணுமோ? இதை உணர்த்தவே போர்வீரர் அல்லது பிறர் புகலாகாப் போர்க்களம் என்றும் பாராது ஓடோடி வந்தேன். வேந்தே, விரைக நின் மனைநோக்கி’’ என்று கூறி முடித்தார். கணவன் மார்பினைப் பிறிதொரு பெண் பாயலாகக் கொண்டு விட்டாள் என்பதை அறிந்த வழி, அம்மார்பை வெறுத்துப் புலந்து போவதே குலமகளிர் இயல்பாகவும், சேரலாதன்பெருந்தேவி, அவன் மார்பைப் பிறிவுஅறியாப் பாயலாகத், திருமகள் கொண்டுவிட்டதை அறிந்திருந்தும், ஊடல் கொண்டு வெறுத்து ஒதுக்குவது-செய்யாது,கணவன்மார்பில் வெற்றித்திருமகள் வீற்றிருப்பது, அவன் ஆள்வினைக்கு அரியதோர் காலம், எனக்கொள்ளும் மனப்பக்குவம் உடையவளாகிவிட்டமையால், அம்மார்பைக் கிடந்து உறங்க, இன்பம் ஊட்டும் இனிய பாயலாகக்கொண்டு விட்டாள். சேரமாதேவியின் இப்பெருந்தன்மையைத் ‘‘துயில் இன்பாயல்’’ என்ற தொடர் உணர்த்தும் சிறப்பு நோக்கி அப்பாட்டிற்கு அத்தொடரையே பெயராகச் சூட்டிப் பெருமை செய்துள்ளார், யாரோ ஒரு புலவர் பெருமானார்.

**16.** ‘‘கோடு உறழ்ந்து எடுத்த கொடுங்கண் இஞ்சி
நாடு கண்டன்ன கணைதுஞ்சு விலங்கல்,
துஞ்சுமரக்குழாம் துவன்றிப் புனிற்றுமகள்
பூணா ஐயவி தூக்கிய மதில
நல்எழில் நெடும் புதவு முருக்கிக் கொல்லுபு
ஏனம் ஆகிய துனை முரி மருப்பின்

கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி
மரம்கொல் மழகளிறு முழங்கும் பாசறை
நீடினை ஆகலின் காண்டு வந்திசினே;
ஆறிய கற்பின் அடங்கிய சாயல்
ஊடினும் இனிய கூறும் இன்நகை
அமிர்து பொதி துவர்வாய் அமர்ந்த நோக்கின்
சுடர்நுதல் அசைநடை உள்ளலும் உரியள்;
பாயல் உய்யுமோ? தோன்றல்! தாவின்று
திருமணி பொருத திகழ்விடு பசும்பொன்
வயங்குகதிர் வயிரமோடு உறழ்ந்து பூண் சுடர்வர
எழுமுடி கெழ்இய திருஞெமர் அகலத்துப்
புரையோர் உண்கண் துயில் இன்பாயல்
பாலும்கொளாலும் வல்லோய் நின்
சாயல் மார்பு நனி அலைத்தன்றே.

**துறை : செந்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : துயில் இன்பாயல்**

தோன்றல், (14) வல்லோய், (14-19) பாசறை நீடினை ஆதலின் காண்கு வந்திசின் (1-9) மார்பு அலைத்தன்று (20) அசைநடை, உள்ளலும் உரியள், பாயல் உய்யுமோ? (10-14) என முடிக்க.

தோன்றல்=தலைவனே, தாவின்று=உருக்குற்று உரம் இழந்தமையால். திருமணி பொருத=அழகிய மாணிக்கமணி-களோடு போட்டியிட்டு ஒளிவீசும். திகழ்விடு பசும்பொன்= பேரொளிகாலும் பொன்னாலான ஆரம். வயங்கு கதிர் வயிரமொடு உறழ்ந்து சுடர்வர=விளங்கும் ஒளிக்க கதிர்களைக்

கொண்டு வயிரமாலையோடு மாறுபட்டு ஒளிவீசுமாறு அணிந்து. புரையோர்=அரசமாதேவியார். எழுமுடிகெழீஇய = ஏழரசர்களின் முடிப்பொன்னாலான அணிவிளங்கும். திருஞெம அகலத்து=வெற்றித் திருமகள் வீற்றிருக்கும் உன் அகன்ற மார்பாகிய. உண்கண் துயில்=மையுண்ட தம்கண்களைப் புதைத்து உறங்குவதற்குரிய. இன்பாயல்= இனிய பள்ளியை. பாலும்=உடன் உறை காலத்தில் அவர்க்குப் பகிர்ந்து கொடுக்கவும். கொளாலும்=வினை கருதிப் பிரிந்துறையும் காலத்தில் அவரிடத்தினின்றும் கவர்ந்து கொள்ளவும். வல்லோய்=வல்லவனே! கோடு உறழ்ந்து எடுத்த=மலைமுடியோடு மாறுபடும் உயர்வுடையதாக எடுத்த. கொடுங்கண் இஞ்சி = வளைந்த இடத்தையுடைய புறமதிலும். நாடு கண்டன்ன = பரந்து அகன்ற நாட்டைக் கண்டாற்போலும் இடத்தை பரந்த அகத்தே கொண்ட. கணை துஞ்சு விலங்கல்=அம்புக்கட்டு முதலாம் பொறியமைந்த இடைமதிலும்துஞ் சு மரக்குழாம் துவன்றி = காவலாகக் கிடக்கும் கணைய மரங்கள் மிகுந்து. புனிற்றுமகள் பூணுயவி = கருவுயிர்த்த இளம் மகளிர் காவலாக அரைத்துப் பூசிக்கொள்ளும் ஐயவியாகிய வெண்சிறு கடுகைக் குறிக்காத ஐயவி என்ற பெயர் பூண்ட ஐயவித்துலாம் என்ற பொறி. தூக்கிய மதில=தொங்கவிடப்பெற்ற, மதிலில் அமைந்து கிடக்கும். நல் எழில் நெடும் புதவு=நல்ல அழகிய பெரிய கதவுகளை. முருக்கிக் கொல்லுபு=தாக்கி அழித்ததால். நுனை முரி மருப்பின்=நுனி முரிந்துபோன கோடுகளையுடையவாகி. ஏனம் ஆகிய=பன்றிபோல் காட்சி தருவனவாகிய=கடாஅம் வார்ந்து=மதநீர் ஒழுகி. கடுஞ்சினம் பொத்தி=கடுஞ்சினங்கொண்டு. மரங்கொல்=காவற்காட்டு மரங்களையும் கணைய மரங்களையும் அழிக்கும். மழகளிறு = இளங்கன்றுகள். முழங்கும் பாசறை=முழங்கும் பாசறையில். நீடினை ஆதலின் = நெடிது தங்கி விட்டாய். ஆதலின், காண்கு வந்திசின்=

காணவந்துள்ளேன். நின்சாயல் மார்பு= மென்மைத்தன்மை-யமைந்த உன்மார்பு. நனி அளித்தன்று= உன் தேவியாரை மிகவும் வருத்துகின்றது. ஆறிய கற்பின்=அறக்கற்பும். அடங்கிய சாயல்=அடக்கம் மிக்க அழகும். ஊடினும் இனிய கூறும்=ஊடிய காலத்தும் இன்மொழியே பகரும். இன்நகை = இனிய புன்முறுவலும். அமிர்து பொதிதுவர்வாய் = அமிர்தம் போலும் இனிய சொற்கள் வெளிப்படும் வாயும். அமர்த்த நோக்கின் = வேட்கை புலப்படுத்தும் கண்களும். சுடர்நுதல் = ஒளிவீசும் நெற்றியும், அசைநடை = மலர்க்-கொம்பின் அசைவுபோலும் நடையும் உடைய உன் தேவியார். உள்ளலும் உரியள்=காலம் நீட்டித்தனையாதலின் நினைத்து வருந்ததற்கும் உரியள். பாயல் உய்யுமோ = நின்மார்பிற்கிடந்து உறங்கியவள், பாயற்கண்படுத்து தனித்து உறங்க நேரின் உயிர்கொண்டு வாழ்வளோ? வாழாள்; ஆகவே அவளைக்காண விரைக. எ று.

''யான் குறித்த நாளளவும் ஆற்றியிருக்க'' என்ற நின் ஏவல் பூண்டு, நின்னை உள்ளாதிருத்தலே யன்றி, நீ குறித்த நாளுக்கு மேலே நீட்டித்தாயாதலின், நின்னை நினைத்து வருந்துதலும் உரியள் என்பார்,, உள்ளலும் உரியள் என்றார் என்ற பழைய உரை பாராட்டிற்கு உரியது.

கணவன் மார்பைத் துயிலுதற்கினிய பாயலாகக் கொண்டு மகிழ்வர் மகளிர் என்பதை, ''நாடன் மலர்ந்த மார்பிற்பாயல் துஞ்சிய வெய்யோள்'' என்ற ஐங்குறுநூற்றுச் செய்யுளும் (205) உணர்த்துவது காண்க.

# 7. வலம்படு வியன்பணை

ஒரு பெரிய வீரனுக்கு ஆண்மையாவது, போர்க்களம் புக்கக்கால், பகைவர்மீது சிறிதும் இரக்கம் காட்டாது அறவே அழித்து ஒழித்தலாகும். ஆனால், அவ்வாண்மைக்கு மேலும் ஆக்கம் அளிப்பது, பகைவனும், பகைவன் நாட்டு மக்களும் கேடுற்றவிடத்து, யாவரினும் விரைந்து முன்னோடித் துணை' புரிதலாகும். ''பேராண்மை என்ப தறுகண், ஒன்று உற்றக்கால் ஊராண்மை மற்று அதன் எஃகு என்றார்' வள்ளுவர். வள்ளுவர் வகுத்த இவ்விதியைப் பிழையறப் போற்றிக் காப்பவன் இமயவரம்பன் என்பதை, அவனோடு சில காலம் இருந்து பழகியதும் கண்டு கொண்டார் புலவர் குமட்டூர்க் கண்ணனார்.

இமயவரம்பன் கடம்பரோடு நிகழ்த்திய போர்க்கொடுமை கூறுதிறம் உடையதன்று. கடம்பர், பெருங்கடல் இடையே இருந்த தீவுகளையே தங்கள் வாழிடமாகக் கொண்டிருந்தனர். அவ்வாறாகவும் கடல்கண்டு கலங்கி விட்டானல்லன் இமயவரம்பன். கடலைப்பிளந்து கொண்டு கலங்கள் செல்லும் விரைவால், கடல்நீர் மலைபோலும் அலைகளாக எழுந்து, சிறுசிறு துவலைகளாகச் சிதறுண்டு போயிற்று. அவ்வாறு கடலைக்கடந்து கடம்பர் தீவுகளை அடைந்து அவர்களை வெற்றிகொண்ட இமயவரம்பன், அவர்களை அம்மட்டோடு விட்டானல்லன். அவர்கள், தங்கள் உயிரினும் சிறந்ததாக ஓம்பிவந்த குலமரமாம், கடம்ப மரத்தை வெட்டி வீழ்த்தினான். அந்நிலையிலும் அவன் சினம் அடங்கினானல்லன். வெட்டி வீழ்த்திய கடம்பை, அக்கடம்பர்பாலே விட்டுவாராது, அதைச் சிறு சிறு துண்டுகளாக்கினான். அத்துண்டுகளைப் போர், முரசாகவும் மாற்றி முழக்கினான்.

இமயவரம்பன் ஆற்றிய போர்கண்டே கலங்கி அழிந்த பகைவர், அம் முரசொலி கேட்டு, மேலும் நடுங்கலாயினர். தங்கள் குலமரமாய் நின்று, தங்கட்டுக் குறைவிலா இன்பம் கொடுத்து வந்த கடம்பே, தங்கள் காது வெறுக்கும் கடுவொலி எழுப்பக்கண்டு, கடம்பர் கலங்கிக் கண்ணீர் சொரிந்தார்கள். களம் புகுந்த காவலன், ஆங்கு அத்துணைக் கொடியனாய்க் காட்சி அளித்தான்.

போர் ஒழிந்து விட்டது. இமயவரம்பன் சினமும் மறைந்து விட்டது. அரசிழந்த நாட்டவரின் அல்லல் எத்துணைக் கொடிதாமோ? என்ற எண்ணம் எழுந்தவுடனோ அருள் சுரந்தது. மன்னன் மனநிலையை அறிந்தார்கள் அவன் படையாளர். வெற்றி பெற்ற மகிழ்ச்சியால் வீரத்திரு நடனம் புரிந்து கொண்டிருந்த அவ்வீரர்கள், அதை கைவிட்டார்கள். அவர்கள் மனமும் திருந்தி விட்டது. பகைவன் நாட்டுக் காவல் மரத்தால் ஆனது என்ற நினைப்பால், அம்முரசைச் சிறிது இகழ்ச்சிக் குறிப்போடு பார்ப்பதை விடுத்து, கொடை முரசிற்கு உரிய மதிப்பளிக்கலாயினர், பலிதூவி வழிபடவும் தொடங்கினார்கள். பகைவர்க்கு அச்சம் ஊட்ட அடிப்பதை விடுத்து, அஞ்சி அல்லல் உற்றூர்க்கு, அடைக்கலம் அளிக்க அடிக்கத் தொடங்கி ''அரசிழந்து போனமையால் வாழிடம் தேடித் திக்கெலாம் அலைந்து திரியும் மக்கள்காள்! இது கேண் மின்; எம்நாட்டு வேந்தன், வெண்கொற்றக்குடை வானளாவ உயர்ந்து விளங்குவது காண்மின்; வானம், கடுங்காற்றுச் சுழன்றடிக்கும் கொடுமையுடையது என்றாலும், உலகிற்கு ஒளியளித்து உதவும் ஞாயிறும், விண்ணவர் உயிர் போற்றும் அமிழ்தம்போல் மண்ணவர் உயிர் போற்றும் மழைமேகமும் தவழும் மாண்புடையதும் ஆம். அவ்வானத்தின் இயல்பு, அவ்வானளாவ உயர்ந்து, நிழல்அளிக்கும் எம் வெண் கொற்றக் குடைக்கும் உண்டு. பகைத்தாரைக் கொடுமைக்கு

உள்ளாக்கினும், வாழும் நிலையற்றவரை வாழ்விக்கும் வற்றாப் பேரருளும் அக்குடைக்குரியோனாகிய, எம் வேந்தன்பால் உளது. ஆகவே, வாழிடம்தேடி, விழிநீர் சோர வாடும் மக்காள்! வருக எம் குடை நிழற்கீழ்; வாழ்வு **பெறுமின்** எம் வளநாட்டில், எனக் கூவிக் கூவி அழைக்கலாயினர்.

இமயவரம்பனின் இவ்விருவேறுபட்ட இயல்புகளையும் கண்ணுற்ற புலவரால், இமயவரம்பனைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. 'இமயவரம்ப! உன் பகைவர் பொறுக்கலாகாப் பெரும் பிழை புரிந்தாராயினும், பின்னர்த் தம்பிழை உணர்ந்து வந்து பணிந்து திறமையாக வளம்பல தருவராயின், அவர் பிழை பொறுத்து, அவரைஆட்கொள்ளும், உன்னைக் காட்டிலும் உயர்ந்தவரோ, அல்லது உன்னை ஒப்பவரோ, இவ்வுலகில் ஒருவரும் இலர். அவ்வியல்பால் ஒப்புயர்வற்று விளங்கும் உரவோய் நீ வாழி! என வாழ்த்தினர்.

போர் புரிந்து அழிவு பல கண்ட பிறகே அடையலாகும் வெற்றியை, பகைவர் தன் ஒலி கேட்டு நடுங்கும் வகையில் முழங்குவதினாலேயே, பெற்றுத்தரவல்ல முரசு, என்ற பெருமை தோன்ற வந்த, **வலம்படுவியன் பணை** என் தொடரினாலேயே இப்பாட்டிற்குப் பெயர் சூட்டியுள்ளார்கள்.

**17.** "புரைவது நினைப்பின் புரைவதோ இன்றே
பெரிய தப்புநராயினும் பகைவர்
பணிந்து திறைபகரக் கொள்ளுநை ஆதலின்
துளங்கு பிசிர் உடைய மாக்கடல் நீக்கிக்
கடம்பு அறுத்து இயற்றிய **வலம்படுவியன் பணை**
ஆடுதர் பெயர்ந்து வந்து அரும்பலி தூஉய்க்
கடிப்புக் கண்ணுறூஉம் தொடித்தோள் இயவர்

அரணம் காணாது மாதிரம் துழைஇய
நனைந்தலைப் பைஞ்ஞிலம் வருக இந்நிழல்! என
ஞாயிறு புகன்ன தீது நீர் சிறப்பின்
அமிழ்து திகழ் கருவிய கணமழை தலைஇய
கடுங்கால் கொட்கும் நன் பெரும் பரப்பின்
விசும்பு தோய் வெண்குடை நுவலும்
பசும்பூண் மாாப!", பாடினி வேந்தே!

**துறை : செந்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : வலம்படு வியன்பணை**

வியன்பணைக்கு (4-5) ஆடுநராகிய (6) இயவர் (7) பலிதூ உய் (6) வருக என (8-9) குடைநுவலும் மார்ப ! வேந்தே ! (10-14) கொள்ளுநை ஆதலின் (2-3) புரைவதோ இன்று (1) என மாற்றி வினை முடிவு செய்க.

துளங்கு பிசிர் உடைய = ஆடும் அலைகள் சிறுசிறு திவலைகளாக உடையும்படி. மாக்கடல் நீக்கி = பெரிய கடலைக்கடந்து போய் கடம்பு அறுத்து அகற்றிய=கடம்பரது கடம்பமரத்தை வெட்டி வீழ்த்தி அம்மரத்தால் பண்ணிய. வரலம்படு வியன்பணை = வெற்றிதரும் விழுமிய முரசிற்கு ஆடுநர். அவ்வெற்றியால் கூத்தாடி மகிழ்பவராகிய. கடிப்புக் கண் உறூஉம்=அடிக்கும் கோல் கொண்டு அம்முரசின் கண்ணில் அடித்து முழங்கும். தொடித்தோள் இயவர் = தொடியணிந்த தோளனராகிய வீரர்கள். பெயர்ந்து வந்து = தம் ஆடிடம் விட்டு வந்து. அரும்பலி தூஉய் = பெரிய பலி இட்டு வழிபாடாற்றி. அரணம் காணாது = புகலிடம் காணமாட்டாது. மாதிரம் துழைஇய = திக்கெங்கும் தேடி

அலேந்த. நனந்தலேப்பைஞ்ஞிலம் = விரிந்த இடத்தை உடைய வளமான நிலத்தில்வாழும் மக்காள்! வருக இந்நிழல் என = வாருங்கள் இக்குடைநிழற்கீழ் என்று கூறுமாறு, ஞாயிறு புகன்றதீதுதீர் சிறப்பின் = ஞாயிறு உலாவர விரும்பும் குற்ற மற்ற சிறப்பினேயும். அமிழ்து திகழ் கருவிய கணமழை தலே-இய = நீரால் நிறைந்து இடி மின்னலோடுகூடிய பெரும்மழை மேகம் பரவப்பெற்று. கடுங்கால் கொட்கும் = கொடிய சுழற்-காற்று சுழன்று அடிக்கும். நன்பெரும் பரப்பின் = நன்மை மிக்க பெரிய பரப்பினேயும் உடைய. விசும்பு தோய் வெண். குடை = வானளாவ உயர்ந்த வெண்கொற்றகுடை. நுவலும் = கூருமல் கூறும். பசும்பூண் மார்பு = புதிய புதிய பூணாரம் பூண்ட மார்பனே! பாடினி வேந்தே! = பாணர் மனேவியர்க்குப் பரிசு பல அளிக்கும் பேரரசனே! பகைவர் பெரிய தப்பு-நராயினும் = பகையரவர்கள் பெரிய பிழை புரிந்தனர் என்ருலும். பணிந்து திறைபகர = பணிந்து வந்து தாமே திறையளிக்க முன் வந்தால். கொள்ளுநை ஆதலின் = அத்திறை கொண்டு அருள்புரிவை ஆதலின், புரைவது நினேப்பின் - உன்பண்பாட்டுப் பெருமைக்கு ஒப்பாகக்கூடியது எதுஎன ஆராயின், புரைவதோ = இன்று. ஒப்பாவது ஒன்றும் இல்லே.

கடம்பரை வென்று அவர் காவல் மரமாம் கடம்பை வெட்டி அம்மரத்துண்டால் முரசு செய்து முழக்கும் சேரலாதன் செயலேச்,

"சேரலாதன்
மால்கடல் ஒட்டிக் கடம்பு அறுத்து இயற்றிய
பண்ணமை முரசு"
"சேரலாதன்

முந்நீர் ஒட்டிக் கடம்பறுத்து" —அகம் : 127 : 347
எனப் புலவர் மாமூலனாரும் பாராட்டியுள்ளார்.

# 8. கூந்தல் விறலியர்

வறியோர்க்குப் பொருள் வழங்கும் வள்ளல்கள், தம்மிடம் வந்து பொருள் வேண்டிநிற்பார்க்குக் கொடுத்த பொருள் போதாமையால் அவர்கள், மறுபடியும் வேறு ஒருவர்பால் சென்று பொருள் வேண்டி நிற்காதபடி நிறைய அளித்தல் வேண்டும். அதுவே விழுமிய கொடைவளம். அத்தகு கொடைக்குணம் நற்குடிப்பிறந்தாரிடமட்டுமே குடிகொண்டிருக்கும். ''இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலன் உடையான் கண்ணே உள'' என்றார் வள்ளுவர்.

வள்ளுவர் காணத்துடித்த வள்ளலைக் காட்டிலும், சிறந்த வள்ளலாய் வாழ்ந்திருந்தான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இமயவரம்பன்பால் வந்து, அவன் வழங்கும் பொருள் பெற்றுச் செல்பவர், மீண்டும் பொருள் வேண்டிப் பிறரிடம் செல்லும் புன்கண்மை இலராதல் மட்டுமன்று; கொள் எனக் கொடுக்கும் கொடைகுணத்தைத், தாமும் பெறுமளவு உயர்ந்து விடுவர். அத்தனைப்பெரும் பொருளை இமயவரம்பன் பரிசளிப்பான். இமயவரம்பன்பால் பொருந்தியிருந்த குன்றத்தனைய இக்குணத்தை, உலகோர்க்கு உணர்த்த, புலவர் மேற்கொண்ட புதுவழி, வியப்பூட்டும் பேரின்பம் வாய்ந்துளது.

இமயவரம்பன்பால் பொருள்பெற்று, வறுமை தீர்ந்தவர், தாம்பெற்று வந்ததில் ஒரு பகுதியைப், பிறர்க்கும் வழங்குவர் என்றோ, இமயவரம்பன்பால் பரிசில் பெற்ற இன்னபுலவர், அப்பொருளை இன்னார்க்கு வழங்குவதும் செய்தார் என்றோ கூறி, இமயவரம்பன் கொடை வளத்தைச், சொல்லால் விளக்க

விரும்பினாரல்லர். அதைச் செயலால் காட்டவே விரும்பிற்று அவர் உள்ளம். உள்ள விருப்பத்திற்கு உருவளித்து விட்டது அவர் செயல்.

தன் அரசவை புகுந்து தன்னைப்பாடி, தன் அரண்மனையில் வாழ்ந்த அரசமாதேவி உள்ளிட்ட அனைவரோடும் பழகி, காதலை மறந்து, தவறுசெய்த வழித் தன்னைத் திருத்தி நல்வழி காட்டி நன்னிலைக்கண் நிறுத்திய புலவர்க்கு வளம்பல வழங்கினான் இமயவரம்பன். எண்ணற்ற மதுக்குடங்கள், எண்ணித்தொலையா செந்நெல் மூட்டைகள், மந்தை மந்தையான ஆடுகள், குதிர்குதிராகக் கலங்கள், அளவிளந்த அணிகள், பற்பலவகையான பருத்தி பட்டு ஆடைகள், இன்னும் எத்தனை எத்தனையோ, இமயவரம்பன் அளித்த அனைத்தையும் பெற்றுக் கொண்டு, சுற்றம் வாழும் சூழல் சென்றார் புலவர்.

வறுமையால் வாடி, பலகாத வழி கடந்து வந்த வராதலின், முதற்கண் அவர்பசி ஆறுக என்று எண்ணினார். சோறு ஆக்கி உண்பதற்குள், அவர் உயிர் போய்விடும் என்று அஞ்சினர். அதனால் மதுக்குடங்களை முன் வைத்து மண்டுங்கள் என்றார். அது உண்டு அவர்பசி சிறிது ஆறியதும் ''இதோ அரிசி மூட்டை ஆக்குங்கள் சோறு. ஊன்கறி வேண்டுமோ, இதோ ஆட்டு மந்தை, அறுத்துப் போடுங்கள். புழுங்கல் உணவே பேரின்பம் தரும் என்றால், அவரை துவரைகளில் எது வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும், எடுத்துப் போட்டுப் புழுக்குங்கள் என்றார். அவ்வளவே இமைப்பொழுதில் எல்லாம் முடிந்து விட்டன. எல்லோரும் வயிறு புடைக்கத் தின்று தீர்த்தார்கள்.

பசிதீர்ந்தது என்ற நிலைபிறந்தவுடனே பெண்கள், தங்களை ஒப்பனை செய்து கொள்வதில் முனைந்தார்கள். இமயவரம்பன் அளித்த பொன் அணிகள் அனைத்தையும் பூட்டிக் கொண்டார்கள். எண்ணெய்காணுது காய்ந்து உதிர்ந்துபோன, தங்கள் தலைமயிர்க்கு எண்ணெய் இட்டு வாரி வகைவகையாக முடித்துக் கொண்டார்கள். உடனே பொலிவிழந்திருந்த அவர் முகங்களெல்லாம் பேரொளி வீசித்திகழ்ந்தன. அகம் மலர, அவர்தம் முகமும் மலர்ந்தது.

அதுவரை அமைதியாக இருந்து, அவர்தம் செய்கைகளை இமை கொட்டாது பார்த்திருந்த புலவர், அவர்களை நோக்கி "நன்று; உங்கள் குறைதீர்ந்தது. இனி பிறர் நலம் காணும் பணியிலும் உங்கள் கருத்து சிறிதே செல்க. உணவு பெருது உயிரிழந்து போகும் நிலைபெற்றவர், உலகில் நீங்கள் மட்டுமே அல்லர். உங்களைப்போல் பலர் உளர். உங்கள் பசிதீர்ந்தது போல், அவர்கள் பசியும் தீரவேண்டும். ஆகவே அனைவரும் விரைந்து சென்று அடுப்பை மூட்டுங்கள். அடுப்புப் பக்கம்போய் அறியா ஆரணங்களும் அடுப்பு மூட்டுதல் வேண்டும். உண-வாக்க நீங்கள் காட்டும் விரைவில், உங்கள் புத்தாடைகள் சரசரக்க வேண்டும். பொன்னணிகள் கலகலக்க வேண்டும். ஆக்கி முடித்ததும், நீங்கள் பெற்ற பற்பல அணிகளையும் வரு-வார்க்கும் வழங்குங்கள். அவ்வாறு வழங்குவதில் பிழையேதும் இல்லை. மேலும், அதனுல் நீங்கள் மீண்டும் வறியோராகி விட மாட்டீர்கள். வேண்டிய பொருள்களை வேண்டியவாறே வழங்க, இமயவரம்பன் உள்ளவரை நமக்கு ஒரு குறைவும் நேர்ந்து விடாது. உலகை ஓம்பும் உயர்ந்த கடமையை ஏறட்டுக்கொண்ட மேகம், அக்கடமையில் தவறி பல்லாண்டு-களாக, பாருலகனைத்தும் பசியும், பிணியும் பகையும் பெற்றுப் பாழுற்றுப்போகுமாறு மழை பெய்யாது மறுத்து விடுவதும் உண்டு. ஆனுல் இமயவரம்பன், கொடுக்கும் தன் கடமையில்

ஒரு போதும் குறை செய்யான். வழங்கும் அவன் கைகள் வற்றுவது என்றும் இல்லை. ஆகவே இப்பொருள் தீர்ந்தால் எப்படி வாழ்வோம் என்ற கவலை உங்களுக்கு வேண்டாம். வழங்க அவ்வள்ளல் உள்ளான், வயிறுர உண்ணுங்கள், அது தீர்ந்ததும் வருவார்க்கு வாரி வாரி வழங்குங்கள்'' என்று ஆணை பிறப்பித்து, அவர்களையும் வள்ளல்களாக மாற்றும் முகத்தான், இமயவரம்பன் கொடையின் பெருமையைக், குன்றின்மேல் இட்ட விளக்கெனக், குவலயம் அன்னத்திற்கும் எடுத்துக் காட்டிவிட்டார்.

வருவார் அனைவர்க்கும் வழங்க வேண்டியிருந்தமையாலும், வழங்குவதை விரைந்து வழங்க வேண்டியிருந்தமையாலும், பாடிப் பரிசு பெறுவதல்லது பணிபுரிந்து பழகியறியாப் பெருமை வாய்ந்த விறலியரையும், அப்பணியிற் புகுத்தி பிறர்க்கு வழங்குவதில் புலவர்க்கு இருந்த வேட்கை மிகுதியை வெளிபடுத்தியது, விறலியருள் தலைமையாயினர் எனும் பொருள் தரும் **கூந்தல் விறலியர்** என்ற தொடரேயாதலின், அப்பெருமையால், இப்பாட்டிற்கு அத் தொடரையே பெயராக சூட்டிப் பெருமை செய்துள்ளார்கள்.

18. ''உண்மின் கள்ளே! அடுமின் சோறே!
எறிக திற்றி! ஏற்றுமின் புழுக்கே!
வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிர்ப்ப
இருள்வணர் ஒலிவரும் புரி அவிழ் ஐம்பால்,
ஏந்து கோட்டு அல்குல், முகிழ் நகை மடவரல்,
**கூந்தல் விறலியர்** வழங்குக அடுப்பே!
பெற்றது உதவுமின்! தப்பின்று; பின்னும்
மன்உயிர் அழிய யாண்டு பலதுளக்கி,
மண்ணுடை ஞாலம் புரவு எதிர்கொண்ட
தண்ணிய எழிலி தலையாது மாறி

மாரி பொய்க்குவ தாயினும்,
சேரலாதன் பொய்யலன் நசையே''.

**துறை : செந்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : கூந்தல் விறலியர்**

கள்உண்மின் – கள்ளை உண்ணுனுங்கள், சோறு அடுமின் – சோறு ஆக்குங்கள், திற்றி எறிக – தின்னலாகும் ஊன் கறியை அறுத்துப்போடுங்கள், புழுக்கு ஏற்றுமின் = புழுக்கவேண்டிய உணவுகளை அடுப்பில் ஏற்றுங்கள். இருள் வணர்ஒலிவரும் புரிஅவிழ் ஐம்பால் – கருத்து கடைகுழன்று தழைத்து முடி அவிழ்ந்து ஐவகையாக முடிக்கப்படும் கூந்தலும், ஏந்து கோட்டு அல்குல் = அல்குலும், முகிழ்-நகை = சிறிதே வெளிப்படும் புன்முறுவலும், மடவரல் – இளமைத் தன்மையும் உடைய, கூந்தல் விறலியர் = சிறந்த கூந்தலை உடைய விறலிகாள்! பொலங்கலம் தெளிப்ப = நீங்கள் அணிந்துள்ள பொன்னணிகள் கலகலக்க, வருநர்க்கு – வருவார்க்கு, வரையாது அடுப்பு வழங்குக = அடுப்பிலேற்றி ஆக்கிய உணவை வரையாது வழங்குங்கள். பெற்றது உதவு-மின் – உணவளிப்பதோடு இமயவரம்பன்பால் பெற்ற பொன்னையும் பொருளையும் பிறர்க்குக்கொடுத்து உதவுங்கள், தப்பின்று = அவ்வாறு வழங்குதல் பிழையில்லை. மண்ணுடை-ஞாலம் – மண்அணுக்கலால் ஆன உலகத்து உயிர்களை. புரவு – காப்பதை, எதிர்கொண்ட = ஏற்றுக்கொண்ட, தண்ணிய எழிலி – குளிர்ந்த மேகம், மன்உயிர் அழிய = உலகில் நிலை-பேறுடைய உயிர்களும் அழிந்துபோகும் வண்ணம். பலயாண்டு துளக்கி – பல்லாண்டுகள் வரையும் துன்புறுத்தி. தலையாது மாறி=பெய்யும் தன்தொழிலை மேற்கொள்ளாமல்

கைவிட்டு, மாரி பொய்க்கினும் = மழையைப் பெய்யாது பொய்த்தாலும் சேரலாதன் = இமயவரம்பன் நெடுஞ்-சேரலாதன். பின்னும் நசை பொய்யலன் = பின்னும் பின்னும் சென்றாலும் விரும்பிச்சென்றதை வழங்காது விடுவானல்லன் வழங்குவன். "உண்மின் கள்ளே, அடுமின் சோறே" என ஆணையிடும் புலவர் குமட்டூர்க் கண்ணனார் செயல், குமணன்பால் கொடைவளம் பெற்றுத் திரும்பிய புலவர் பெருஞ்சித்தரனார் தன் மனையாளுக்கு.

"நின்நயந்து உறைநர்க்கும் நீ நயந்து உறைநர்க்கும்
பன்மாண் கற்பின் நின்கிளை முதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிரிப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கும் என்னாது என்னோடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடு மதி மனைகிழவோயே!

—புறம்: 163

என இடும் ஆணையையும்

பிட்டங் கொற்றனைப் பாடிப் பரிசில் பெற்ற புலவர் படமவண்ணக்கன் தாமோதரனார்.

"ஏற்றுக உலையே ஆக்கே சோறே
கள்ளும் குறைபடல் ஓம்புக ஒள்ளிழைப்
பாடுவல் விறலியர் கோதையும் புனைக
அன்னவை பிறவும் செய்க.

—புறம்: 172

என இடும் ஆணையையும் நினைவூட்டுவது காண்க.

# 9. வளன்அறு பைதிரம்

இமயவரம்பன் மூவேந்தர் குடிகளுள், முதற்கண் வைத்து மதிக்கத்தக்க சேரர் குடியில் வந்தவனாதலின், அவனுக்கு அடிபணியாது, அவனியாளக் கருதுபவர்க்கு வாழ்வளிக்க, அவன் ஆண்மை இடம் தந்திலது. அதற்குத் துணை செய்யும் வகையில், போர்முறை யறிந்து போரிடவல்ல ஒரு பெரிய படையும் அவன்பால் இருந்தது. ஒரு நாட்டின்மீது படை யெடுத்துச் செல்ல வேண்டுமாயின், படையெடுப்பு மேற் கொள்வதன் முன்னர், நாற்படைகளோடுகூடிய,பெரும்படை, இடைவழியில் இன்னல் உருது விரைந்து செல்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், காடுகளை அழித்தும், குன்றுகளைக் குறைத்தும், நல்லபாதை அமைத்தல் வேண்டும் என்ற, போர் முறை அறிந்த இமயவரம்பன், அப்பணிபுரிவதில் கைதேர்ந்த கூலிப்படையையும் பெற்றிருந்தான். அப்படையாளர், பாதை அமைக்கும் பணிமேற்கொண்டு,போகும் இடங்களில் கொள்ளை யிட்டுப் ''பெறலாகும் பொருள்களையே உணவாகக் கொண்டு கோடாலியாலும் குந்தாலியாலும் வனங்களையும் வானளாவ உயர்ந்த மலைகளையும் அகற்றிப், பாதை அமைத்துக் கொண்டே செல்வர்.

அதற்கிடையில், வீரக்கழல் புனைந்த கால்களை, முன்வைப்ப தல்லது, பின்வைத்தறியா வீரமரபில் வந்த வேற்படை-யாளரும், வாட்படையாளரும், வடித்துக் கூராக்கி நெய்பூசி வைத்திருக்கும், தம்படைக்கலங்களின் புலித்தோற் போர்வையை அகற்றி, மாசுபோகத் துடைத்து, அமர்க்களம் புகுதற்காம் அமையத்தை, ஒவ்வொரு நாழிகையும், ஆர்வத்-தோடு எதிர்நோக்கியிருப்பர், ''வந்தது போர்'' என்ற செய்தி

தம் காதுகளில் வந்து விழுந்த அக்கணமே, அச்செய்தியை அவனியில் உள்ளார் அனைவர்க்கும் அறிவித்து, அந்நாழிகையே அமர்க்களம் நோக்கி, அவர்களையும் விரட்ட வேண்டும், தாமும் விரைய வேண்டும் என்ற ஆர்வம் மிக்குடையராய முரசறைவோர், போர்முரசை நீராட்டிப் பூசை செய்து, குருதிகலந்த தினைதூவிப் பலியிட்டுப் பரவி வழிபாட்டை முடித்துக் கொண்டு, முரசடிக்கும் கடிப்பைக் கைபிடிக்க வெற்றிக்கொடி விறங்கும் வலத்தோள் துடிக்க, வேந்தன் ஆணையை எதிர்நோக்கிக் காத்திருப்பர். போர்ச் செய்திகேட்ட பின்னர்க் கவசம்பூணுவதாயின், காலம் கடந்துவிடும் என்ற கருத்துடைய வீரர்கள், போர்என்றவுடனே பாய்ந்து களம்புக வேண்டும் என்ற பேராசையால் போர்ப்பயிற்சி பெற்று, முதன் முதலாகக் களம் புகுந்த அன்று பூண்ட, கவசத்தைக் கழற்றுமலே களம் காணத் துடித்து நிற்பர். தன் நாற்படைகள் இவ்வாறு தனியாப் போர் வேட்கையின ராதற்கு இமயவரம்பன்பால் பொருந்திருந்த போர்வெறியே காரணமாம். இவ்வியல்பினவாய பெரும் படைக்குத் தலைவனாம் இமயவரம்பனும், எப்பொழுது காணினும், வில்லையும் அம்பையும் வாளையும் வேலையும் ஆராய்ந்து ஆராய்ந்து, அவற்றுள் நல்லனகாணும் நிலையிலேயே காட்சி அளிப்பான்.

இமயவரம்பனும், அவன் நாற்படையும் இவ்வாறு எந்நேரமும்போர் வேட்கையுடையராகவே விளங்கினமையால், சேரநாட்டின் சினம்பெற்ற சின்னஞ்சிறு நாடுகளெல்லாம், வாழ்விழந்து போயின. தம் நாட்டகத்தே வாழமாட்டாப் பகைநாட்டுப் பெருங்குடிகள் அனைத்தும், தம்நாடுகளைத் துறந்து மறந்து, வேற்று நாட்டு மண்ணில் குடிபுகுந்தன. மக்கள் வாழ்விழந்து போகவே, அவர்கள் ஓம்பிய ஆவும் மாவும் கூட, அந்நாட்டைவிட்டு அகன்று போயின. மக்களையும்

மாடுகளையும் இழந்துவிட்ட, அந்நாடுகளில் உழவு முதலாம் தொழில்கள் எல்லாம், அறவே மறைந்து மாண்டுபோயின.

வாழ்வோர்போகப் பாழூராகக் காட்சிஅளித்த பேரூர்களைத் தன்னகத்தே கொண்ட அந்நாடுகளைப், பண்டு பார்த்து அறிந்தவர்கள், இன்று இந்நிலையில் கண்டால், கண்கள் நீர் மல்க, கைபிசைந்து கருத்திழந்துபோவர். இமயவரம்பன் சினத்திற்கு உள்ளாகிச் சீரழிந்துபோன அந்நாடுகள் அவன் சினவலிக்கு அகப்படாதிருந்த நாட்களில் பெற்றிருந்த வளப்பெருமை, வார்த்தைகட்கு அகப்படும் வகையுடைத்தன்று. ஏரியும் குளமும்போலும் நீர்நிலைகளில், செந்தழல் நிகர்க்கும் தாமரை மலர்களையும் அழகிய அல்லி மலர்களையும் எக்காலத்தும் காணலாம். நெல்விளையும் நன்செய்களில் நெய்தல் மலர் நிறைந்திருக்கும். அத்துணை நீர்வளம்மிக்கது அந்நாடு. நீர்வளம் மிக்க அந்நாட்டில், நிலவளமும் பொருந்தியிருந்தது அரியும் அரிவாளும் கூர் மழுங்கிப் போகுமளவு, நெற்பயிர் ஒன்று பலவாகக் கிளைத்துக் கதிர் ஈன்று சாய்ந்து கிடக்கும். கரும்பை, ஆலையில் இட்டு ஆட்டும்போது வெளிப்பட்டு விழும் கருப்பஞ்சாற்றின் பெருக்கால், அச்சாறு வடியும் கூன்வாயும் வளைந்து போகும். அத்துணைவளமான கரும்பு விளையவல்லது அந்நாட்டு நிலவளம். அத்தகு நிலநீர் வளங்கள், அந்நாட்டிற்கு இன்றோ நேற்றோ வந்து வாய்த்தன அல்ல. பல்லூழிகாலமாகத் தொடர்ந்து பெற்றுவரும் பெருவளம் அது. நாட்டிற்கு மாண்பு தந்து வந்த அவ்வளம், இன்று அழிந்து விட்டது. மறைந்துபோன அவ்வளத்தை முயன்றால் மீண்டும் உயிர்ப்பிக்க இயலுமா என்றால், அதற்கும் வழியில்லை. மீண்டும் உயிர்ப்பிக்க இயலாதபடி அறவே அழிக்கப்பட்டு விட்டன அவ்வளவும்.

இவ்வாறு, வழிவழியாகப்பெற்ற வளத்தால் சிறந்து விளங்கிய நாடுகளெல்லாம், இமயவரம்பன் சினத்தீப்பட்டு அழிந்து பாழாகும் நிலை புலவர்க்கு, மாற்ருெணுத் துயர்-தந்தது. அந்நிலையில், எண்ணிலா நாடுகளைப் பாழ்செய்து பார்த்த பின்னரும், இமயவரம்பன் போர் வேட்கை தணியாதிருப்பதும் பாசறை வாழ்க்கையை கைவிடா திருப்பதும், புலவர், கண்ட இனியும் வாளா இருப்பின், உள்ள ஒருசில நாடுகளும் அழிந்துபோம். ஆகவே, அது நிகழா-வண்ணம் தடுக்க வேண்டுவது தம் கடன், என எண்ணிஞர். எண்ணியதோடு நில்லாது, அவன் உறையும் பகைநாட்டிகத்துப் பாசறை நோக்கிப் புறப்பட்டும் விட்டார்.

புறப்பட்ட புலவரை, மேற்கொண்டு செல்லும் பெரும் பணியை, விரைந்து செய்தருளுமாறு, மற்ருெரு நிகழ்ச்சியும், தூண்டித் துணைபுரிந்தது. அரண்மனையை விட்டு வெளிப்படும் நிலையில் அரசமாதேவியார் எதிர் வருவதைப் புலவர் கண்டார். அன்பு, நாண் ஒப்புரவு, கண்ணேேட்டம், வாய்மை என்ற ஐம்பெரும் பண்புகளின் கோயிலாகக் காட்சியளிக்கும் அரசியாரின், படர்ந்து அகன்ற நெற்றி, அரசமாதேவியர்க்கு, இயல்பான பேரொளியைக் குறைவற வீசிக்கொண்டிருந்தது என்ருலும், அவர்தம் உள்ளத்துயரைப் புலப்படுத்தும் ஒரு சிறிய துன்பக்கீறலும், அப்வொளியிடையே காட்சி அளிப் பதைக்கண்டார். உயர்குடி மகளிர்க்கு உயிரினும் சிறந்ததான நாண் எனும் நற்பண்பு குடிகொண்டிருக்கும் அவர் மேனி, சிறிதே நலங்கெட்டிருப்பதையும் கண்டார். அம்மையார் அரசர்பால் கொண்டிருந்த ஆழ்ந்த காதலை அறிந்தவர் புலவர். ஒரு இமைப்பொழுது பிரிவையும் தாங்காது அவர் உயிர் ஆயினும் அரசர்க்கு ஓதிய அறங்களுள், தலையாயது நாடு காவல் என்பதை அறிந்தவராதலின், அரசர் போர்மேற் சென்றதால் நேர்ந்த பிரிவை, ஒருவாறு தாங்கியுள்ளார்.

ஆனால் அப்பிரிவுத் துயர், நாள் ஏற ஏற, உரம் ஏறி அரசியாரை, அலைக்கழிக்கலாயிற்று அத்துன்பத்தைத் தாங்கவல்ல மனவலி இருந்தாலும், அதற்கேற்ற மெய்வலி இல்லாத அரசியார் உயிர், உடலைவிட்டு, என்றோ பிரிந்தோடியிருக்கும். ஆனால் கடமையைக் கருத்தில் நிறுத்தித் துயர் பொறுத்துப் பகற்போதைக் கழித்துவிடும் அரசியார், இரவில், உறக்கம் அற்று நெடிது உழன்று இறுதியில் அயர்ச்சி மிகுதியால், தம்மை மறந்து சிறிதே கண்ணயரும் நிலையில், பகை மேற்சென்ற அரசர், வாகைமாலை சூடி விரைந்தோடி வந்து சேர்ந்தது போலவும் அதனால் தன் துன்பமெல்லாம், மறைய, இன்பவெள்ளத்துள் ஆழ்ந்து விட்டது போலவும், காணும் கனவுதரும் இன்பமே, அம்மை யாரவர்களை இன்னமும் உயிரோடு உலாவச் செய்துவருகிறது. இன்றேல், அவர்கள் என்றோ மாண்டுபோயிருப்பர், அரசமாதேவியாரின் தோற்றமும், அவர்தம்துன்பநிலையும் புலவரை, ஒரு கணமும் தாழ்க்காது, அரசரை நோக்கித் துரத்தின.

பகைநாட்டுப் பாசறைக்கண், மேற்கொண்டு புரியப்போகும் போர்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து கிடந்த அரசன் முன் சென்று நின்ற புலவர், பகை நாட்டுப் பாழ்ப்பட்ட காட்சிகளையும், மனைக்கிழத்தியின் மாளாத்துயர்க் கொடுமையையும் படம்பிடித்துக்காட்டுவார் போல், எடுத்துக் கூறும் முகத்தான், "இமயவரம்ப, போர் வேட்கையிலேயே கருத்துடையனாய் ஈண்டே இருந்துவிடின், உன் கோப்பெருந்தேவிக்குப், பெரும்பிழை புரிந்தவன் ஆகுவை. உன் வருகையொன்றே, அவளை இந்நிலையில் வாழ்விக்க வல்லது. அதையும் விரைந்து மேற்கொண்டால்தான் பயன் காணல் இயலும். மனைவியை மாளாத்துயரில் விடுத்து, ஈண்டிருந்து நீ, செய்த செயல்களும், இனிச் செய்ய இருக்கும் செயல்களும்,

ஏதேனும் நற்பயன் தந்துள்ளனவோ, அல்லது நல்லபல அணியாவது தரவல்லனவோ என்றால், அதுவும் இல்லை. மனைவிவருந்த வந்து நீ புரிந்த போர்களால், வளம்மிக்க நாடுகள்பல பாழற்றுப்போனதே கண்டபலன். ஆகவே போதும் உன் பாசறை வாழ்க்கை. புறப்படு உன் மனை நோக்கி'' என்று கூறாமல் கூறித், தம் கடன் ஆற்றிக் களித்தார்.

இமயவரம்பன், வாழத்தக்க வாய்ப்பினை அளிக்க மறுப்பதால், வளம் அற்றுப்போகும் நாடு, தான் வளம் அற்றுப்போவதோடு தன் அழிவினாலேயே அவன் மனைமாட்சி, யின் வளத்தையும் கெடுத்து, அவன் வாழ்வதற்காம் வாய்ப்பினையும், அழிந்துவிடும் இயல்பினை எண்ணி- அப்பொருள் உணர்த்தும் **வளன் அறு பைதிரம்** என்ற தொடரையே பாட்டின் பெயராக்கியுள்ளார்கள்.

**19.** ''கொள்ளை வல்சிக் கவர்காளல் கூளியர்
கல்லுடை நெடுநெறி போழ்ந்து சுரன் அறுப்ப,
ஒண்பொறிக் கழற்கால் மாறா வயவர்
திண்பிணி எஃகம் புலி உறை கழிப்ப,
செங்கள விருப்பொடு கூலம் முற்றிய
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
மண்ணுறு முரசம் கண்பெயர்த்து இயவர்
கடிப்புடை வலத்தர் தொடித்தோள் ஓச்ச
அம்புகளைவு அறியாச் சுற்றமொடு அம்புதெரிந்து
அவ்வினை மேவலை யாகலின்,
எல்லும் நனிஇருந்து எல்லிப் பெற்ற
அரிதுபெறு பாயல் சிறுமகிழானும்
கனவினுள் உறையும் பெரும் சால்பு ஒடுங்கிய
நாணுமலி யாக்கை, வாள்நுதல் அரிவைக்கு
யார்கொல்? அளியை;

இனந்தோடு அகல ஊருடன் எழுந்து,
நிலங்கண் வாட நாஞ்சில் கடிந்து, நீ
வாழ்தல் ஈயா **வளன் அறு பைதிரம்**
அன்ன ஆயின, 'பழனந்தோறும்
அழல்மலி தாமரை ஆம்பலோடு மலர்ந்து,
நெல்லின் செறுவில் நெய்தல் பூப்ப,
அரிநர் கொய்வாள் மடங்க, அறைநர்
தீம்பிழி எந்திரம், பத்தல் வருந்த
இன்றோ அன்றோ தொன்றோர் காலை
நல்லமன் அளியதாம், எனச் சொல்லிக்
காணுநர் கையுடைத்து இரங்க
மாணா மாட்சிய, மாண்டன பலவே !

**துறை : செந்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம் : ஒழுகு வண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : வளன் அறுபைதிரம்**

நீ வாழ்தல் ஈயா வளனறு பைதிரம் (18) இனந்தோடு அகல (16) நிலங்கள் வாட (17) அன்ன ஆயின (19) மலர்ந்து பூப்ப (12) பந்தல் வருந்த (23) நல்ல மன் அளிய எனச் சொல்லிக் காணுநர் இரங்க (26) பல மாணா மாட்சிய மாண்டன (27) ஆகவும் கூளியர் சுரன் அறுப்ப வயவர் உறை கழிப்ப இயவர் தோள்ஓச்ச அவ்வினை மேவலையாகலின் (1-10) அரிவைக்கு யார்கொல்? அளியை என முடிக்க.

நீ வாழ்தல் ஈயா = இருந்து வாழ்தற்குரிய வாய்ப்பினை நீ நல்காமையால், வளன் அறு பைதிரம்=தம் வளம் அற்றுப் போன பகை நாடுகள். இனந்தோடு=ஆடும் மாடும் முதலாம் கால்நடைச் செல்வங்கள். ஊருடன் எழுந்து அகல =

ஊராரோடு கூட்டமாய் எழுந்து ஓடிவிடவும். நாஞ்சில் கடிந்து = மக்களும் மாவும் அகன்றுவிட உழதொழில் அழிந்து விட்டமையால். நிலங்கள் வாட = விளைநிலங்கள் வளம் இழந்து போகவும். அன்ன ஆயின = அத்தகைய அழிநிலையுடையவாயின. பனழந்தோறும் = நீர் நிலை-களெல்லாம் அழல்மலி தாமரை = செந்தழல் நிகர்க்கும் தாமரை மலர்கள். ஆம்பலொடு மலர்ந்தது = ஆம்பல் மலர் களோடு மலர்ந்தும். நெல்லின் செறுவில் = நெல்விளையும் நன்செய்களில் நெய்தல் பூப்ப = நெயல்தல் மலர்கள் மலரவும். அரிநர் கொய்வாள் மடங்க = நெல்லரிவாரின் அரிவாள்கள், அரிய மாட்டாது வளைந்து போகுமளவு விளைவு பெருகவும். அறைநர் தீம்விழி எந்திரம் = கரும்பாடுவோரின் கருப்பஞ்சாற்றைப்பிழியும் ஆலைகளின். பத்தல் வருந்த= சாறு விழும் விரைவால், அச்சாற்றினை வடித்து வெளிப் படுத்தும் கூன்வாய் வளைந்து போகவும். இன்றே அன்றே தொன்றேர்காலை = இன்று நேற்று அல்லாமல் தொன்று தொட்டே நல்ல மன் = நல்லனவாய் இருந்தன; அத்தலம் இன்று இல்லாகிவிட்டதே. அளியதாம் = அந்நாடுகள் நனிமிக இரங்கத்தக்கன எனச்சொல்லி = என்று கூறி காணுநர் கைபுடைத்து இரங்க=காண்போர் கைபிசைந்து கலங்கும்படி. பல பகை நாடுகள் பலவும். மானா மாட்சிய= மீளா மாட்சியையுடையவாகி மாண்பிழந்து போயின. மாண்டன பலவே = அறவே அழிவுற்றுப் போயின. அவ்-வாறுகவும் கொள்ளைவல்சி = பகைநாடுகளைக் கவர்வதையே விரும்பும் கவர்கால் கூளியர் = மேலும் நடந்து செல்வதையே விரும்பும் கால்களை உடையவராகிய தூசிப் படையினர்கள். உடைநெடு நெறிபோழ்ந்து = கல்லும் மலையும் செறிந்த நீண்ட வழிகளை வெட்டி, சுரன் அறுப்ப = படையோடும் பெருவழியாக ஆக்கி அமைக்கவும். ஒண்பொறிக் கழற்கால் மாறுவயவர் = ஒளிவீசும் பொறித்தொழில் அமைந்த வீரக்

கழல்களைக் கால்களில் இருந்து கழற்றி அறியா ஆண்மைமிக்க வீரர்கள். திண்பிணி எஃகம் = உறுதியான காம்புகளில் செறித்த வேற்படையின். புலிஉறை கழிப்ப=புலித்தோலா-லான போர்வையை அகற்றிப் போர்க்கு உரியவாமாறு செப்பம் செய்யவும் செங்கள விருப்பொடு = முரசு அடிக்கும் முதுகுடிப்பிறந்த வீரர்கள் குருதிபடிந்து செந்நிறம் பெறும் விருப்பத்தால். கூலம்முற்றிய உருவச் செந்தினை = கூலங்களுள் ஒன்றாகச் சிறந்த நல்ல நிறம் வாய்ந்த செந்தினையை. குருதியொடு தூஉய்=குருதியோடு கலந்து தூவிப் பலியிட்டு மண்ணணுறு முரசம் = நீராட்டிக் கொணர்ந்த முரசின். கண் பெயர்ந்து = கண்ணில் குருதி தடவி. கடிப்புடை வலத்தர் = வலக்கையில் ஏந்திய முரசடிக்கும் கோலுடையராய். தொடித்-தோள் ஒச்ச = தொடி அணிந்த தோள்களை உயர்த்திப் போர்முரசு முழக்க அடித்தது நிற்க. வம்பு களைவு அறியா= போர் குறித்து காட்டும் கைச்சரக்குகளைக் களைந்து அறியாத. சுற்றமொடு = வீரக்குழாத்தோடு. அம்பு தெரிந்து = நல்ல படைக்கலங்களை ஆராய்ந்து. அவ்வினை மேவிலை = அப்போர் வினைகளையே மேலும் விரும்பும் ஈண்டே உறைகின்றனை. ஆதலின் = ஆகவே. எல்லுநனி இருந்து = பகற்போதில் நின்பரிவால் உண்டான துயரை அரும்பாடு பட்டுத்தாங்கி-யிருந்தது. எல்லி = இராப்போதில். அரிது பெறுபாயல் = அரிதாகப்பெறும் உறக்க நிலையில். கனவினுள் பெற்ற= கனவில் உன்னை அடைந்ததாகக் கண்டமையால் பெற்ற. சிறுமகிழான் = சிறிய மகிழ்ச்சி காரணத்தால். உறையும் = உயிர்கொண்டு வாழ்பவளும். பெருஞ்சால்பு = பெறற்கரும் பெருமை வாய்ந்த சான்றாண்மைகளால் நிறைந்தவளும். ஒடுங்கிய நாணனுமலியாக்கை = உண்நோயால் உருக்-குலைந்து ஒடுங்கி நாண் எனும் நற்பண்பால் பொலிந்த மேனி யுடையவளும். வாள்ணுதல் அரிவைக்கு = பேரொளிவீசும் நுதலி உடையவளும். ஆகிய உன் மனைவிக்கு=யார் கொல். நீயாராயினை. அளியை = நீ மிகவும் இரங்கத்தக்காய்.

பங்க நாட்டின் மீது படையெடுத்துச் செல்வதன் முன் படை போவதற்கு ஏற்ப, பாதை அமைக்கும் பணி நடைபெற்றாக வேண்டும் என்பதை, வடுகர் துணைநிற்கத் தமிழகத்துள் நுழைந்த மோரியர், தம் தேர்ப்படை இனிது செல்வதற்கேற்ப, பாதை வகுத்துக்கொண்டதைக்கூறும்.

வடுகர் முன்னுற, மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனி இரும் குன்றத்து
ஒண் கதிர்த்திகிரி உருளிய குறைந்த அறை''
' மாகெழுதானை வம்பமோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த
இலங்கு வெள்ளருவிய அறை''

என்ற மாமூலனாரின் அகனானூற்றுப் பாடல்கள் (281:251) உறுதி செய்வது உணர்க.

வருவதாகக் குறித்துச்சென்ற பருவம் கடந்தும் கணவன் தேர் வாராமைகண்டு கண்ணுறக்கவும் ஒழிந்து வருந்தும் இளம் மனைவியர்க்கு, இரவில் சிறிதுபோதே கொள்ளும்துயிலிடையே, கணவன் வரக்கண்டதாகக் காணும் சிறிய கனவுக்காட்சி, உயிர்அளிக்கும் இனிய மருந்தாகும் என்ற உண்மையை ''நனவினுல் நல்காதவரைக் கனவினால் காண்டலின் உண்டு என் உயிர்'' (குறள் 1213) எனக் குறட்பாதலைவி கூறும் கூற்று, உறுதி செய்வது உணர்க.

# 10. அட்டு மலர் மார்பன்

புலவர் குமட்டூர்க் கண்ணனார், எங்கும் எப்பொழுதும் இமயவரம்பனைப் பற்றியே பேசத் தலைப்பட்டு விட்டார். அவர் வாயிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு சொல்லும், இமயவரம்பனைப்பற்றியதாகவே அமையக்கண்ட சிலர், ''புலவரே எப்பொழுது பார்த்தாலும், இமயவரம்பன், இமய-வரம்பன் என்கின்றீர்களே! யார் அந்த இமயவரம்பன்? யாதவன் பெருமை?'' என்று கேட்டுவிட்டார்கள்.

அவ்வளவுதான் ''யார் என்தலைவன்? என்று கேட்கிறீர்கள் கூறுகிறேன் கேளுங்கள். நாற்புறமும் கடல் சூழ்ந்த தீவை வாழிடமாக்கொண்ட காரணத்தால், தன்னைப் பகைத்துக் கொண்ட கடம்பரை அழிக்கும் கருத்துடையானாய்க், கப்பற்-படைத்துணையால் அக்கடலிடைத்தீவை அடைந்து அக் கடம்பர்களை வெற்றிகொண்டு அவர் காவல் மரமாம் கடம்ப மரத்தை வேரோடு வெட்டி வீழ்த்திய வீரம் பொருந்திய கடுஞ்சினக் கோவாம், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனே எம் தலைவன். வாழ்க அவன் கண்ணி! புதியோர்களே! இனி அவன் பெருமைகளைக் கூறுகிறேன் கேளுங்கள். ''கால் ஆழ்களரில் நரி அடும், கண் அஞ்சா வேலாள் முகத்தகளிறு'' என்பது உலகியல். போர் தொடுத்து தன் நாட்டிற்கு வந்திருக்கும் ஒரு பேரரசனைச், சூழ்ச்சிக்கும் வஞ்சனைக்கும் உள்ளாக்கி வென்று துரத்துவது, அந்நாட்டு அரசனுக்கு இயலும். வேந்தன் பேராற்றல் வாய்ந்தவனே எனினும், அவன் வந்திருப்பது, வேற்றுநாடு ஆதலாலும், வந்தோனை எதிர்த்து, நிற்பவன் ஆற்றல் குறைந்தவனேயெனினும் இருப்பது தன் நாட்டவத்தே ஆதலாலும், அவ்வெளியவன்

வந்த வலியானை அடித்துத்துரத்த அவ் இடவலி துணைபுரிய வல்லதாம். ஆனால் இமயவரம்பன் பால் அதுவும் செல்லாது. தான் சென்று முற்றியிருக்கும் பகை நாட்டரசர், தனக்கு ஒரு சிறு இடையூறு விளைக்கவும் இடம் தரமாட்டான். தனக்கு எதிராக அவர்கள் என்னென்ன சூழ்ச்சிகள் செய்ய இயலுமோ அவை அனைத்தையும், முன்கூட்டியே அறிந்து கெடுக்க வல்லவன், அவன் போர் முறை அத்துணை ஆழம் உடைத்து, ஆனால் வெற்றி கொள்ளவேண்டும் என்ற வேட்கையால், அறமல்லா வழிகளை மேற்கொண்டு விடுவனோ என்றால், அதுவும் இல்லை. நேரே காணும்போது கலந்து உறவாடுவார் போல் காட்சி நல்கிக், காணாவிடத்துக் கேடே நினையும் கெடு நெஞ்சுடைமையால் பகைவராகி விட்டவர் நாட்டிலும் அவர்களை வெற்றிகொள்ள பொய்கூறல் முதலாம் பிழை நெறிகளை மேற்கொள்ளான். அறத்தொடு பொருந்தா மறவாழ்க்கையை, அவன் மனம் கனவிலும் கருதா.து

அம்மட்டோ; பகைவர் தம் நடையின் பெருமிதம் கண்டே ஒடுங்கி நிலைகுலைந்து போகுமாறு நடந்து செல்ல வல்லனவும், பணியாது எதிர்த்தாரைக் காலின்கீழ்இட்டு அழிக்கவல்லனவும் ஒலிக்கும் மணியுடையவும், ஒழுகும் மதநீர் உடையவும்ஆகிய யானைப்படைகள் எல்லாம் அலறிப்புடைத்து ஓடுமாறு, அப் பகைவர் தம் பரந்து அகன்ற பெரிய நாட்டைவென்று கைப்பற்றவல்ல வீறுடையான். அவவெற்றி கண்டு புலவர்கள் களம்பாடிச் சூட்டிய புகழ்மாலையுடையான். வென்ற அக்களங்களில் பகைவர் விட்டோடிய கணக்கற்ற குதிரைகளையும் களிறுகளையும் தேர்களையும் தனக்கென ஆக்கிக் கொள்ளாது அவ்வளவையும் தன்னைப் பாடிவரும் வயிரியர் கூத்தர்போலும் இரவலர்க்கே கொடுத்துவிடும் குன்றாக் கொடைக்குணம் கொண்டவன்.

"பகைவர் தம் பெரும்படையின் ஆற்றலைஅழித்துப் புகழ் கொள்ளும் அவன், அப்பகைவர்களின் அழிக்கலாகா அரண்களைக் கண்டு அஞ்சிவிடுவனோ? அரிய காவற்காடு சூழ்ந்தது; ஆழ்ந்த அகழியைக் கொண்டது; நெடிது உயர்ந்த புறமதிலும் அழிக்கலாகா அகமதிலும் அமையப்பெற்றது; அம்புக் கட்டு முதலாம் அரிய பொறிப்படைகள் பொருத்தப் பெற்றது; அகன்ற இடங்கொண்டது என்ற செருக்கால் தன்னைப் பகைப்பவர் அரணைக் கண்டால், "இவ்வரணை அழித்து அகத்தே புகுந்து ஆங்கு அமர்ந்தபின் உணவு உண்பதல்லது, அதற்கு முன் உண்ணேன்." எனச் சூளுரைத்து அவ்வாறே செய்து முடிக்கும் செருவல்லவன் எம் சேரலாதன். இவ்வரண் உடையமையால் அன்றோ" இவர் எம்மைப் பகைத்தனர் என்ற எண்ணத்தால் மூளும் சினத்தீ அவ்வரணைக் கைப்பற்றிக் கொண்டதோடு அடங்கிவிடாது. அகநகர்க்குத் தீ முட்டி ஆங்கு எழும் புகை கண்டு அகம்மலர அவ்வகமலர்ச்சியால் அவன் மார்பு மலர்ந்த பின்னரே. அஃது அடங்கும் பகை கண்டு எழும் அவன் சினம், அத்துணைக் கொடிது.

"பகைவர்பால் அவ்வளவு கொடுமையுடையவனாகிய அக்கோமகன், புலவர் பாணர் பொருநர், கூத்தர் என்ற எம்போலும் இரவலர்கள்பால் பேரருள் சுரக்கும் பெருமானுமாவன் தன்பால் வந்து பரிசில் வேண்டி நிற்பேர்பால் அப்பரிவு பெறும் தகுதி இல்லை என்பதைக் கண்டும், அவரை வாளாப் போகவிடாது, அவர் விரும்பியதை வழங்கியே அனுப்பும் அருள் உள்ளம் உடையவன். அக்கொடைக் குணத்தில் சிறிதும் குறைபாடு செய்யான். உலகத்து உயிர்களை ஒப்ப வேண்டிய கடமையை ஏற்றுக் கொண்டிருப்பது மழை. அது அக்கடமையைக் கைவிட்டு உலகம் அழிந்து போக, பல ஆண்டு பெய்யாது பொய்த்து விடுவது

நிகழ்ந்தாலும் நிகழும். இமயவரம்பன் பரிசில் வேண்டிவந்தவரை வறிதே அனுப்புவது நிகழாது. மேலும் வழங்கும் நிலையிலும், வந்தவர் வயற்றில் பசித்தீ மீண்டும் மூளுமாறு குறையாகக் கொடுக்காது நிறையக் கொடுப்பன். ஆகவே, வாழ்க அவ்விழுமியோன், என்று வாழ்த்துகிறது எம்வாய். அவனை வாழ்த்தினால் மட்டும்போதாது அவ்வள்ளல்பெருந் தகையைப் பெற்றளித்த பெரியாளாகிய அவன் அன்னை வாழ்க! அவனைப் பத்துத் திங்கள் தாங்கியிருந்த அவள் வயிறு வாழ்க! வான்புகழ்பெற்று விளங்குக! என்று வாழ்த்தவும் வேண்டாவோ,'' என்ற ஒருபெரிய விரிவுரையே நிகழ்த்தி விட்டார் புலவர்.

புகை படிந்த பொருள் பொசுங்கிப்பாழவது இயல்பாகவும், பகைவர் ஊர் சுடுதீயால் எழுந்த புகை படிந்த இமயவரம்பன் மார்பு, அப்புகையால் பாழுற்றுப்போகாது மலரும்மாண்புகண்டு, அந்நயம்தோன்ற **அட்டு மலர் மார்பன்** என்ற தொடரை அமைத்திருக்கும் புலவரின் அறிவாற்றல் கண்டு, அப்பாட்டிற்கு அத்தொடரால் பெயர் சூட்டியுள்ளார் யாரோ ஒரு பெரியார்.

20. ''நுங்கோ யார், என வினவின் எங்கோ,
இரு முந்நீர்த் துருத்தியுள்,
முரணியோர்த் தலைச் சென்று
கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேரலாதன். வாழ்க அவன் கண்ணி!
வாய்ப்பு அறியலனே வெயில் 'துகள் அனைத்தும்
மாற்றோர் தேஎத்து மாறிய வினையே;
கண்ணின் உவந்து நெஞ்சு அவிழ்பு அறியா
ஒன்னார் தேஎத்தும் பொய்ப்பு அறியலனே; கனவிலும்
ஒன்னார் தேய ஓங்கி நடந்து

படியோர்த்தேய்த்து அடிமணி இரட்டும்
கடாசு யானைக் கணநிரை அலற
வியல் இரும்பரப்பின் மாநிலம் கடந்து
புலவர் ஏத்த ஓங்குபுகழ் நிறிஇ
விரிஉளை மாவும் களிறும் தேரும்
வயிரியர் கண்ணுளர்க்கு ஓம்பாது வீசிக்
கடிமிளைக் குண்டு கிடங்கின்
நெடுமதில் நிலை ஞாயில்,
அம்புடை ஆரெயில் உள் அழித்து உண்ட
அடாஅஅடுபுகை அட்டு மலர் மார்பன்
எமர்க்கும் பிறர்க்கும் யாவராயினும்,
பரிசில் மாக்கள் வல்லாராயினும்
கொடைக்கடன் அமர்ந்த கோடா நெஞ்சினன்
மன்உயிர் அழிய யாண்டு பல மாறித்
தண்ணியல் எழிலி தலையாது ஆயினும்,
வயிறு பசிகூர ஈயலன்,
வயிறு மாசு இலிஇயர் அவன் ஈன்ற தாயே!


**துறை : செந்துறைப் பாடாண் பாட்டு**
**வண்ணம் : ஒழுகுவண்ணம்**
**தூக்கு : செந்தூக்கு**
**பெயர் : அட்டு மலர் மார்பன்**

எங்கோ சேரலாதன் (1-5) வாழ்க கண்ணி (5) வினை (7) வாய்ப்பறியலன் (6) தேஎத்தும் (8) கனவினும் (10) பொய்ப்பு அறியலன்(9) கடந்து, நிறிஇ, வீசி உண்டமார்பன் (11-21) நெஞ்சினன் (22-24) ஈயலன் (25-27) ஈன்ற தாய் மாசுஇலிஇயர் (24) என வினைமுடிவு செய்க.

நுங்கோ யார் என வினவின்=உங்கள் அரசன் யார் என்று கேட்பீராயின், எங்கோ=எங்கள் அரசன், இரு முந்நீர்த் துருத்தியுள் பெரிய கடலிடையே உள்ள தீவில், முரணியோர்த் தலைச்சென்று=எதிர்த்த பகைவர்களாகிய கடம்பர் மீதுபோர்தொடுத்துச் சென்று. கடம்பு முதல் தடிந்த = அவர்காவல் மரமாம் கடம்பை வேரோடு வெட்டி வீழ்த்தி வென்ற, கடுஞ்சின முன்பின் - மிக்க சினமும் மெய்வன்மையும் உடைய. நெடுஞ்சேரலாதன் = இமயவரம்பன் நெடுஞ்-சேரலாதனாவன். அவன் கண்ணி வாழ்க = அவன் அணிந்திருக்கும் தலைமாலை வாழ்வதாக. மாற்றார் தேஎத்து= பகைவர் நாட்டில். மாறியவினை = தனக்கு எதிராக அப்பகைவர் எடுக்கும் சூழ்ச்சினையும் செயலும். வெயில் துகள் அனைத்தும் = வெயிலிடத்தே பரக்கும் மிகச்சிறிய அணுவளவும், வாய்ப்பு அறியலன் = பயன்பட வாய்ப்பு அளித்து அறியான். கண்ணின் உவந்து = கண்ணெதிரில் கண்டபோது விரும்புவார்போல் தோன்றி. நெஞ்சு அவிழ்பு அறியா = உள்ளத்தால் விரும்பாத, ஒண்ணார் தேஎத்தும் = உட்பகை கொண்டு ஒழுகுவாரிடத்தும், பொய்ப்பு கனவிலும் அறியலன்=பொய் கூறுதலைக் கனவிலும் செய்து அறியான். ஒன்னார் தேய=பகைவர் அஞ்சி அழியும்படி, ஓங்கி நடந்து= பெருமிதம் தோன்ற நடந்து. படியோர்தேய்த்து=பகைவரை அழித்து. வடிமணி இரட்டும் = தெளிந்த ஓசையினைச் செய்யும் மணிகள் மாறிமாறி ஒலிக்கும். கடாஅ யானைக் கணநிரை அலற = மதநீர் ஒழுகும் யானைக்கூட்டம் மலிந்த பகைவர் படை அலறுமாறு. வியல் இரும்பரம்பின் மாநிலம் கடந்து=அகன்ற பெரிய பரப்பினைக்கொண்ட பகைவரின் பெரிய நாடுகளை வென்று தனதாக்கிக் கொண்டு. புலவர் ஏத்த ஓங்கு புகழ் நிறீஇ=போர்க்களம் பாடும் புலவர்கள் புகழ்ந்து பாராட்டுமாறு பெரும்புகழை நிலைபெறப்பண்ணி வயிரியர் கண்ணுளர்க்கு=வயிரியர் கண்ணுளர்க்கு என்ற

இருவகைக் கூத்தர்க்கும். விரிஉளைமாவும் களிறும் தேரும்= களத்தில் கைப்பற்றிய விரிந்த தலையாட்டம் அணிந்த குதிரை களையும் யானைகளையும் தேர்களையும், ஒம்பாது வீசி = தனக்கென எதையும் வைத்துக்கொள்ளாது வாரிவழங்கி. கடிமினை = காவற்காடும், குண்டு கிடங்கின் = ஆழ்ந்த அகழியும், நெடுமதில் = உயர்ந்த புறமதிலும், நிலைஞாயில் =அழிக்கலாகா அகமதிலும், அம்புடை = அம்புக்கட்டு முதலாம் பொறிகள் பொருத்தப்பெற்ற. ஆர்எயில் = அரிய இடைமதிலும் உடைய, உள் அழித்து=அரணகத்து நகரை அழித்து,உண்ட= அதன் பின்னரே உணவினை உட்கொண்ட. அடாஅ அடுபுகை=உணவாக்கிய வழி எழும் புகை அல்லாது ஊரை அழிக்க இட்டதீயால் எழுந்த புகை. அட்டு மலர் மார்பன்=படிந்து விரிந்த மார்பினை உடையவன், பரிசில் மாக்கள் = பரிசில் பெற வருவார். யாவராயினும் = யாவரே யாயினும். வல்லாராயினும்=பரிசில் பெறவல்ல தகுதிப்பாடு அற்றவரேயாயினும் அவற்றை யெல்லால் பெருட்படுத்தாது. எமர்க்கும் = என்னுடைய சுற்றத்தார்க்கும். பிறர்க்கும் = பிறபரிசிலர்க்கும். கொடைக்கடன் அமர்ந்த = கொடை அளிப்பதாகிய கடமையை விரும்பி மேற்கொண்ட, கோடா நெஞ்சினன்=கொள்கையில் மாறாத நெஞ்சுடையவன். மண் உயிர் அழிய = உலகத்து உயிர்கள் அழிந்துபோகுமாறு. யாண்டு பலமாறி=பல ஆண்டுகள் தன் கடமையைக் கை-விட்டு, தண்இயல் எழிலி = உலகத்து உயிர்களின் உள்ளத்தைக் குறிளிப்பிக்கும் ஞானம் உடையதான மேகம். தலையாதாயினும்=மழை பெய்யாது பொய்த்து விடுமாயினும். வயிறு பசிகூர ஈயலன் = இமயவரம்பன் தன்னைப்பாடி வருவார் வயிறு பசித்துன்பத்தால் வருந்துமாறு குறையாகக் கொடுப்பானல்லன், பசிதீர வாரி வழங்குவன். ஆகவே அவன் ஈன்ற தாய் = அவனைப்பெற்றதாய். வயிறு மாசு இலிஇயர் = வயிறு குற்றம் இன்றி சிறந்து விளங்குவாளாக.

நுங்கோ யார் என வினவின் எனக் கேட்டுப், பாட்டுடைத்தலைவன் பெருமை பாராட்டும் குமட்டூர்க் கண்ணனாரின் இம்முறை ''நுங்கோ யார் என வினவின்'' எனக்கேட்டு நண்பன் கோப்பெரும் சோழரின் பெருமை பாராட்டும் புலவர் பிசிராந்தையாரின் புறநானூற்றுப் பாட்டை (212) நினைவூட்டல் அறிக.



கமலம் பிரஸ், காஞ்சிபுரம்,